பக்கங்கள்: பதினாறு

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 ஆடி 22 வெள்ளிக்கிழமை (07.08.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 254

# இலங்கை அரசின் கட்டுப்பாடுகளை ஏற்க செஞ்சிலுவைக் குழு மறுப்பு

## இருதரப்பு முறுகல் முற்றுகிறது

கொழும்பு, ஓகஸ்ட் 07

இலங்கையில் எங்கு, எவ்வாறு பணியாற்றுவது என்பது தொடர்பாக, அரசு விதிக்கும் கட்டுப்பாடுகளை ஏற்றுக்கொள்ள முடியாது என்று செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அறிவித்திருக்கின்றது.

இதன் காரணமாக இலங்கை அரசுக்கும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவுக்கும் இடையில் முறுகல் நிலை முற்றுகின்றது என்று தகவல்கள் வெளியாகியிருக்கின்றன. (16 ஆம் பக்கம் பார்க்க)

## கே.பி. கைது?

பாங்கொக், ஒக.7

விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவரென அண்மையில் அறிவிக்கப்பட்டிருந்த குமரன் பத்மநாதன் (கே.பி.) தாய்லாந்தின் பாங்கொங்கில் கைது செய்யப்பட்டார் என இணையத்தளங்கள் நேற்று செய்தி வெளியிட்டன.

இதற்கிடையில் இவர் மலேசியாவில் காணாமல் போயிருந்தார் என்று வேறு தகவல்கள் தெரிவித்தன.

## மோசடிகள் இடம்பெற்றால் தேர்தல் முடிவுகள் வெளிவரா

### தேர்தல் செயலகம் அறிவிப்பு

கொழும்பு, ஒக. 07

ஏதாவதொரு வாக்குச் சாவடியில் மோசடிகள், குளறுபடிகள் இடம்பெற்றன என நிரூபிக்கப்படுமாயின் அவ்வாக்குச் சாவடி வாக்குகள் கணக்கெடுக்கப்படுவதிலிருந்து நீக்கப்படுவதுடன், தேர்தலின் இறுதி முடிவு அறிவிக்கப்படுவதும் நிறுத்தப்படும். தேர்தல் செயலகம் நேற்று இதனை அறிவித்துள்ளது.

இவ்வாறு ரத்து செய்யப்படும் வாக்குச் சாவடிக்கு மீண்டும் தேர்தல் நடத்தப்பட்டு (16 ஆம் பக்கம் பார்க்க)

## பன்றிக் காய்ச்சலால் பீடிக்கப்பட்ட இலங்கையர் ஒருவர் சவூதியில் பலி

32 வயதான இலங்கையர் ஒருவரும், 15 வயதான சவூதி சிறுவன் ஒருவனும் பன்றிக் காய்ச்சல் நோயால் அண்மையில் சவூதியில் உயிரிழந்துள்ளனர்.

சவூதி அரேபியாவில் பன்றிக் காய்ச்சல் நோயினால் இதுவரையில் 600 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

உம்றா யாத்திரைக் காலம் ஆரம்பமாகவுள்ள நிலையில் பன்றிக் காய்ச்சல் நோயாளிகளின் எண்ணிக்கை மேலும் உயர்வடையக் கூடுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

## வவுனியா, மன்னாருக்கு லொறிகள் மதவாச்சி ஊடாகச் செல்ல அனுமதி

கொழும்பு, ஒக. 07

தம்புள்ள, கொழும்பு மற்றும் தென் பகுதிகளில் இருந்து ஏ - 9 வீதி ஊடாக வவுனியாவுக்கும் மன்னாருக்கும் செல்லும் லொறிகள் கடந்த புதன்கிழமை தொடக்கம் மதவாச்சி சோதனைச்சாவடி ஊடாகக் கடந்து செல்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளன என வாகனச் சாரதிகள் தெரிவிக்கின்றனர்.

வவுனியாவுக்கும், மன்னாருக்கும் மரக்கறி மற்றும் அத்தியாவசிய பொருள்கள், விற்பனைக்குரிய பொருள்கள் என்பனவற்றை ஏற்றிச் செல்லும் லொறிகளுக்கே இவ்வாறு பிரயாண அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக மதவாச்சி சோதனைச் சாவடியுடன் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மதவாச்சியில் லொறிகளில் இருந்து பொருள்களை இறக்கி சோதனையிட்டு, பின்னர் ஏற்றும் நடவடிக்கையும் நிறுத்தப்பட்டுள்ளது. சோதனை எதுவுமின்றி வாகனப் பதிவுகளை மட்டும் பார்வையிட்டு வவுனியா, மன்னார் பகுதிகளுக்குச் செல்வதற்கு லொறிகள் இப்போது அனுமதிக்கப்படுகின்றன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (16 ஆம் பக்கம் பார்க்க)

## அவசரகாலச் சட்டம் மேலும் ஒரு மாதம் நீடிப்பு

கொழும்பு, ஒக. 7

அவசர காலச் சட்டத்தை நாட்டில் மேலும் ஒரு மாதகாலத்துக்கு நீடிக்கும் பிரேரணை 64 மேலதிக வாக்குகளால் நேற்று நாடாளுமன்றத்தில் நிறைவேறியது.

இந்தப் பிரேரணைக்கு ஆதரவாக 71 வாக்குகளும் எதிராக 7 வாக்குகளும் கிடைத்தன. மக்கள் விடுதலை முன்னணி பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தது. தமிழ்க் கூட்டமைப்பு எதிர்த்து வாக்களித்தது. வாக்களிப்பின் போது ஐக்கிய தேசியக்கட்சி சபையில் இருக்கவில்லை. (சி)

**கல்விச்சுடர் உள்ளே**

(I) தரம் 4 புலமைப்பரீட்சைக்கான வினாத்தாள்

(II) ஜி.சி.ஈ. உயர்தர பரீட்சை வினாத்தாள்

## நீர்கொழும்பிலிருந்து படகுகள் மூலம் நியூஸி. செல்ல முயன்ற 32 பேர் கைது

கொழும்பு, ஒக. 07

நீர்கொழும்பு பிரதேசத்திலிருந்து சட்டவிரோதமான முறையில் படகு மூலம் நியூசிலாந்து செல்ல முற்பட்ட 32 பேரை பொலிஸார் நேற்றுமுன்தினம் இரவு கைது செய்துள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரஞ்சித் குணசேகர தெரிவித்தார்.

குறித்த பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போதே இவர்களைக் கைதுசெய்துள்ளனர் என. (16 ஆம் பக்கம் பார்க்க)

## தரம் 5 புலமைப் பரிசில் கருத்தரங்கில் அரசு சார்புத் தேர்தல் பிரசாரம்- ஊவாவில்

கொழும்பு, ஒக. 7

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை தொடர்பாக அண்மையில் தியத்தலாவையில் கருத்தரங்கொன்று நடத்தப்பட்டபோது அங்கு வழங்கப்பட்ட 'பைல்'களில் வெற்றிலைச்சின்னத்துக்கும் 24 ஆம் இலக்கத்துக்கும் நேரே புள்ளியிடுமாறு எழுதப்பட்டிருந்தது. இது குறித்து நாடாளுமன்றில் ஜே.வி.பி. தரப்பில் குற்றஞ்சாட்டப்பட்டது.

ஊவா மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் கல்வியையும் அரசியலாக மாற்றிவிட்டனர் என்று அக்கட்சி கூறியது.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல்கள் குறித்து செய்தி சேகரிக்க ஊடகவியலாளர்களுக்கு ஏன் தடை?

### எல்லைகளற்ற செய்தியாளர் அமைப்புக் கண்டனம்

கொழும்பு, ஒக.7

யாழ்ப்பாணம் மற்றும் வவுனியாவில் நடைபெறவுள்ள தேர்தல்கள் குறித்து செய்தி சேகரிப்பதற்கு செய்தியாளர்களுக்கு அனுமதி வழங்குவதில்லை என்ற அரசின் முடிவைக் கடுமையாகக் கண்டித்துள்ள எல்லைகளற்ற செய்தியாளர் அமைப்பு, இதன் மூலம் வெளிப்படையான தேர்தல்கள் குறித்த நம்பிக்கைகள் தகர்க்கப்பட்டுள்ளன எனவும் குறிப்பிட்டுள்ளது.

இதுகுறித்து அந்த அமைப்பு மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்ட பின்னர் முதல் தடவையாக வவுனியா மற்றும் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தல்கள் குறித்து செய்தி சேகரிப்பதற்கு பத்திரிகையாளர்களுக்கு (16 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.கட்சியின் புதிய எம்.பி. பதவியேற்பு

ஐக்கிய தேசியக் கட்சியின் காலி மாவட்ட காலஞ்சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் சரத் ரணவக்கவின் வெற்றிடத்துக்கு நியமிக்கப்பட்ட லக்ஷ்மன் விஜயமான்ன நேற்று எம்.பியாகச் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

நேற்றுக்காலை 9.30 மணிக்கு சபாநாயகர் டபிள்யூ. ஜே.எம். லொக்குபண்டார (16 ஆம் பக்கம் பார்க்க)

UNI LANKA DISTRIBUTORS (PVT) LTD நிறுவனத் தயாரிப்பான PENTEC பேனாக்களின் யாழ்.மாவட்ட முகவராக நாம் நியமிக்கப்பட்டுள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.

எம்மிடம் PENTEC நிறுவனத் தயாரிப்புக்களான Sporty, Bunty, Jolly, Marker, Highlighter போன்றவற்றை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

ஸ்ரீகரன் புக் சென்ரர், 73, கே.கே.எஸ் வீதி, ஸ்ரேசன் றோட், சுன்னாகம் T.P : 0777253037

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.கொழும்புத்துறை இந்துக்கல்லூரிக்கான மின்சார விநியோகத்தை சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆரம்பித்து வைத்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை மேற்படி கல்லூரிக்கான விஜயமொன்றை மேற்கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கல்லூரிக்கான மின்சார விநியோகத்தை ஆரம்பித்து வைத்ததுடன் அங்கு இடம்பெற்ற அமைச்சருக்கான நன்றி பாராட்டு வைபவத்திலும் கலந்து கொண்டார். இம்மின் விநியோகத்திற்கென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் இரண்டு லட்சம் ரூபா நிதியை ஏற்கனவே வழங்கியிருந்தார். (1)

# இந்திய, சிங்கள மீனவர்கள் அத்துமீறுவதை தடுத்து நிறுத்துமாறு அமைச்சர் டக்ளஸிடம் கோரிக்கை

## வடமராட்சி கடற்றொழிலாளர் சங்கச் சந்திப்பில்

யாழ்ப்பாணம், ஓக.07

தென்னிலங்கை மற்றும் இந்திய மீனவர்கள் தமது கடற்பரப்புக்குள் ஊடுருவி வளங்களை சூறையாடிச் செல்வதை தடுத்து நிறுத்த உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

வடமராட்சி கடற்றொழிலாளர்கள் மேற்கண்ட கோரிக்கையை சமூக சேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் விடுத்துள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை வடமராட்சிக்கு விஜயம் மேற்கொண்டபோதே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டது.

வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாச உறுப்பினர்களும் கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகளும் தாங்கள் முகங்கொடுத்து வருகின்ற பல்வேறு பிரச்சினைகள் மற்றும் தொழில் ரீதியலான சிரமங்கள் போன்ற விடயங்கள் தொடர்பில் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து கலந்துரையாடினர்.

இச்சந்திப்பில் கலந்துகொண்ட சுப்பர்மடம், தொண்டைமனாறு மற்றும் கொத்தியாலாடி கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள் தாங்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் தொடர்பில் அமைச்சரிடம் எடுத்துக் கூறினர். தென்னிலங்கை மற்றும் இந்திய மீனவர்கள் தங்களுக்குரிய கடற்பரப்பில் அத்துமீறி தொழில்புரிந்து இப்பகுதிக்குரிய கடல் வளங்களை சூறையாடிச் செல்வதை தடுத்து நிறுத்த உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் தூர்ந்து போயுள்ள வான் பாதைகளை துப்புரவு செய்து மீளமைத்துத் தரும்படியும் கேட்டுக்கொண்டனர்.

மேற்படி கடற்றொழிலாளர்களின் உற்பத்திகளை தென் பகுதியில் சந்தைப் படுத்துவது மற்றும் குளிரூட்டி வசதிகளை ஏற்படுத்துவது போன்ற விடயங்கள் தொடர்பில் இங்கு ஆராயப்பட்டதுடன் தொண்டைமானாறு கடற்கரைப் பகுதிகளில் வாழும் மக்களுக்கான மின்சார மற்றும் குடிதண்ணீர் தேவைகள் தொடர்பிலும் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

மேற்படி சந்திப்பின் போது, முதற்கட்டமாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் ஒரு தொகுதி வலைகள் கடற்றொழிலாளர்களுக் கையளிக் கப்பட்டதுடன் கெருடாவில் காட்டுக்குளம் பகுதியில் கடற்தொழிலில் ஈடுபடுவது தொடர்பில் விரைவில் நடவடிக்கை எடுப்பதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

### தென்மராட்சியில் சாரணியப் பயிற்சி

தென்மராட்சி பாடசாலைகளிலுள்ள சாரணக் குழுக்களினது அணித்தலைவர்களுக்கான பயிற்சி எதிர்வரும் 12ஆம், 13ஆம் திகதிகளில் கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலயத்தில் நடைபெறும்.

குருளைச் சாரணர் அறுவர் பயிற்சி 13ஆம் திகதி மட்டும் நடைபெறும். உபகரணங்களுடன் [illegible] ஆணையாளர் [illegible]தராசா கேட்டுள்ளார்.


## எழுதுநர் பதவி வெற்றிடம்

சுன்னாகம் சபாபதிப்பிள்ளை வீதியில் அமைந்துள்ள விழிப்புல வலுவிலந்தோர் வாழ்வகத்தில் எழுதுநர் பதவிக்கான வெற்றிடம் ஒன்று உள்ளது.

நற்பண்பும் சேவை மனப்பான்மையும் உடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

விண்ணப்பதாரி க.பொ.த. உயர்தர வர்த்தகப் பிரிவில் பயின்றிருக்க வேண்டும்.

குறைந்தபட்ச தகைமையாக கணக்கியல் உட்பட க.பொ.த. உயர் தரத்தில் இரண்டு பாடங்களேனும் சித்திபெற்றிருக்க வேண்டும்.

ஓரளவு கணனி அறிவு இருப்பின் விரும்பத்தக்கது.

குறிப்பு: வாழ்வக இல்லத்தில் தங்கியிருந்து பணியாற்ற விரும்பும் பெண்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

சுயவிவரங்களுடன் விண்ணப்பங்கள் யாவும் எதிர்வரும் 15.08.2009க்கு பிந்தாமல் தலைவர், வாழ்வகம், சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னா கம் என்னும் விலாசத் துக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

தலைவர்,
வாழ்வகம்.



## பாராட்டி வாழ்த்துகிறோம்

எமது நிறுவன உரிமையாளரும் மாநகர சபை வேட்பாளருமான திரு. இராஜதுரை இரத்தினேஸ்வரன் அவர்கள் கௌரவ பசில் ராஜ பக்ஷவுடனான சந்திப்பின் போது கேட்டுக் கொண்டதற்கு இணங்க முகாம்களில் தங்க வைக்கப்பட்டிருக்கும் எமது உறவுகளில் ஒரு பகுதியினரை விடுவித்து அவர்களின் மறுவாழ்வுக்கு வழி வகுத்தார். எமது அன்புக்கும் மதிப்புக்கும் உரிய கௌரவ பசில் ராஜபக்ஷ அவர்களிற்கு பிள்ளையார் ஸ்ரோர்ஸ் மற்றும் ஹோட்டல் பிள்ளையார் இன் தொழிலாளர்களின் சார்பில் எமது மனமார்ந்த நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.



திரு. இராஜதுரை இரத்தினேஸ்வரன் தொடர்ந்தும் இம்முயற்சியில் வெற்றிபெற்று நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ள எமது மிகுதி உறவுகளும் புதுவாழ்வு பெற வழிவகுக்க வேண்டும் என தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

பிள்ளையார் ஸ்ரோர்ஸ்,
ஹோட்டல் பிள்ளையார் இன்,
தொழிலாளர்கள், [illegible]

(87667)


# மனித உரிமைகள் தொடர்பாக இன்று படையினர், பொலிஸாருக்கு செயலமர்வு

யாழ்ப்பாணம், ஓக. 7

மனித உரிமைகள் தொடர்பாக படையினர், பொலிஸார், சிறைச்சாலை அலுவ லர்கள் ஆகியோருக்கு விளக்கமளிக்கும் செயலமர்வு இன்று காலை 9 மணிக்கு யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

இலங்கை தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவின் செயலாளர் திருமதி சந்திரா எல்லாவல, பணிப்பாளர், திருமதி துசித்தா சமரசேகரா, மேலதிக செயலாளர் நிமல் புஞ்சிஹேவ ஆகியோர் இந்தச் செய லமர்வில் கலந்துகொள்வர்.

யாழ்ப்பாணம் வந்துள்ள அவர்கள் மனித உரிமை விவகாரங்கள் தொடர்பாக பலதரப்பட்டவர்களையும் சந்தித்து கலந்துரையாடி வருகின்றனர். (1)

# கூட்டணி வேட்பாளர் ஈ.பி.டி.பியில் இணைந்தார்

யாழ்ப்பாணம், ஓக.07

யாழ். மாநகர சபைத் தேர்தலில் போட்டியிடும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் வேட்பாளரான ஜெயபாலன் ஜெசிந்தன் ஈ.பி.டி.பி கட்சியில் இணைந்துள்ளார்.

யாழ். பல்கலைக்கழகத்துக்கு சமூகசேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவனந்தா கடந்த செவ்வாய்க் கிழமை விஜயம் செய்தபோது, பல்கலைக்கழக மாணவனான இவர் ஈ.பி.டி.பியில் இணைந்து செயற்படவிருப்பதாக அறிவித்தார். (1)


கண்ணகி துணை

## கோப்பாய் பலானை கண்ணகை அம்மன் கோவில் பூங்காவனத்திருவிழா

இன்று (07.08.2009) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அபிஷேகம் ஆரம்பம். 12 மணிக்கு சிறப்பு பூஜை பகல் 1மணிக்கு சிறப்பு நாதஸ்வர தவில் நிகழ்வுகள் சிறப்பு மேடையில் இடம்பெறும்.

| | |
|---|---|
| லோகநாதன் குழுவினர் | - இருபாலை |
| இ.சிவகுமார் நாதஸ்வரம், குழுவினர் | - சுழிபுரம் |
| இசை நாததென்றல் L.S ஜெகநாதன் | - உடுப்பிட்டி |
| இசையருவி பஞ்சமூர்த்தி, குமரன் குழுவினர் | - கோண்டாவில் |
| S. விஜயகுமார் / S. சதீஸ்குமார் } தவில் இளவரசர்கள் | -பருத்தித்துறை |

★ ஒளியமைப்பு - மனோலைட் கோப்பாய் வடக்கு

வெளிவீதி உலா :- சிறப்பு பூத்தண்டிகையில் பிற்பகல் 5.00 மணிக்கு இடம்பெறும்.

பிருந்தா வனமெனும் பூங்கொல்லையில் அமர்ந்து
வருந்தி வருபவருக்கு அருள்புரியும் எம் தாயே!
மருந்தாக மலர்கின்ற பூமுகம் காணவந்து
அருந்தாமல் அருள் வேண்டியவர்க்கெல்லாம்
பெருந்தனம் பொலிய வழங்கிடும் கண்ணகைத்தாயே
நறும் பூந்தண்டிகையில் கோவை மண்ணில் நீ நடந்து
வருமழகைக் காணக்கண்கள் ஏங்குதம்மா என்தாயே
வாரும் வண்ணமலர் பூந்தண்டிகையில் ஏறி நாம் காணவே.

கோவையூர் கவி
(கலை இலக்கியன்)

கோப்பாய் பலானை கண்ணகை அம்மன் கோவில், ஆலய பரிபாலன சபையினரும், உபயகாரரும் (S.கந்தசாமி உறவினர்கள்).


# மரண அறிவித்தல்கள்

## இராசையா பாலசிங்கம்



ஏழாலை மத்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா பாலசிங்கம் நேற்று(06.08.2009) வியாழக் கிழமை காலமானார்.

அன்னார் நடேஸ்வரியின் அன்புக் கணவரும் ஜெகாஸ், பிரகாஸ், ஜனா ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற சந்திரசேகரம் மற்றும் குணசேகரம், லலிதாராணி, இந்திராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சீவரத்தினம், இராமசாமி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(07.08.2009) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக ஏழாலை உசத்தியோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:குடும்பத்தினர்.

## திருமதி திரேஸ்மலர் கனகேஸ்வரி செல்வராஜா (மலர் அக்கா)



கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் 517, மானிப்பாய் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி திரேஸ்மலர் கனகேஸ்வரி செல்வராஜா நேற்று (06.08.2009) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான யோசப்- மீனாச்சி தம்பதியரின் மகளும், ரங்கராஜாவின் மருமகளும் T.D.செல்வராஜாவின் அன்பு மனைவியும் சாந்திரட்ணம் (கலாலயா ஆசிரியை), றொபின்சன் (குவைத்), ரவீந்திரன் (கொழும்பு), சுபாஸ்கரன் (ஆயுள் வேத வைத்தியசாலை கைதடி), சுரேஸ்கரன் (கொழும்பு), நளாயினி செல்வராஜா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாருமாவர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.08.2009) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3மணிக்கு நடைபெற்று, பூதவுடல் கொட்டடி மெதடிஸ் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
T.D.செல்வராஜா
(கணவர்).

517, மானிப்பாய் வீதி,
மானிப்பாய்.

(87667)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# ஊழல் போக்கை நீக்குவதற்கு அடிப்படை மாற்றம் அவசியம்

ஊழல், மோசடி அற்ற அபிவிருத்தி நடவடிக்கைகள் மூலமாக மட்டுமே சமாதானத்தை வென்றெடுக்க முடியும் என்று 'டிரான்ஸ்பரன்ஸி இன்ரர்நஷனல் ஸ்ரீலங்கா' என்ற வெளிப்படையான செயற்பாடுகளை வலியுறுத்துவதற்கான இலங்கை அமைப்பு சுட்டிக்காட்டியிருக்கின்றது.

இலங்கையில் அமைதி, சமாதானம் என்பன குழம்பி, நாடு பெரும் பிணக்கு நிலைக்குள் சிக்குண்டமைக்கான பிரதான காரணம், பொதுவிடயங்களில் காலங்காலமாகக் காட்டப்பட்டு வந்த பாகுபாடு - பாரபட்சம் - ஆகும்.

ஒரு தளத்தில் அது இனரீதியாக முன்னெடுக்கப்பட்டு முனைப்புப் பெற்றது. பேரினவாதப் போக்குடைய ஆட்சித் தரப்பினால் ஓரவஞ்சகத்துக்கு உட்படுத்தப்பட்ட சிறுபான்மை இன மக்கள், அந்தப் பாகுபாட்டுக்கும், பாரபட்சத்துக்கும், அதற்கு வழி செய்த அடக்குமுறைக்கும் எதிராகக் கிளர்ந்தெழுந்தபோது நாடு பெரும் களேபரத்துக்குள் சிக்கியது.

அத்தகைய கிளர்ச்சியை - அல்லது எழுச்சியை - யுத்த முனையில் அடியோடு நசுக்கிவிட்ட பெருமிதத்தில் ஆட்சித் தரப்பு இன்று துள்ளிக் குதித்து மார்தட்டுகின்றது.

ஆனால் இப்பிரச்சினை இத்துணை மூர்க்கம் பெறுவதற்கு அடிப்படையாக அமைந்த இனப் பாகுபாடும், பாரபட்சமும், ஓரவஞ்சனையும் அகற்றப்பட்டனவா என்றால் இல்லை என்றுதான் கூறவேண்டும்.

இந்தப் பாகுபாட்டுப் போக்கைத் தொடர்ந்து செயற்படுத்துவதற்காகவோ -

அல்லது அந்தப் பாகுபாட்டுப் போக்குக்கு எதிரான கிளர்ச்சியை அடக்கி, ஒடுக்குகிறோம் என்ற நோக்கத்தின் பெயரில் முன்வைக்கப்பட்ட திட்டங்களின் அடிப்படையிலோ -

ஆளும் தரப்பினால் கையில் எடுக்கப்பட்ட எல்லை மீறிய அதிகாரங்கள், ஒருபுறம் அதற்கான இலக்கை அடைந்தனவோ இல்லையோ மறுபுறத்தில் பெரும் ஊழல்கள், மோசடிகள், குளறுபடிகள் போன்றவற்றுக்கு வழி செய்து நிற்கின்றன என்பது கண்கூடு. அத்தகைய ஊழல், மோசடிகள் போன்றவற்றை அம்பலப்படுத்த எடுக்கப்படும் முயற்சிகளை வெற்றிகரமாக முறியடித்து, அது சம்பந்தமான உண்மைகளை ஒரேயடியாக மூடி மறைக்கவும் அத்தகைய அதிகாரங்கள் வழிசெய்து நிற்கின்றன என்பதும் அடுத்த விடயமாகும்.

இத்தகைய ஊழல், மோசடிப் போக்குத் தொடரும் வரை நீதி,நியாயம் நிலைநாட்டப்படப் போவதில்லை. அத்தகைய நீதி, நியாயம் நிலைநிறுத்தப்படாத சமுதாயத்தில் நிரந்தர சமாதானமும் அமைதியும் நின்று, நிலைத்து, நீடிக்கப் போவதில்லை என்பதையே 'டிரான்ஸ்பரன்ஸி இன்ரர்நஷனல்' சுட்டிக்காட்டுகின்றது.

'ஊழல்கள் அற்ற அபிவிருத்தித் திட்டங்களே அடிமட்ட மக்களைச் சென்றடையும். ஊழல்கள் அற்ற முறையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் மீள்கட்டுமானப் பணிகள் முன்னெடுக்கப்படவேண்டும். வெளிப்படையான நடவடிக்கைத் திட்டங்கள் மூலமே இதனைச் செய் யமுடியும்.' - என்றும் அந்த அமைப்பு சுட்டிக்காட்டியிருக்கின்றது.

இத்தகைய அபிவிருத்தித் திட்டங்கள் ஊழல்களின்றி - ஒளிவுமறைவுகளின்றி - வெளிப்படையாக - முன்னெடுக்கப்பட வேண்டுமானால் மேற்படி அமைப்பு வலியுறுத்துகின்றமை போன்று அத்தகைய செயற்பாடுகளில் மக்களின் நேரடிப் பங்களிப்பும் பங்குபற்றலும் முனைப்புப் பெற வேண்டும் என்ற யதார்த்தமும் புரிந்து கொள்ளப்படக்கூடியதே.

ஆனால் அதற்கு ஆட்சித் தரப்பு - அதிகாரக் கரங்கள் - இடமளிக்க மறுக்கின்றன என்ற குற்றச்சாட்டு வெளிப்படையாகவே முன்வைக்கப்படுகின்றது.

வடக்கு, கிழக்குக்கான உத்தேச அபிவிருத்தி நடவடிக்கைகளில் மக்கள் பங்களிப்பு முனைப்புப் பெற வேண்டுமானால் முதலில் அதில் மக்கள் பிரதிநிதிகளின் பங்களிப்பு மேம்படுத்தப்பட வேண்டும்.

ஆனால் வடக்கு, கிழக்கில் அதிகளவில் மக்கள் பிரதிநிதித்துவத்தைக் கொண்டிருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஐக்கிய தேசியக் கட்சி போன்றவற்றை இத்தகைய உத்தேசத் திட்டங்களுக்குக் கிட்டவே நெருங்கவிடாது நெட்டி உதைத்து - உதாசீனப்படுத்தி - தீண்டத்தகாதவர்களாக - புறம்தள்ளி வைத்திருக்கின்றது அதிகாரபீடம். இவ்வாறு மக்கள்பிரதிநிதிகளையே ஒதுக்கி, நிராகரித்து, விலத்தி ஆளும் தரப்பு நடக்கும் போது அச்செயற்பாடுகளில் மக்கள் பங்களிப்பு முனைப்புப் பெறும் என்றோ அல்லது ஊழல்கள் அற்ற அபிவிருத்தி நடவடிக்கைகள், மேம்பாட்டுத் திட்டங்கள் என்பன முன்னெடுக்கப்படும் என்றோ எதிர்பார்ப்பது அபத்தமானதாகும்; சுத்த முட்டாள்தனமாகும்.

'மக்களுக்கான அபிவிருத்தித் திட்டங்கள்' என்ற பெயரில் தாம் முன்னெடுக்கும் நடவடிக்கைகளுக்குள் பொதிந்து கிடக்கும் தமது 'கைவரிசையை'மூடி மறைப்பதற்காகவே, இவ்விடயங்களில் மக்கள் பிரதிநிதித்துவத்தைப் புறம்விலத்தி, தூரத்தள்ளி வைத்து வருகின்றது அதிகார வர்க்கம். வெளிப்படையான செயற்பாடுகள் மூலம் ஊழலற்ற போக்கை இத் தேசத்தில் நிரூபிக்க முடியும் எனப் பொதுமக்களோ அல்லது 'டிரான்ஸ்பரன்ஸி இன்ரர்நஷனல்' போன்ற அமைப்புகளோ கருதுமானால் அத்தரப்பினர் கடைசியில் ஏமாற்றத்தைத்தான் சந்திக்க வேண்டி நேரும் என்பது நிச்சயம்.

உயர் அதிகார வர்க்கத்தின் குறுகிய வட்டத்துக்குள், ஒளிவு - மறைவாக எல்லாத் திட்டங்களும், முடிவுகளும் முன்னெடுக்கப்படுவதால், இலங்கைத் தீவில் இத்தகைய விடயங்களில் வெளிப்படையான தன்மையோ, செலவுத்தானங்களுக்குப் பொறுப்புக்கூறும் உயர் பண்பியல்போ சாத்தியமாகப் போவதில்லை என்பது தெளிவு.

# அகதிகளை விடுவிப்பது தொடர்பான அரசின் கருத்தை நீதிமன்றுக்கு தெரிவிக்க 31 ஆம் திகதி வரை அவகாசம்

கொழும்பு, ஓக. 07

வன்னி இடம்பெயர்ந்தோர் முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பாடசாலை அதிபரான பெண்மணி, அவரது ஒரு வயது மற்றும் ஐந்து வயது உடைய இரு மகள்மார், அவரது நோயாளிக் கணவர் ஆகியோர்ரை விடுவிக்குமாறு உத்தரவிடக்கோரி, மேற்படி பெண்ணின் வயோதிபத் தந்தையார் தாக்கல் செய்திருந்த அடிப்படை உரிமை மீறல் மனுவை நேற்றுக் கவனத்தில் எடுத்த உயர்நீதிமன்றம், அந்தக் குடும்பத்தை விடுவிப்பது தொடர்பாக அரசுத் தரப்பின் கருத்தைக் கேட்டறிந்து தெரிவிப்பதற்கு ஓகஸ்ட் 31 ஆம் திகதி வரை சட்டமா அதிபருக்கு கால அவகாசம் வழங்கியது.

நாச்சிக்குடா அரச தமிழ்க் கலவன் பாடசாலையின் அதிபராக இருந்த நிர்மலரஜ் இராஜேந்தினி, அவரது நோயாளிக் கணவரான ஜேசுதாஸ் நிர்மலராஜ், அவர்களின் பிள்ளைகளான ஜேசுதாஸ் நிரஞ்சினி, ஜேசுதாஸ் புகழினி ஆகியோர் தொடர்பாக இந்த அடிப்படை உரிமை மீறல் மனுவை கணபதிப்பிள்ளை ஏகாம்பரம் என்பவர் தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனு நேற்று உயர்நீதிமன்றத்தில் பிரதம நீதியரசர் அசோக என்.சில்வா, நீதியரசர்கள் சலீம் மர்சூக், எஸ்.ஐ.இமாம் ஆகியோர் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

இவ்வாறு நோயாளிகளையும் அவர்களின் குடும்பத்தவர்களையும் கூட அரசு தடுத்து வைத்திருக்கின்றமை குறித்து விசனம் தெரிவித்த நீதியரசர்கள், சம்பந்தப்பட்டோருக்கு வழங்கப்படவேண்டிய அவசர - அவசிய - மருத்துவ சிகிச்சைகளைக் கருத்தில் எடுத்து அவர்களை விடுவிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என அரசுத் தரப்பில் ஆஜரான பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் சஞ்சீவ ராஜரத்தினத்திடம் கேள்வி எழுப்பினார்.

இது குறித்து சம்பந்தப்பட்டோருடன் கலந்துரையாடி முடிவைத் தெரிவிப்பதற்கு பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் கால அவகாசம் கோரினார். அதை ஏற்றுக்கொண்ட நீதிமன்றம் ஓகஸ்ட் 31 ஆம் திகதி வரை அதற்குக் கால அவகாசம் வழங்கி வழக்கை ஒத்திவைத்தது.

மனுதாரர் தரப்பில் சட்டத்தரணி பி.என்.தம்பு ஆஜரானார். (சி)

# ஆலய வளாகத்தில் மட்டும் ஓசை வரக்கூடியவாறு ஒலி பெருக்கிப் பாவனை இடம்பெற வேண்டும்

## அதனை மீறுவோர் மீது நடவடிக்கை எடுக்கப்படும்

யாழ்ப்பாணம், ஓக 7

ஆலய வளவினுள் மட்டும் ஓசை வரக்கூடிய அளவுக்கு மட்டுமே ஒலி பெருக்கி பாவனை இடம்பெற வேண்டும். இச் செயலை மீறும் ஆலயங்கள் மீது உடன் நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு வலி. தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் ம. ஜெகூ தெரிவித்தார்.

வலி. தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட இந்து ஆலயங்களுக்கான அபிவிருத்திக் கூட்டம் அண்மையில் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

இக்கூட்டித்தில் பிரதேச செயலாளர் ம. ஜெகூ உரையாற்றுகையில் மேலும் தெரிவித்தவை வருமாறு:

80 வீதமான ஆலயங்கள் முறையான கட்டுக்கோப்புடன் செயற்படுகின்றன. பொதுமக்கள், பாடசாலைகள், பொது நிறுவனங்கள் ஆகியவற்றின் செயற்பாட்டைப் பாதிக்கும் ஒலி பெருக்கிப் பாவனை நிறுத்தப்பட வேண்டும்.இதனை மீறிசெயற்படும் ஆலயங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

அனைத்து ஆலய நிர்வாகிகளும் ஆலயங்களில் உறுதி, அசையும் சொத்து, மாதிரி வரைபடம், வரலாறு என்பனவற்றை தொகுத்து அனுப்ப வேண்டும். அது தொடர்பான விண்ணப்பம் விரைவில் ஆலய தலைவர்களுக்கு அவர்களின் விலாசங்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

ஆலய நிர்வாகிகள், தலைவர்கள் சமூகத்தில் உயர்ந்த இடத்தில் வைத்தே மதிக்கப்படுகின்றனர். அந்த வகையில் புனிதத் தன்மை யைப் பாதுகாத்து செயற்பட வேண்டும்.

ஆலய தலைவர்கள் ஆலயங்களின் வரலாறுகளை பேணி அதனை எழுத்துருவாக்கம் செய்ய வேண்டும்.

ஆலயம் ஒன்றின் தலைவராக இருப்பவர் அதே பிரதேச செயலக எல்லையில் இன்னொரு ஆலயம் ஒன்றின் தலைவராகவோ அல்லது செயலாளராகவோ இருக்க முடியாது- என்றார்.

இந்நிகழ்வில் இந்து கலாசார அமைச்சின் நிகழ்ச்சி திட்ட உதவியாளர் ஆலய சிறப்புப்பற்றி கருத்துக் கூறினார். (50-302)

# அகதிச் சிறுமி குறித்த உரிமை மீறல் மனுவிற்கு நடவடிக்கை எடுக்க நீதிமன்றம் தீர்மானம்

கொழும்பு, ஓக. 07

காயமடைந்த நிலையில் வன்னி முகாம் ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் சோபிகா மகேந்திரன் (வயது 13) என்ற சிறுமி மற்றும் அச்சிறுமியின் குடும்பத்தவர்கள் தொடர்பாக தாக்கல் செய்யப்பட்டிருந்த அடிப்படை உரிமை மீறல் மனுவை விசாரணைக்கு ஏற்று நடவடிக்கை எடுப்பது என உயர்நீதிமன்றம் நேற்றுத் தீர்மானித்தது.

ஏற்கனவே கொடிகாமத்திலும் வவுனியாவிலும் இரு வெவ்வேறு முகாம்களில் தடுத்துவைக்கப்பட்டிருந்த இந்தக் குடும்ப அங்கத்தவர்களை ஒரே முகாமுக்கு மாற்றும் படியும் -

காயமடைந்திருந்த சிறுமிக்கு உரிய மருத்துவ சிகிச்சைகளை வழங்கும் படியும் -

ஏற்கனவே இந்த மனுவை ஒட்டி உயர்நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தமை தெரிந்ததே.

இம்மனு நேற்று மீண்டும் நீதியரசர்கள் நிமால் காமினி அமரதுங்க, சந்திரா ஏக்கநாயக்க ஆகியோர் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்ட போது மனுவை விசாரணைக்கு ஏற்றுக்கொள்வது என்பது பூர்வாங்கத் தீர்மானத்தை நீதிமன்றம் எடுத்தது. வழக்கு நவம்பர் 12 ஆம் திகதிகு ஒத்திவைக்கப்பட்டது.

சிரேஷ்ட சட்டத்தரணி கௌரி சங்கர் தவராஜா இந்த மனுவைத் தாக்கல் செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (சி)

# வெடிபொருள் வெடித்ததில் 'ஹலோரஸ்ட்' பணியாளர் படுகாயமடைந்தார்

யாழ்ப்பாணம், ஓக 7

அல்லாரைப் பகுதியில் மிதிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த பணியாளர் ஒருவர் வெடிபொருள் ஒன்று வெடித்ததில் இரண்டு கைகளிலும் படுகாயமடைந்தார்.

யாழ்ப்பாணம், கச்சேரி-நல்லூர் வீதியைச் சேர்ந்த சுந்தரம் தனேஸ்வரன் (வயது-27) என்ற பணியாளரே இரு கைகளிலும்படுகாயமடைந்தநிலையில் யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (50-78)

# உள்ளூராட்சி மன்றங்களின் மாநாடு 19 ஆம், 20 ஆம் திகதிகளில் கொழும்பில்

யாழ்ப்பாணம், ஓக 7

நாடளாவிய ரீதியில் உள்ளூராட்சி மன்றங்கள் பங்குபற்றும் மாநாடு எதிர்வரும் 19, 20 ஆம் திகதி கொழும்பில் இடம்பெறவுள்ளது.

ஆசியா பவுண்டேசன் நிறுவனத்தில் ஆதரவில் இம்மாநாடும் மாபெரும் கண்காட்சியும் இடம்பெறும்.

2006 ஆம் ஆண்டு உள்ளூராட்சி மன்றங்களின் வினைத்திறன், பலாபலன், வளஅபிவிருத்தி தொடர்பான நிகழ்வுகளின் கண்காட்சி இடம்பெற்று சிறந்த உள்ளூராட்சிச் சபைகளுக்கு பரிசுகளும், விருதுகளும் இதில் வழங்கப்படும்.

அதேவேளை நாடளாவிய ரீதியில் முதல் மூன்று இடங்களைப் பெறும் உள்ளூராட்சி சபைகளுக்கு டிராக்டர், பவுசர் என்பனவும் பரிசாக வழங்கப் படவுள்ளன.

இந்த நிகழ்வில் கலந்து கொள்ளும் உள்ளூராட்சிச் சபை அலுவலர்கள் (4 பேர்) அதற்கான படிவங்களை வைக்குமாறு மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் எச்.பி.ஹேசியன் ஹேரத் கேட்டுள்ளார். (50-302)

## நாளை

| | |
|---|---|
| ஆடி 23 | 08.08.2009 |
| | சனிக்கிழமை |
| திதி: | துதியை |
| | மு.ப.09.43 வரை |
| நட்சத்திரம்: | சதயம் |
| | மாலை. 06.34 வரை |
| சுபநேரம்: | 03.04 - 04.34 |
| ராகுகாலம்: | 09.04 - 10.34 |

# தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை; அனுமதி அட்டைகள் வந்தன

யாழ்ப்பாணம், ஓக 7.

எதிர்வரும் 23ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள 5ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான பரீட்சை அனுமதி அட்டைகள் வந்து சேர்ந்துள்ளன.

பாடசாலை அதிபர்கள் தமது பாடசாலைகளின் பரீட்சை அனுமதி அட்டைகளை இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணி முதல் தத்தமது கல்வி வலயங்களில் பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (50)

# உயர்தர மாணவர்களுக்கு வழிகாட்டல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஓக.7

வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு சுதுமலை தெற்கு அம்பாள் சனசமூக நிலையம், சுதுமலை தெற்கு அம்பாள் விளையாட்டுக் கழகம் ஆகியன இணைந்து ஜி.சீ.ஈ. உயர்தர மாணவர்களுக்கு இலவச கருத்தரங்கு ஒன்றை நடத்தவுள்ளது.

இன்று வெள்ளிக்கிழமை வலி. தென் மேற்கு பிரதேச சபையின் கலாசார மண்டபத்தில் இந்தக் கருத்தரங்கு இடம்பெறவுள்ளது.

காலை 8 மணி தொடக்கம் முற்பகல் 11.30 மணிவரை தமிழ்ப்பாடத்துக்கான கருத்தரங்கை ஆசிரியர் சத்தியவேந்தனும் முற்பகல் 11.45 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணி வரை புவியியல் பாடத்துக்கான கருத்தரங்கை ஆசிரியர் பி.எஸ்.குமரனும் நிகழ்த்தவுள்ளனர். (302)

# விடுவிக்கப்பட்ட ஆசிரியர்களை பதிவுசெய்யக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஓக.7

நலன்புரி நிலையங்களில் இருந்து விடுவிக்கப்பட்ட ஆசிரியர்கள் தமது விவரங்களை மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் அலுவலகத்தில் பதிவு செய்ய வேண்டுமென மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.செல்வரத்தினம் தெரிவித்துள்ளார். (203)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றி கூறுகிறோம்

கொழும்புத்துறை போக்குவரத்துச் சேவையை ஆரம்பித்துத் தருமாறு மக்கள் திரு. றீகன் மூலமாக விடுத்த வேண்டுகோளை ஏற்று கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நிறைவேற்றியதற்காக றீகன் அவர்கட்கும் கௌரவ அமைச்சர் அவர்கட்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

கொழும்புத்துறை வாழ் மக்கள்.

## நன்றி நவில்கின்றோம்




அகில இலங்கை ரீதியில் நடைபெற்றுமுடிந்த DSI Super Sports - 2009 கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் பங்கு பற்றுவதற்கு உரியதாக எமது வித்தியாலய வீரர்கள் கொழும்பு சென்று வருவதற்குரியதான பயண ஒழுங்கமைப்புகளை மிகத் துரிதமாகவும், இலகுபடுத்தியும் அமைத்துத் தந்துதவிய சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சரும் ஈழ மக்கள் ஜன நாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் ஆகிய கௌரவ கே.என்.டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்கும் அவர் தம் தோழர்களுக்கும் எமது தேவையறிந்து தமது சேவையை நல்கிய யாழ்.அரச அதிபர் திருமிகு கே.கணேஷ் அவர்களுக்கும், எம்முடன் அருகிலிருந்து உதவிகள் நல்கிய யாழ். கல்வி வலய உடற்கல்வி பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு.க.குமாரசாமி அவர்களுக்கும் DSI நிறுவனத்தின் யாழ். முகவர்களுக்கும் எமது வித்தியாலயம் சார்பாக மனமார்ந்த நன்றிகள் உரித்தாகுக.

யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம். — பாடசாலைச் சமூகம்.

## இதய அஞ்சலி

கைதடி ஒக்கடை விநாயகர் ஆலய இயக்குனர் ஆ.சுப்பிரமணியம் அவர்களின் சகோதரி


**ராதாகிருஷ்ணன் சின்னம்மா (ஆசிரியை)**

நுவரேலியாவில் 02.08.2009 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய கண்ணீர்க் காணிக்கையுடன் பிரார்த்தனை செய்கின்றோம்.

கண்டிவீதி,
கைதடிச் சந்தி, கைதடி.

வளர்புகழ் ஆன
இ. முருகையா விமலதர்சினி, திரு. ஆனந்தபகவான்.

## பாராட்டும் வாழ்த்தும்



சென்ற மாதம் மன்னாரில் நடைபெற்ற மாகாண மட்ட பாடசாலைகளுக்கிடையேயான தடகள விளையாட்டுப் போட்டிகளில் யா/மல்லாகம் மகா வித்தியாலய அணியில் பங்குபற்றி மாகாணச் சம்பியன் பெற்ற

1. மனோகரன் டக்ஸ்சன் — 15 வயதின் கீழ் ஆண்
2. சிறீஸ்கந்தராசா அனிஸ்ரன் — 19 வயதின் கீழ் ஆண்

என்போரையும், 9 தனி நிகழ்ச்சிகளிலும் 4X100 அஞ்சல் நிகழ்விலும் அணி செய்து 6 தங்கப்பதக்கம் உட்பட 15 பதக்கங்கள், பங்குபற்றிய அனைத்துப் போட்டிகளிலும் வெற்றி பெற்ற எமது மாணவர்கள்

1. ம.டக்ஸ்சன்
2. சி.அனிஸ்ரன்
3. க.கிர்த்தனா
4. ம.சரண்ராஜ்
5. பா.தினோஜன்
6. எ.திலக்ஷன்
7. ந.திலக்ஷன்
8. பே.தர்ஷன்

என்போரை யா/மல்லாகம் மகா வித்தியாலய பாடசாலைச் சமூகம் பாராட்டி வாழ்த்துகிறது.

அத்துடன் இவர்களுக்கு போக்குவரத்து வசதி, உணவு வசதி என்பவற்றை ஏற்பாடு செய்து, சில வருடங்களுக்கு முன் எமது மைதானம் அமைய அனுசரணையாக உழைத்த மாண்புமிகு சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர்

**திரு.என்.டக்ளஸ் தேவானந்தா**

அவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/மல்லாகம் மகா வித்தியாலயம்.

(87654)

## மருந்துக் கலவையாளர் பதவிக்கு நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டோர்

யாழ்ப்பாணம், ஓக. 7

யாழ்.மாவட்டத்தில் மருந்து கலவையாளர் நேர்முகப்பரீட்சைக்கு 32 பேர் அழைக்கப்பட்டுள்ளனர்.

எதிர்வரும் 17 ஆம் 18 ஆம் திகதிகளில் காலை 9 மணி முதல் யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர் அலுவலகத்தில் நேர்முகப் பரீட்சை இடம்பெறவுள்ளது.

நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளவர்களின் விவரம் வருமாறு:-

எஸ்.சிந்து - பருத்திக்கலட்டி, சுன்னாகம், அ.கனிமொழி - உரும்பிராய் கிழக்கு, எஸ்.அபிராமி - நெல்லியடி, ஜெ.அபிராமி - மிருசுவில், எஸ்.ஜெனனி - நாவலர் வீதி, நல்லூர், ஆர்.சயந்தன் - வேலணை மேற்கு, கே.ஜெனகன் - கச்சாய் வீதி, கொடிகாமம், எஸ்.கௌரி - சுண்டுக்குளி, கே.கயந்தன் - இடைக்காடு, வி.வரணி - திருநெல்வேலி கிழக்கு, எஸ்.நிவேதிதா - தாவடி, எஸ்.சிந்துயா - வைமன் வீதி, நல்லூர், கே.நிரஞ்சனி - புத்தூர் கிழக்கு, வை.சஜீவன் - கொடிகாமம், எஸ்.கபிலன் - அரியாலை, என்.நந்தகுமார் - சுழிபுரம், ஈ.நிஷாந்தினி - நல்லூர், எம்.சசிகலா - வேம்பிராய், மீசாலை, கே.யசோதாதேவி - மாதகல், ஏ.செந்தூரன் - கைதடி மத்தி, எஸ்.சுதர்சன் - சங்கானை, பி.ஜீவகி - கைதடி தெற்கு, எல்.நிறோயினி - ஆனைக்கோட்டை, ரி.சுகிர்தா - உடுவில், கே.பாலகிருஸ்ணா - சுழிபுரம் கிழக்கு, எஸ்.சற்சொரூபன் - புத்தூர் கிழக்கு, எஸ். சிரோமி - நெல்லியடி, கே.கிருபாகரன் - காரைநகர், ரி.பிரியா . உடுவில் மேற்கு, வை.வசீகரன் - வேலணை வடக்கு, கே.பகீரதி - சுன்னாகம், எம்.கேமப்பிரியா - மானிப்பாய்.


## கடை வாடகைக்குண்டு

யாழ். பஸ் நிலைய சுற்றாடலில் கடை வாடகைக்குண்டு.
தொடர்பு: 077 8286605


## கண்ணீர் அஞ்சலி

யாழப்பாணம் இந்துக் கல்லூரியின் முன்னாள் ஆசிரியர் அமரர் க.மகேசன் அவர்களின் மறைவு குறித்து துயருற்றிருக்கும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி.

## ஒலிம்பியாட் தேசியமட்ட கற்கை நெறிக்கு தெரிவானோர்

யாழ்ப்பாணம், ஓக. 7

கணித, விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டிகளில் வெற்றியீட்டி தேசிய மட்ட செயற்திட்ட கற்கை நெறிக்கு மூன்று மாணவர்கள் யாழ்.வலயத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

செல்வி எஸ்.சுபநிலா (வேம்படி), கெ.மகிழ்ருத்தன் (சென்.ஜோன்ஸ்), எஸ்.காருண்யன் (சென்.ஜோன்ஸ்) ஆகியோரே தெரிவு செய்யப்பட்டவர்களாவர்.

இந்தக் கற்கை நெறி எதிர்வரும் 17 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரை சேனநாயக்க ம.வி., மாதம்பையில் நடைபெறும்.

குறிப்பிட்ட மாணவர்களின் பெற்றோரை எதிர்வரும் 10 ஆம் திகதி காலை 10 மணிக்கு யாழ். கல்விவலய அலுவலகத்துக்கு வருமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (1)

## கண்ணீர் அஞ்சலி



எமது மன்றத்தில் நீண்ட கால உறுப்பினராக அளப்பரிய சேவையாற்றிய

**அமரர் தம்பிராசா தவராசா (பட்டு)**

அவர்கள் 31.07.2009 அன்று இத்தாலி யில் அகாலமரணமடைந்த செய்தி அறிந்து மிகுந்த துயரடைவதோடு அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இந்து இளைஞர் மன்றம்,
சீரணி ஸ்ரீ நாகபூசணி அம்பாள் ஆலயம்,
சண்டிலிப்பாய்.

## மரண அறிவித்தல்கள்

### இராமலிங்கம் நடராசர்



இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் நடராசா நேற்று (06.08.2009) வியாழக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - அன்னம்மா தம்பதியினரின் அன்பு மகனும் பவளரத்தினம் (அமரர்), குணரத்தினம், தங்கமணி, வரதராசா, மகாராசா, சோதிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.08.2009) வெள்ளிக்கிழமை மு.ப. 9 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பராஜசேகரப்பிள்ளையார் கோவிலடி,
இணுவில் தெற்கு, இணுவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

### ஐயாத்துரை குணசேகரம் [ரிங்கர் - விக்கினேஸ்வரன்]



பழம் வீதி, ஆறுகால் மடம், ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் இராமநாதன் வீதி, கலட்டி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை குணசேகரம் (ரிங்கர் - விக்கினேஸ்வரன்) நேற்று (06.08.2009) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - தங்கம்மா தம்பதியினரின் புதல்வனும் காலஞ்சென்றவர்களான இராசையா - தங்கமணி தம்பதியினரின் மருமகனும் லீலாவதியின் பாசமிகு கணவரும் நேசராசா, கந்தையா ஆகியோரின் சகோதரனும் கணேசானந்தன், கேமலதா, சுரேசானந்தன் (இந்தியா), சிவானந்தன், பவானந்தன் (இந்தியா), ஜீவானந்தன் (கனடா), கோகுலானந்தன், திருவேரானந்தன் (இத்தாலி), சுகிரானந்தன் (இந்தியா), தேவானந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் புஸ்பாதேவி, கீதாரஞ்சினி (இந்தியா), விஜிதா, கிருபாலினி (கனடா), சசிகலா ஆகியோரின் அன்பு மாமனாரும் சுஜீவன், ரஜீவன், ஜெசிக்கா, சுகித்தா, பகீரதன், நேருஜா, தர்சியா, பானுஜன், நிக்ஷிகா, வினுஷன், பிரஜீத், சுஜித்தன், பிறின்சிகா, திஷான் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.08.2009) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*34/16, இராமநாதன் வீதி,*
*கலட்டி, யாழ்ப்பாணம்.*

தகவல்:
லீலாவதி (மனைவி),
பிள்ளைகள்.

### விஸ்வலிங்கம் சிறிஸ்கந்தராசா (C.T.B. திருத்துனர்)



பண்ணாகத்தைப் பிறப்பிடமாகவும் சித்தன்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட விஸ்வலிங்கம் சிறிஸ்கந்தராசா நேற்று (06.08.2009) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற விஸ்வலிங்கம் மற்றும் நாகம்மா தம்பதிகளின் அன்பு மகனும் வேலணையைச் சேர்ந்த காலஞ்சென்ற அப்புத்துரை மற்றும் பூபதி தம்பதிகளின் அன்பு மருமகனும் திருதேவியின் அன்புக் கணவரும் சிறிராமின் பாசமிகு தந்தையும் சரவணமுத்து, சிறிதரன்,விக்கினேஸ்வரன், பரமசிவம், புனிதமலர், சிவமலர் ஆகியோரின் சகோதரனும் பிரபுடதேவர், கோடீஸ்வரன் காலஞ்சென்றவர்களான அம்கைராசா,வில்வராசா மற்றும் தேவானந்தராசா, நோதனராசா ஆகியோரின் மைத்துனரும் ருத்திராதேவி, சரோஜினிதேவி,கமலாதேவி,வீரலெட்சுமி, சாந்தினி, அனுஷா, தங்கமலர்,சிவானந்தரூபி, சிவா நளாயினி, கிருஸ்ணமூர்த்தி, பரமநாதன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.08.2009) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் (அண்ணாமலை இல்லம்) நடைபெற்று பூதவுடல் பிற்பகல் ஒரு மணிக்கு தகனக்கிரியைகளுக்காக திருவடி நிழல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அண்ணாமலை இல்லம்,*
*சித்தன்கேணி.*

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நல்லூர், பாலகதிர்காமத்தின் ஆடிவேல் பவனி நேற்றுக் காலை ஆரம்பமாகியது. யானையில் பூரணகும்பம், நவவீரர்கள், தேர் ஆகியன முறையே ஒன்றன்பின் ஒன்றாக வீதி வலம் வந்தபோது எடுக்கப்பட்ட படங்கள்.
(படங்கள்:லக்ஷ்மன்)

## யாழ். போதனா வைத்தியசாலைக்கு ஏ-9 ஊடாக ஒரு தொகுதி மருந்துகள்

யாழ்ப்பாணம், ஓக.7

யாழ். போதனா வைத்தியசாலைக்கு ஏ-9 தரைப்பாதையூடாக ஒரு தொகுதி மருந்து வகைகள் எடுத்து வரப்பட்டுள்ளன.

இந்த மருந்துப் பொருள்கள் நேற்று முன்தினம் கொண்டுவரப்பட்டுள்ளன.

இதனைவிட யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்திற்கும் தரைப் பாதையூடாக மருந்து வகைகள் கொண்டு வரப்பட்டுள்ளன.

சகல அரசினர் வைத்தியசாலைகளுக்கும் விநியோகிக்கப்படவுள்ளன.

(203-224)

## கட்டுரைப் போட்டியில் மெதடிஸ்த மாணவிக்கு இடம்



யாழ்ப்பாணம், ஓக.7

தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையால் தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை தரம் ஆறு மாணவி செல்வி பிரதீபா சிவபாலு ஐந்தாம் இடத்தைப் பெற்றுள்ளார். (201)




## நீராவியடி பிள்ளையார் ஆலய பின் வீதியால் பயணிப்போர் நெருக்கடிக்கு மத்தியில்

யாழ்ப்பாணம், ஓக.7

யாழ். நீராவியடி வீதியில் பிள்ளையார் கோவிலுக்குப் பின்புறமாக உள்ள கேணியின் கரையோரப்பகுதிகள் இடிந்து அகலமாகுவதால் அவ்வீதியால் செல்லும் பயணிகள் பெரும் சிரமங்களையும் ஆபத்தினையும் எதிர்நோக்கி வருகின்றனர்.

மேற்படி வீதியில் பிள்ளையார் கோயிலுக்குப் பின்புறமாக பழைமை வாய்ந்த கேணியொன்று காணப்படுகின்றது.

அது நீண்டகாலமாக புனரமைக்கப்படாமல் உள்ளது.

தற்போது அந்தக் கேணியின் கரையோரங்கள் இடிந்து அகலமாகுவதால் வீதியால் பயணிப்போர் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றார்கள்.

கேணியின் கரையோரங்கள் அகலமாவதைத் தடுக்க பீப்பாய்த் தகரங்கள் அடுக்கப்பட்டுள்ள போதும் அவை பாதுகாப்பாக இல்லை என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.



இந்தக் கேணி தொடர்பாகவும் வீதி தொடர்பாகவும் உரிய அதிகாரிகள் கவனத்தில் எடுக்க வேண்டும் என்று அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

(9)

## ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் உறுதிப்பத்திரம் வழங்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது

யாழ்ப்பாணம், ஓக.7

இலங்கை பாதுகாப்புச் சபையின் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்டப் பயனாளிகளுக்கான உறுதிப் பத்திரம் வழங்கும் நிகழ்வு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று நண்பகல் 12 மணியளவில் சமூகப்பாதுகாப்புச் சபையின் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பா.பிரதீபன் தலைமையில் நடை பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக சமூக நலத்துறை மற்றும் சமூக சேவைகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் சிறப்பு விருந்தினர்களாக நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன், கரவெட்டிப் பிரதேச செயலர் அ.சத்தியசீலன் மற்றும் இலங்கை பாதுகாப்பு சபை செயற்பாட்டுப் பணிப்பாளர் நா.சந்திரமோகன் ஆகியோரும் கலந்து கொண் டனர்.

இலங்கை பாதுகாப்புச் சபையின் ஓய்வூதியத்திட்டத்தின்பிரகாரம் அகில இலங்கையில் முதலிடம் பெற்ற கரவெட்டி பிரதேச செயலகத்திற்கான நினைவுக் கேடயத்தையும் நினைவுப் பரிசில்களையும் கரவெட்டிப் பிரதேச செயலர் அ.சத்தியசீலனிடம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வழங்கிக் கௌரவித்தார்.

தொடர்ந்து யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த பாதுகாப்புச்சபை ஓய்வூதியத் திட்டத்தின் பயனாளிகளுக்கான ஓய்வூதிய உறுதிப் படுத்தற்பத்திரத்தினையும் உரியவர்களிடம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கையளித்தார்.

(86)

## வாராந்த சொற்பொழிவு

வடமராட்சி, ஓக.7

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடத்திவரும் ஆன்மீக நிகழ்வு வரிசையில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு ''உள்ளம் பெருங்கோயில்'' என்னும் தலைப்பில் செஞ்சொற் செம்மல் இரா.கேதீஸ்வரன் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்.

(201-236)

## மக்கள் நம்பிக்கையுடன் வாழக் கூடிய வகையில் சமூக சீர்திருத்தங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும்

### நூல் வெளியீட்டு விழாவில் அரச அதிபர்

நல்லூர்,ஓக.7

மக்கள் நம்பிக்கையுடன் இரவிலும் நடமாடக் கூடிய வகையிலும் அவர்கள் சந்தோசமாகவும் நிம்மதியாகவும் வாழக் கூடியதாகவும் சமூகச் சீர்திருத்தம் ஏற்பட வேண்டும். யாழ். அரச அதிபர் கே. கணேஸ் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்.மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக்குழுவின் நல்லைக்குமரன் மலர்-17 வெளியீட்டு விழா மாநகர சபையின் ஆணையாளர் மு.செ.சரவணபவ தலைமையில் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் மாநகரசபையின் உயர் விருதான யாழ்.விருதைப்பெற்றுக் கொண்ட அரச அதிபர் கே.கணேஸ் தனது ஏற்புரையின்போது தெரிவித்தவை வருமாறு:

குற்றச் செயல்கள் சமூகத்தின் பின்னடைவுக்கே வழியமைக்கும். அனைவருமே தவறான செயல்களைக் களைந்து நல்ல மனத்துடன் ஒருவருக்கு ஒருவர் உதவ வேண்டும் என்ற மனப்பாங்குடன் வாழ்ந்தால் எமது பிரதேசம் சிறந்த ஒன்றாக மாறி விடும்.

மாவட்டத்தில் இடம்பெறும் சமூகச் சீரழிவுகளை ஒழிக்கவும் நாம் அடுத்தவர்களுக்கு இடையூறாக வாழ மாட்டேன் என்றும் ஒவ்வொருவரும் தமக்குள் ஒருசத்தியப் பிரமாணத்தை எடுத்திருத்தல் வேண்டும்.

பிறருக்கு எங்களால் எந்த வகையில் உதவ முடியும் என்பதைச் சிந்தித்து மனிதாபிமான முறையில் நமது கடமைகளைச் செய்ய வேண்டும்.

நான் மன்னார், வவுனியா, யாழ்ப்பாணப் பகுதிகளின் அரச அதிபராகக் கடமையாற்றிய பொழுது களில் அந்தப் பகுதிகள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டிருந்தது.

அந்த இடங்களுக்குச் செல்வதற்கே மிகவும் கஷ்டமாக இருந்தது. எனினும் எனது பொறுப்பை உணர்ந்து கஷ்டங்களின் மத்தியிலும் அந்தப் பகுதிகளுக்குச் சென்றேன். எனது பெற்றோர்கள், வழிகாட்டிய ஆசான்கள், இறைபக்தி என்பனவே எல்லா வகையிலும் எனக்கு உதவியாக இருந் தன.

நலன்புரி நிலையங்களைச் சேர்ந்த மக்கள் தமது சொந்த இடங்களுக்குச் செல்ல விடுவிக்கப்பட்டிருக்கும் மகிழ்ச்சியான நாளில் இந்தக் கௌரவம் கிடைத்தது எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. மக்கள் அனைவரும் நிம்மதியாக வாழ வேண்டும் - என்றார்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரப் பரமாச்சாரிய சுவாமிகள், புருத்தித்துறை ராமகிருஷ்ண சேவாச்சிரம சுவாமிகள் சித்ரூபானந்தா, செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன், மாகாண ஆணையாளர் திருமதி ப.சிவலிங்கம் உட்பட பலர் உரை நிகழ்த்தினர். (203-111)

## வடமராட்சி பிரதேசத்தில் ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்குப் பற்றாக்குறை நிலவுகிறது

கரவெட்டி,ஓக.7

வடமராட்சிப் பிரதேசத்தில் ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்குப் பற்றாக்குறை நிலவுவதாக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராஜா கவலை தெரிவித்துள்ளார்.

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய பிரீதி அதிபரின் சேவைநயப்பு விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்ட விடயத்தைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கு நிலவும் பற்றாக்குறையால் மாணவர்களின் கல்வி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

ஆரம்பக் கல்வி மாணவர்களுக்கு ஆசிரியர்கள் மிகவும் அவசியமாகத் தேவை. அவர்களின் கல்வியில் அனைவரும் கவனமெடுக்க வேண்டியது அவசியமாகும்.

இதேவேளை - பாடசாலைகளில் கடமை புரிவதற்கு சுகாதாரத் தொழிலாளர்களுக்கும் பற்றாக்குறை நிலவுகிறது. இதனால் மாணவர்களே சில துப்புரவு வேலைகளில் ஈடுபட வேண்டியுள்ளது - என்றார்.

(203-70)



இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபையின் ஓய்வூதியத் திட்டத்தின் பயனாளிகளுக்கான ஓய்வூதிய உறுதிப்படுத்தற்பத்திரம் வழங்கும் நிகழ்வு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள்.

நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் மங்கள விளக்கேற்றுவதையும், சமூகப் பாதுகாப்புச் சபையின் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பா.பிரதீபன், சமூகப் பாதுகாப்புச் சபையின் செயற்பாட்டுப் பணிப்பாளர் நா.சந்திரமோகன் ஆகியோர் உரையாற்றுவதையும் முதல் மூன்று படங்களிலும் காணலாம்.

கரவெட்டிப் பிரதேச செயலர் அ.சத்தியசீலனிடம் சமூக சேவை மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பாராட்டுக் கேடயம் வழங்குவதையும், நிகழ்வில் கலந்துகொண்ட பயனாளிகளில் ஒரு பகுதியினரையும் ஏனைய இரண்டு படங்களிலும் காணலாம்.
(படங்கள்: ஓங்காரன்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




2010 இல் புலமைப் பரிசில் எழுதவுள்ள

# தரம் 4 புலமைப் பரிசில் பரீட்சைக்கான மாணவர்களுக்கான முன்னோடிப் பரீட்சை

## பகுதி 1


நேரம் : 45 நிமிடம்,
100 புள்ளிகள்

100


### எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

■ வித்தியாசமான உருவத்தைத் தெரிவுசெய்து அதன்கீழ் கீறிடுக.


1.




2.




3.




■ கீழ்வரும் பாடலைப் படித்து அதன்கீழ் கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.

காலை நேரச் சூரியன்
களிப்புடனே வருகிறான்
கண்விழித்து எழும்புங்கள்
கதிரின் ஒளி காணுங்கள்!

சிவப்புக்கொண்டைச் சேவலும்
இறைவணக்கம் பாடுது
புத்தம் புதிய மலர்களும்
பூத்துக் குலுங்குகின்றன.


பல்விளக்கி முகம்கழுவி
பள்ளி செல்ல வேண்டாமோ
சின்னப் பாப்பா எழுந்திடு
செல்வோம் பள்ளிக்கூடமே!

(-தமிழ்மணி ஜெயந்திஜீவா)

4. இந்தப் பாடலுக்குத் தலைப்பிடுக. ..............................
5. கவிஞர் யாருக்காக இந்தப் பாடலைப் பாடியிருக்கின்றார்? ..............................
6. இறைவணக்கம் பாடுவது எது? ..............................
7. களிப்பு, மலர்கள் - எனும் சொற்களுக்கு ஒத்தசொல் எழுதுக. .............................., ..............................

■ அருகிலுள்ள உருவத்தை அவதானித்து, வினாக்களுக்கு விடை எழுதுக.

8. 'C' உச்சரிப்புடைய எழுத்துக்கள் எத்தனை உள்ளன? ..............................
9. உயிர் எழுத்தொன்றைக் கொண்டுள்ள பகுதி எது? ..............................
10. இடையின மெய்யெழுத்தொன்றைக் கொண்டுள்ள பகுதி எது?..............................
11. 'படி' எனும் சொல்லுக்குப் பொருத்தமான சொல்லைக்கொண்ட பகுதி எது? ..............................




■ கீழ்வரும் அடைப்புக்குள் தரப்பட்டுள்ள எழுத்துக்களை நன்கு அவதானித்து,கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கா | மா | த | ல | ட | வ | ஹ | க் | ஷ | ன் | சு | பு | ம |

12. வட எழுத்துக்களை இனங்கண்டு, அவற்றைச் சுற்றி வட்டமிடுக.
13. எல்லா மெய்யெழுத்துக்களின் கீழும் சிறு கோடிடுக.
14. இங்கு மெல்லின எழுத்துக்கள் எத்தனை உள்ளன?
15. முஸ்லிம்களின் புனித ஸ்தலம் ஒன்று இங்குள்ளது. அதனைக் கண்டு எழுதுக. ..............................

■ இடைவெளிக்குப் பொருத்தமான விடையைத் தெரிந்து, அதன்கீழ் கீறிடுக.

16. பகல் - சூரியன், இரவு ..............................
(நட்சத்திரம், கோள், சந்திரன், மேகம்)
17. சோறு - சாப்பிட, தண்ணீர் ..............................
(வீச, கழுவ, குடிக்க, இழுக்க)
18. விளையாட்டு - மைதானம், நடனம் ..............................
(கொண்டாட்டம், மேடை, ஊர்வலம், கூத்து)
19. இலங்கை - ரூபா, அமெரிக்கா ..............................
(யென், ரூபா, யூரோ, டொலர்)
20. சிங்கம் - மாமிசம், யானை ..............................
(கித்துல், தென்னை, மரம்)

■ கடையொன்றில், விற்பனைக்காக எடுத்த பொருட்களின் வாங்கிய விலையைக் குறிக்க ஆங்கில எழுத்துக்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதற்காக இலக்கங்கள் ஆங்கில எழுத்துக்களாக கீழுள்ளவாறு மாற்றப்பட்டுள்ளன. அதனைக் கொண்டு கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடைஎழுதுக

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 0 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| E | B | M | A | C | K | D | F | H | G |


21. இதற்கேற்ப, ரூபா. 550/- பெறுமதியான பொருளொன்றின் விலை ஆங்கில எழுத்துக்களில் எவ்வாறு குறிக்கப்படும்? ..............................
22. ரூபா. 117/50 எவ்வாறு குறிக்கப்பட்டிருக்கும்? ..............................
23. **MBC** எனும் ஆங்கில எழுத்துக்களால் குறிக்கப்பட்டுள்ள பொருளொன்றின் வாங்கிய விலை யாது? ..............................
24. ரூபா. 52.00 க்கு விற்கும் பொருளொன்றிலிருந்து ரூபா. 12 இலாபம் கிடைக்குமாயின், அதன் வாங்கிய விலை யாது? ..............................

■ கீழுள்ள சொற்களில் முதலிரு சொற்களும் ஏதேனும் ஒருவகையில் தொடர்புடையவை. மூன்றாவது சொல்லுக்குத் தொடர்புடைய சொல்லை அடைப்புக்குள்ளிருந்து தெரிவுசெய்து, அதன்கீழ் கீறிடுக.


25. வாள், அறுக்க, சுத்தியல் (தேய்க்க, கழற்ற, வெட்ட, துளைக்க)
26. வீடு, அத்திவாரம், மரம் (கிளை, பூ, இதழ், வேர்)
27. எலுமிச்சை, புளி, திராட்சை (அப்பிள், சுவை, குலை, சாறு)
28. யானை, குட்டி, சிங்கம் (பிள்ளை, குருளை, பேத்தை, குஞ்சு)
29. சுட, சுடச்சுட, பெரிய (பெண்பெரிய, மிகப்பெரிய, பெரியப்பெரிய, சிறிய)
30. நான், தன்மை, நாங்கள் (முன்னிலை, தன்மை, படர்க்கை, நாம்)

■ இங்கு முதலில் காட்டப்பட்டுள்ள உருவத்தை உருவாக்குவதற்கு, இங்குள்ள 3பகுதிகள் மட்டுமே தேவைப்படுகின்றன. பொருத்தமற்ற பகுதியை தெரிந்து கீறிடுக.

31.





32.



33. பியசேன 100 மீற்றர் ஓடும் நேரத்தில் கமல் 120 மீற்றர் தூரம் ஓடுவான். கமல் 100 மீற்றர் ஓடும் நேரத்தில்பியல் 90 மீற்றரே ஓடுவான். மிகவும் குறைவான வேகத்தில் ஓடுபவர் யார்? ..............................
34. 10 சென்ரி மீற்றரில் எத்தனை மில்லி மீற்றர்கள் உள்ளன? ..............................
35. ரூபா. 20 கொடுத்து, ரூபா. 16.50 பெறுமதியான புத்தகமொன்றை வாங்கிய மதனுக்கு மீதியாக, ஒரு நாணய வகையிலிருந்தும் 2 வீதம் 6 நாணயக் குற்றிகள் கிடைத்தன. இந்தக் காசு வகை எவை?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பிரபல்ய சிங்கள வெளியீடுகளின் மொழிபெயர்ப்புடனும் மேலதிக சேர்க்கையுடனும் தயாரிக்கப்பட்ட ஒரு பிரமாண்டமான படைப்பு.



காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் இடம்பெற்ற வருடாந்த தேவி பெருந்திரு விழாவில் அம்பாள் தேரில் வலம்வந்து அடியார்களுக்கு அருட்காட்சி கொடுப்பதைப் படத்தில் காணலாம். (250)



இணுவில் தர்மசாஸ்தா குருகுலத்தில் யஜுர்வேத அந்தணர்களுக்கான உபாகர்மம் (பூநூல் மாற்றம்) நடைபெற்றது. அதனை காயத்ரீ பீடாதிபதி சிவஸ்ரீ தானு மகாதேவக் குருக்கள் நிகழ்த்துகிறார்.



வண்ணை வடகிழக்கு கலட்டி வீரகத்தி விநாயகர் ஆலயத் தேர்த்திருவிழாவில் பஞ்சமுக விநாயகர் தேருக்கு எழுந்தருளுவதைக் காணலாம்.



அச்செழு, யூலனுார் புனித ஹென்றியரசர் ஆலயத்தில் வருடாந்தத் திருப்பலிப் பெருவிழா நிகழ்வுகள் அண்மையில் இடம்பெற்றன. பெருவிழாவில் கலந்துகொண்ட பங்கு மக்களையும் ஆலயத்தின் தோற்றத்தையும் படத்தில் காணலாம். (படம்: கலைஞன்)

# ஆசை அறுமின்! ஆசை அறுமின்!

ஞானக்கதிர்

இந்த மண்ணில் பிறந்த யாவருக்கும் மரணம் ஒரு நாள் ஏற்படும். முருகன் அடியார்களுக்கு மரண பயம் ஒரு நாளும் இல்லை. "நாளும் கோளும் நம்பனடியார்க்கு நலிவு செய்யாது" என்ற மனநிலை இவர்களிடம் இருக்கும். உயிரை உடலிலிருந்து பிரிப்பதற்காக யமன் கலகம் செய்யும்போது ஞான பண்டிதனாகிய முருகன் வந்து காப்பாற்ற வேண்டுமென அருணகிரியார் முருகனிடம் சரணமடைவதை பின்வரும் கந்தரநுபூதிப் பாடல் தெளிவாக விளக்குகின்றது.

*சாகாதெனையே சரணங்களிலே*
*காகா நமனார் கலகஞ் செயுநாள்*
*வாகா முருகா மயில் வாகனனே*
*யோகா சிவஞா னொப தேசிகனே*

முருகப் பெருமானின் இச்சா சக்தி வள்ளி அம்மன், கிரியா சக்தி தெய்வானை, ஞான சக்தி வேல். இச்சா சக்தியாகிய வள்ளியம்மையைக் கொண்டே ஆன்மாக்களுக்கு முருகன் அருளைப் புரிகின்றார். இறைவனிடம் அன்பைச் செலுத்தி அருளைப் பெறுவதே அடியார்களின் செயலாகும். இறையருளைப் பெருகின்ற அநுபூதி நிலைக்கு உலகியல் ஆசைகள் தடையாக இருக்கின்றன. இறைவனிடத்தில் அன்பு வேண்டுமே ஒழிய ஆசை வைக்கக் கூடாது. ஆசையான சங்கிலி முற்றிலும் அழிந்தாலும் இறைவனிடம் நாம் ஒன்று பட்டு விடலாம் இதனை.

*தூசாமணியும் துகிலும் புனைவாள்*
*நேசா முருகா! நினதன் பருளால்*
*ஆசா நிகளம் துகலாயின பின்*
*பேசா அநுபூதி பிறந்ததுவே*

எனவரும் கந்தரநுபூதிப் பாடல் தெளிவாக்குகின்றது. இறைவனை குணம் குறிகளோடு கூடிய உருவத் திருமேனியிலும் வழிபடுகின்றோம். குணம் குறிகளற்ற அருவ நிலையிலும் வழிபடுகின்றோம். பாசஞானம், பசுஞானம் என்பன நீங்கி பதி ஞானம் துலங்குபவர்களுக்கு இறைவன் வெளிப்படுவான். பதிஞானம் எள்ளளவும் இல்லாதவர்களுக்கு இறை தரிசனம் எளிதில் கிட்டாது. வாசனை உள்ள மலரில் மணம் இரண்டறக் கலந்து நிற்பதுபோல இறைவன் உலகெல்லாம் அத்துவிதமாக கலந்து நிற்கின்றான். அவை இருளை அகற்றும் ஞான ஒளியாகவும் திகழும். முருகன் உலகப் பொருள்கள் அனைத்துக்கும் கருவாகவும் உயிராகவும் திகழ்கிறான். பக்குவப்பட்ட ஆன்மாக்களுக்கு ஞான பண்டிதனாகவும் குருவாகவும் வந்து அருளுபதேசம் செய்கிறான். சுந்தர் சுவாமிநாதனாக எழுந்தருளிய முருகனின் குரு வடிவம் முருக பக்தர்களின் கருமேனி தீர்க்க வந்த திருமேனியாகும்.

மந்திர வாசகங்களாக செஞ்சொற்புனை மாலையாக இருக்கின்ற கந்தர் அநுபூதிப் பாடல்கள் முருக உபாசகர்கள் நாள்தோறும் ஓதவேண்டிய மந்திர வார்த்தைகள் ஆகும். முருகப் பெருமானின் பாதக் கமலங்களில் சொரிவதற்குரிய அர்ச்சனை மலர்கள் ஆகும்.

ஆலயத்துக்குச் செல்லும் அடியார்கள் எவரும் வீண் வார்த்தைகள் எதுவும் பேசக் கூடாது. இறைவனை நினைவூட்டும் பாடல்களையே ஓதவேண்டும்.

கந்தரனுபூதிப் பாடல்களை ஓதுகின்ற அடியவர்களுக்கு இம்மைப் பிறப்பின் சகல தெய்வயோகம்மிக்க பெருவாழ்வு கிடைப்பதோடு சிவஞான முத்தியும் பரகதியும் கிடைக்கும். கந்தவேள் பெருமானின் திருவருட் பேரின்பத்தை அனுபவிக்கும் பெரும் பேறும் கிடைக்கும். அநுபூதிப் பாடல்களை உணர்ந்தோதுகின்ற அடியவர்கள் முருகப் பெருமானின் திருவருளுக்கு பாத்திரமாகி ஒளிவடிவாகத் திகழ்வார்கள்.

(நன்றி: நல்லைக் குமரன் மலர் - 1998).

## போபால் இரசாயனக் கசிவுப் படுகொலைகள்:

# 25 ஆண்டுகளுக்குப் பின் கம்பனி தலைவரைக் கைது செய்யக் கட்டளை

புதுடில்லி, ஓக. 7

போபால் இரசாயனக் கசிவு காரணமாக ஆயிரக்கணக்கான மக்கள் பலியான சம்பவம் தொடர்பான வழக்கில் குறித்த யூனியன் கார்பைட் கம்பனியின் முன்னாள் தலைவர் வாரன் அன்டர்சன் என்பவரை உடனடியாகக் கைது செய்து நீதிமன்றில் நிறுத்தும்படி உத்தரவிடப்பட்டுள்ளது.

இருபத்து ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் இடம்பெற்ற இச்சம்பவத்தில் 500 ஆயிரம் மக்கள் இரசாயனக் கசிவின் தாக்கத்துக்குள்ளானார்கள்.

முதல் அறிக்கையின்படி 2259 பேர் கொல்லப்பட்டார்கள் என்று கூறப்பட்டது. ஆனால் பின்னர் 10 ஆயிரம் பேர்வரை பலியானார்கள் என்று தெரிய வந்தது.

நீதிமன்றம் தற்போது விடுவித்துள்ள பணிப்பின்படி மத்திய புலனாய்வுப் பிரிவினர் அன்டர்சனைக் கைது செய்து உடனடியாக நீதிமன்றில் ஆஜர் படுத்த வேண்டும். நீதிமன்றத்தின் இந்தப் பணிப்புரையை இறந்தவர்களின் உறவினர்களும் பாதிக்கப்பட்டு உயிருடன் இருப்பவர்களும் வரவேற்றிருக்கிறார்கள்.

1984 ஆம் ஆண்டு டிசெம்பர் 3 ஆம் திகதி போபால் யூனியன் கார்பைட் நிறுவனத்தில் கசிவு ஏற்பட்டு 42 தொன் நச்சு வாயு வெளியேறியதாகக் கூறப்படுகின்றது.

இவ்வழக்கின் பிரதான எதிரியான அன்டர்சன் விசாரணைக்கு முகம் கொடுக்காமல் 1992 ஆம் ஆண்டில் இருந்து தலைமறைவாக இருந்து வருகிறார். (ப)

# வாக்காளர் இடாப்புக்களைப் புதுப்பிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பமாகின்றன

யாழ்ப்பாணம், ஓக. 7

குடாநாட்டில் வாக்காளர் இடாப்புக்களைப் புதுப்பிக்கும் நடவடிக்கைகள் தற்போது இடம்பெற்று வருகின்றன.

கடந்த ஆண்டுகளைப் போல் அல்லாமல் இந்த ஆண்டு வீடுவீடாகச் சென்று வாக்காளர் இடாப்புக்கள் பதியகூடிய வகையில் படிவங்கள் வழங்கப்படவுள்ளன.

கடந்த காலங்களில் வாக்காளர் இடாப்பில் புதியவர்களை இணைப்பதற்கு வீடு வீடாகச் சென்று பதிவுகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

இதனால் வாக்காளர் இடாப்புக்களில் உரிய வகையில் உள்ளடங்கள் இடம்பெறவில்லை என்று சுட்டிக்காட்டப் படுகின்றது.

இதனையடுத்து தற்போது இந்த நடைமுறை முன்னெடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வாக்காளரைப் பதிவு செய்வதற்கான புதிய படிவத்தில் தேசிய அடையாள அட்டை தொடர்பான விவரங்கள் கேட்கப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது. (203-86)

# 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பு

கொழும்பு, ஓக. 7

மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் புள்ளி விவரவியல் திணைக்களம் எதிர்வரும் 2011 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் நாட்டில் மக்கள் தொகைக் கணக் கெடுப்பொன்றை நடத்துவதற்கு முடிவு செய்துள்ளது.

மக்கள் தொகைக் கணக்கெடுப்பு 10 ஆண்டுகளுக்கு ஒருதரமே நடத்தப்படுவது வழக்கம் என்றும் இதற்கு முந்திய கணக்கெடுப்பு 2001 ஆம் ஆண்டு நடத்தப்பட்டதென்றும் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

இக்கணக்கெடுப்பையடுத்து கிராம சேவையாளர்கள் பிரிவுகளின் மட்டத்தில் வரை படங்கள் தயாரிக்கப்படவிருப்பதாகவும் இந்த நடவடிக்கையில் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தவிர்க்கப்பட்டிருக்கும் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

மாவட்டச் செயலக அதிகாரிகள் இந்த நடவடிக்கைகளின்போது பயன்படுத்திக் கொள்ளப்படுவோர்கள் என்று அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

# வலி.தென்மேற்கில் பெண்கள் அபிவிருத்திச் சங்கம்

யாழ்ப்பாணம், ஓக. 7

வலி.தென்மேற்கு உள்ளூராட்சி சபையில் பெண்கள் அபிவிருத்திச் சங்கம் அமைக்கப்படவுள்ளது.

வலி.தென்மேற்கு பிரதேச சபை (மானிப்பாய்) செயலாளர் திருமதி பு.சிவலிங்கமும், சனசமூக அபிவிருத்தி அதிகாரியும் இணைந்து இதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளனர்.

ஒவ்வொரு சனசமூக நிலையத்திலும் இருந்து இருவர் வீதம் தெரிவு செய்யப்பட்டு 140 பேர் இதில் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர். அதிலிருந்து வலி.தென்மேற்கு பெண்கள் அபிவிருத்திச் சங்கம் உப அலுவலக ரீதியாக அமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (203-302)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவுக்குச் சென்று குடியேற ஜெனரல் சரத் பொன்சேகா தீர்மானம்?

## அரசுத் தலைமையுடனான கசப்புணர்வு காரணமாம்!

கொழும்பு, ஓக. 7

இலங்கையில் தாம் தற்போது நடத்தப்படும் விதம் குறித்து அதிருப்தியடைந்திருக்கும் முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகா, அதன் காரணமாக அமெரிக்காவுக்குச் சென்று குடியேறத் திட்டமிடுகின்றார் எனச் செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

குறிப்பாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் தாம் அண்மைக் காலமாக நடத்தப்படும் விதம் குறித்து அதிருப்தியும் ஏமாற்றமும் அடைந்தே சரத் பொன்சேகா இவ்வாறு தீர்மானித்துள்ளாரென சரத் பொன்சேகாவுக்கு நெருக்கமானவர்களை மேற்கோள்காட்டி இணையத்தளங்கள் சில செய்திகளைப் பிரசுரித்திருக்கின்றன.

புலிகளுடனான யுத்தத்தில் இலங்கை அரசு வெற்றி பெறுவதற்கு சரத் பொன்சேகா இராணுவத் தளபதியாகப் பதவி வகித்துக் காத்திரமான பங்களிப்புகளைச் செய்திருக்கிறார் எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

ஆனால் புலிகளுடனான போரில் வெற்றியைத் தேடிக் கொடுத்த இராணுவத் தளபதியை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தற்போது ஓரங்கட்டி நடக்கின்றார் என்று அரசியல் வட்டாரங்களில் பரவலாகப் பேசப்படுகின்றது.

குறிப்பாக சரத் பொன்சேகா இராணுவத் தளபதி பதவியிலிருந்து ஜனாதிபதியால் நீக்கப்பட்டு முப்படைகளின் சிரேஷ்ட அதிகாரி என்ற அந்தஸ்துப் பதவியில் அமர்த்தப்பட்டுள்ளார். சரத் பொன்சேகாவுக்கான பாதுகாப்பு வசதிகளும் குறைக்கப்பட்டுள்ளன.

புலிகளுடனான போரில் இலங்கைக்கு வெற்றியைப் பெற்றுக்கொடுத்த கதாநாயகர்களாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும், முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவும், சிங்களப் பெரும்பான்மை மக்களால் தலையில் வைத்துக் கொண்டாடப்படுகின்றார்கள். அதேநேரம், சிங்கள மக்களிடையே சரத் பொன்சேகாவுக்கு பேராதரவு பெருகி வருவது அரசுத் தலைமைக்கு அதிருப்தியைத் தந்திருப்பதாகவும் கூறப்படுகின்றது.

இதனாலேயே சரத் பொன்சேகாவை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஓரங்கட்டி நடக்கின்றாராம்.

ஜெனரல் சரத் பொன்சேகா ஊடகங்களுக்கு அறிக்கைகளை விடுப்பதற்குத் தடை விதித்துள்ள பாதுகாப்புச் செயலாளரும் ஜனாதிபதியின் சகோதரருமான கோத்தபாய ராஜபக்ஷ, சரத் பொன்சேகா தொடர்பான கட்டுரைகளையோ, புகைப்படங்களையோ பிரசுரிப்பதைத் தவிர்க்குமாறு அரச ஊடகங்களுக்கு கட்டளையிட்டிருக்கின்றார் என்றும் கூறப்படுகின்றது.

இத்தகைய கசப்பான அனுபவங்கள் காரணமாகவே சரத் பொன்சேகா, இலங்கையிலிருந்து ஒதுங்கி அமெரிக்காவுக்குச் சென்று குடியேறத் தீர்மானித்திருக்கின்றார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. தமது பாதுகாப்புக் குறைக்கப்பட்டிருப்பதை அடுத்து பொன்சேகா தமக்கு உயிராபத்து நேரலாம் என்று அஞ்சுகிறார் என்றும் தெரியவருகிறது.

இந்நிலையில் மூன்று பௌத்த பீடங்களின் தேரர்கள் குழுவொன்று பொன்சேகாவை நேரில் சந்தித்து, அமெரிக்காவுக்குச் சென்று குடியேறுவது குறித்த தீர்மானத்தை மீள் பரிசீலனை செய்யுமாறு அவரைக் கோரியுள்ளது எனவும் தெரியவருகிறது.

ஜனாதிபதியுடன் பேசி சரத் பொன்சேகாவின் பாதுகாப்பைப் பலப்படுத்துவதற்கான நடவடிக்கைகளைத் தாங்கள் மேற்கொள்வார்களெனவும் பிக்குகள், சரத் பொன்சேகாவுக்கு வாக்குறுதி வழங்கியுள்ளனர் என்றும் கூறப்பட்டது.

இதேநேரம், நாடாளுமன்றத்தில் அவசரகாலச்சட்ட நீடிப்பு பிரேரணை மீதான விவாதம் இனி இடம்பெறும்போது ஜே.வி.பி. நாடாளுமன்றக் குழுத் தலைவர் அநுரகுமார திஸ்ஸநாயக்கா, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் சரத் பொன்சேகா விவகாரம் குறித்து அங்கு உரையாற்றவுள்ளார்களெனவும் கூறப்படுகின்றது.

- இவ்வாறு அந்த இணையத்தளச் செய்திகளில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அமெரிக்காவில் வசிப்பதற்கான 'பச்சை அட்டை' அனுமதியை ஜெனரல் சரத் பொன்சேகா கொண்டுள்ளார் என ஏற்கனவே செய்திகள் வெளியாகியிருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது. (சி)

## குடைசாய்ந்தது பஸ்; ஒருவர் பலி! 30 பேர் காயம்

கண்டி, ஓக.7

கண்டி, கலகெதரப் பகுதியில் உள்ள சோதனைச் சாவடியருகே நேற்றுமுன்தினம் பிற்பகல் பஸ் ஒன்று குடைசாய்ந்ததில் ஒருவர் உயிரிழந்தார். 30 பேர் படுகாயமடைந்தனர்.

உல்லாசப் பயணமொன்றை மேற்கொண்டு விட்டு சிலாபம் பகுதிக்குத் திரும்பிக்கொண்டிருந்தவேளையிலேயே இந்த விபத்து ஏற்பட்டது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் பிற்பகல் 2.40 மணியளவில் அப்பகுதியில் வேகமாக வந்த அந்த பஸ் பாதையை விட்டு விலகி குடை சாய்ந்ததாலேயே இந்த அனர்த்தம் ஏற்பட்டது எனவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

விபத்தில் படுகாயமடைந்தவர்கள் கண்டி மற்றும் கலகெதர வைத்தியசாலைகளில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

## மிதிவெடிகளைக் கண்டு பிடிக்க மோப்ப நாய்கள்

கொழும்பு, ஓக.7

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் புதைக்கப்பட்டிருக்கும் கண்ணி வெடிகள், மிதிவெடிகளைக் கண்டு பிடிக்கும் பணியில் ஈடுபடுத்துவதற்கு பிரிட்டன் மற்றும் சுவீடன் போன்ற நாடுகளில் இருந்து 25 நல்லின நாய்களை வரவழைக்க இருப்பதாக நாய்களைப் பராமரிக்கும் பொலிஸ் பிரிவுப் பணிப்பாளர் உதவி பொலிஸ் அத்தியட்சகர் லால் செனிவரத்தன தெரிவித்தார்.

ஜேர்மன் செப்பேட், லப்பிறேட்டர், பெல்ஜியம் மனலொயி இன நாய்களுக்கு முதலில் [illegible] இந்த நாய்கள் மிதிவெடிகளை மோப்பம் பிடித்து கண்டுபிடிக்கும் வகையில் பயிற்சியளிக்கப்படவிருக்கின்றன. (ப)

---

### முதலாம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில் 22 ✶ 11 ✶ 1918

விண்ணில் 07 ✶ 08 ✶ 2008



### அமரர் யோசவ் எட்மன்ட் செபஸ்ரியாம்பிள்ளை

எங்கள் உள்ளத்தின் சுடரொளியே
உறவுக்கு ஒளியீந்த அகல் விளக்கே - பப்பா!
உன்னைப் பிரிந்து ஓராண்டு கருகி விரைந்ததுவே
ஓராண்டென்ன நூறாண்டுகள் சென்றாலும்
ஆறாதே எம் துயரம்
எம் உயிர் உள்ளவரை பப்பா! உங்கள்
நினைவு எம்மில் என்றும் வாழும்.

இன்று (07.08.2009) வெள்ளிக்கிழமை ஆன்மசாந்தி திருப்பலி அருள் ஆச்சிரமத்திலும், புனித சூசையப்பர் ஆலயத்திலும் காலை 6 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்படும்.


உங்கள் ஆன்மா இறை சந்நிதியில் அமைதியடையட்டும்.

நினைவால் வாடும்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

61/3, ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம். (87601)

---

### 31ஆம் நாள் நினைவலைகள்....



### அமரர் தில்லைநாதர் பத்மநாதர்

தாயின் மடியில் 20.02.1944

ஆண்டவன் அடியில் 08.07.2009

தினமும் உன்
நினைவில் விழித்தோம்
இல்லையென்றானதும்
தவித்தோம்
மறைந்தனை ஆயினும்
உன் நினைவுகள்
என்றும் எம் நெஞ்சில் சுமப்போம்.

பிரிவின் துயரில்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.


நெடுங்குளம் வீதி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம். (87542)

---

### 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு 20 • 12 • 1931

உதிர்வு 08 • 07 • 2009



### அமரர் நமசிவாயம் பொன்னுச்சாமி

(ஓய்வுபெற்ற தொழில் நுட்ப உத்தியோகத்தர்)

எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டு
பிரிந்த எமது குடும்பத் தலைவரின்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் மறைவின்போது எம் துயரத்தில் பங்கெடுத்த சகலருக்கும் எம் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு, இன்று [07.08.2009] வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.


வாதரவத்தை, புத்தூர்.
(87527)

---

### 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 05.09.1950

மறைவு 08.07.2009



### அமரர் தம்பு நடராசா

கடந்த 08.07.2009 புதன்கிழமை இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (07.08.2009) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்.

விநாயகர் வீதி,
நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம். (87528)

---

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
சீவரெட்ணம் சிவபாக்கியம்
(மண்கும்பான்)

அன்னை மடியில் 02 ✶ 09 ✶ 1932

சிவகாமியம்மன் அடியில் 19 ✶ 07 ✶ 2008

திதி: ஆடிமாதம் அபரபக்க துதியை

"தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை"
என்ற சொல்லுக்கு இலக்கணமாய் வாழ்ந்தீர்!
மக்கள், மருமக்கள் என்ற பேதமில்லாமல்
எல்லோரும் உம் பிள்ளையேன்று அரவணைத்தீர்!
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
ஆறாது எம் துயரம்
உடலில் உயிர் உள்ளவரை மறந்திடுமா
உங்கள் நினைவு
எமது அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய
என்றென்றும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவுடன்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

புலவனார் வீதி,
கல்வியங்காடு. (87638)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துப்பாக்கிச் சத்தங்கள் கேட்காத சுபீட்சமான எதிர்காலத்தை ஜனாதிபதி உருவாக்கியுள்ளார்

## யாழ்ப்பாணத்தில் அமைச்சர் பந்துல தெரிவிப்பு



யாழ்ப்பாணம்,ஓக.7

இலங்கைத் தீவில் இனிமேல் என்றுமே துப்பாக்கிச் சத்தங்கள் கேட்காத ஒரு சுபீட்சமான எதிர்காலத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உருவாக்கியிருக்கிறார்.

வர்த்தக மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அமைச்சர் பந்துல குணவர்த்தன இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் உள்ள யாழ்ப்பாணக் கல்லூரியின் உயர் பட்டப்படிப்புகள் நிலையத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள பட்டயக்கணக்காளர் பயிற்சி நெறியினை தொடக்கிவைத்து உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாணக் கல்லூரியின் அதிபர் நோயல் விமலேந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சமூகநலத்துறை மற்றும் சமூகசேவை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பட்டயக் கணக்காளர் சங்கத் தலைவர் நிஷான் பெர்ணான்டோ உள்ளிட்ட குழுவினர் பங்குபற்றினர்.

அமைச்சர் பந்துல குணவர்த்தன அங்கு மேலும் உரையாற்றுகையில் தெரிவித்தவை வருமாறு:

மூன்று தசாப்த காலமாகப் யுத்தச் சூழலில் சிக்கியிருந்த இலங்கைத் தேசத்தினை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தற்போது ஒளிமயமான வரலாற்றுத் தேசமாக மாற்றியமைத்துள்ளார்.

இந்த நாட்டில் சிறுபான்மை இனம் என்றொரு பிரிவு இல்லை. நாம் எல்லோரும் மதம், இனம் எல்லாவற்றையும் கடந்து நிற்கும் ஒரு நாட்டு மக்கள் என்ற உணர்வுகளை உடையவர்கள்.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை தற்போது அமைதியான சூழல் அமைந்திருக்கிறது. மின்சக்தி, கல்வி, போக்குவரத்து, கைத்தொழில் மற்றும் கூட்டுறவு எனப் பல்வேறு அமைச்சர்கள் இங்கு வந்திருக்கிறார்கள்.

அவர்களுடைய வருகை எமக்கு அதாவது குடாநாட்டு மக்களுடைய அபிவிருத்தியில் மாற்றத்தை ஏற்படுத்தும் என்பதில் எவ்விதமான ஐயப்பாடுமில்லை.

தற்போது ஏ-9 ஊடான தரைப்பாதை திறக்கப்பட்டுள்ளது. இதனால் மக்களுக்கு இதுவரை காலமும் ஏற்படுத்தப்பட்டிருந்த போக்குவரத்துத் தடைகள் நீக்கப்பட்டுள்ளன.

இன்று நாம் ஆரம்பித்திருக்கின்ற பட்டயக் கணக்காளர் பயிற்சிநெறி வடக்கில் இதுவே முதல் தடவையாகும். தென்னிலங்கையில் இந்தப் பயிற்சியினைப் பின்பற்றுபவர்கள் எத்தகைய வசதிகளைப் பெற்றிருக்கிறார்களோ அத்தகைய வசதிகளை வடக்கில் உள்ள மாணவர்களுக்கும் வழங்குவதற்கு நடவடிக்கைகளை எடுத்துள்ளோம் - என்றார் அமைச்சர். (1-9)

# இடம்பெயர்ந்த மக்களுக்கான உதவிகளை அதிகரித்துள்ளது உலக உணவுத் திட்டம்

கொழும்பு,ஓக.7

வடக்கின் நலன்புரி நிலையங்களிலுள்ள மக்களுக்கான உதவிகளை உலக உணவுத் திட்டம் அதிகரித்துள்ளது என ரோமிலுள்ள இலங்கைக்கான தூதரகம் தெரிவித்துள்ளது.

ஏற்கனவே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகையை விட 170 கோடியே 9 லட்சம் அமெரிக்க டொலர்கள் மேலதிகமாக ஒதுக்கப்பட்டுள்ளன என உலக உணவுத் திட்டத்தின் பணிப்பாளர் ஜொசிட்டி செரீன் தெரிவித்துள்ளார்.

இதன்படி, 2009ஆம் ஆண்டில் நலன்புரி நிலையங்களிலுள்ள மக்களுக்காக உலக உணவுத் திட்டத்தினால் 134.9 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி செலவிடப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ள சிறுவர்கள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்களுக்கான போஷாக்கு உணவு வழங்குவது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டு வருவதாக உலக உணவு ஸ்தாபனம் தெரிவித்துள்ளது. (அ-சி)

# நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

யாழ்ப்பாணம்,ஓக.7

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவை முன்னிட்டு இந்து கலாசாரத் திணைக்களத்தால் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் திருமதி மகிந்தினி உதயகுமார் தலைமையில் ஆன்மீக நிகழ்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ''கச்சியப்பரும் கந்தபுராணமும்'' என்னும் தலைப்பில் யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் கலாநிதி மா.வேதநாதனின் சிறப்புச் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது. அதனைத் தொடர்ந்து நாவலர் மணி மண்டபப் பண்ணிசைப் பயிற்சி மாணவிகளின் பண்ணிசைக் கச்சேரி நடைபெறும்.

* * *

நல்லூர் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவை முன்னிட்டு தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலய அனுசரணையுடன் நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தின் இசையரங்கு நிழ்வு நடைபெற்று வருகின்றது.

இன்று வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணிக்கு வயலின் கச்சேரி இடம்பெறும்.

வயலின் - ஏ.ஜெயராமன், மிருதங்கம் - எஸ்.துரைராசா, தபேலா - சதாவேல்மாறன், கெஞ்சிரா -செல்வன் வி.சிவ மூர்த்தி, முகர்சிங் - கே.நந்தகுமார்.

* * *

நல்லூர் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவை முன்னிட்டு ஸ்ரீமுத்து விநாயகர் ஆலய மண்டபத்திலகான கதாவாரிதி பிரம்மஸ்ரீ சிவ.வை. நித்தியானந்தசர்மா நிகழ்த்திவரும் கம்பராமாயணம் தொடர் இசைச் சொற்பொழிவு நிகழ்வில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு ''கல் பெண்ணானது'' என்னும் தலைப்பில் இசைச் சொற்பொழிவு இடம் பெறும். (201)






# நல்லூர் பெருந்திருவிழாக் கால உதயனின் சிறப்பம்சம்

## மறந்தன்ரோ! மக்கள் நின்னை

சண்டையோ நடந்த காலம்
சஞ்சலம் நிறைந்த காலம்
மண்மிசை மனது நொந்து
மக்களோ தவித்த காலம்
எண்ணிடில் எட்டிக்க முன்பே
எல்லாமே முடிந்த காலம்
அன்றிருந்த பக்தி கண்டு
அனைவரும் வியந்தார் அன்றோ?
இன்றோ போர் முடிந்ததென்று
இயம்பிடும் இந்தக் காலம்
மண்மிசை பிரதட்டை செய்வோர்
மனமுவந்து அடி அழிப்போர்
பண்ணிசைக் கச்சேரி தன்னை
பாங்குடன் கேட்போர் கூட்டம்
எண்ணிடில் இவைகள் எல்லாம்
ஏனோ மிகக் குறைந்து போச்சு
கண்மணி கடலை விற்பாள்
கண்கலங்கியே கூறலுற்றாள்
உண்மையில் வியாபாரிகள்
உளம்நொந்து வருந்துகின்றார்
மண்ணினில் போரில்லை என்பதால்
மறந்தனரோ? முருகா நின்னை.

- [illegible]

## ஏம் துயர் போக்கியருள்!

பஞ்சமது பறந்தோட
பாவமெலாம் விரைந்தோட
வெஞ்சினமாய் எமை வருத்தும்
வஞ்சகரின் தொல்லைகளகல
குஞ்சரி வள்ளியுடன் வந்தெம்
குறைகளெல்லாம் தீர்த்திடவே
நல்லைப் பதி வீதியதில் நாள்தோறும் உலா வந்து
எம் துயரைப் போக்கியருள் உமை மைந்தா சரவணனே!

- [illegible], யாழ்.பல்கலைக்கழகம்.

## தரணியைக் காத்தருள் கந்தவேளே!

பல்லவி

அருள் வடிவான நல்லூரின் நாயகா
அகிலமே போற்றிடும் ஐயனே அழகா!

அனுபல்லவி

இருளினை நீக்கி ஒளியினைத் தந்து
இந்த உலகினை என்றுமே காத்தருள்...?

சரணம்

தேவரை வருத்திய சூரனை மாய்த்தவனே முருகா
தலைவனாகியே தரணியைக் காப்பவனே!
கார்முகில்கள் சூழ்ந்திங்கு வலம்வரவே – அவை
கலைந்தோட வரமருளி வாழ்வளிப்பாயே!

- என்.பிரதித்தன், கோண்டாவில்.

## மயிலேறி அருள் தாரும் ஐயா!

எடுப்பு

நல்லூரு முருகனையே நாடி ஓடுவோம்
நாலுதிக்கும் அவன் புகழைப் பாடி ஆடுவோம்

தொடுப்பு

எல்லாமே இன்பமயம் என்று பாடுவோம்
இறையருளைப் பெற்றிடவே ஒன்று கூடுவோம்

(நல்லூரு)

முடிப்பு

சங்கிலியன் ஆண்டமண்ணில் அமர்ந் தருள்பவன்
சஞ்சலங்கள் விலக்கிடவே கருணை செய்பவன்
பொங்கரவம் சூடுசிவன் புதல்வ னானவன்
புண்ணியஞ்சேர் நல்லைநகர் முதல்வ னானவன்

(நல்லூரு)

செந்தமிழர் போற்றுமெழில் தெய்வ மானவன்
செங்கதிர்வேல் தாங்கியருள் செய்யும் பாலகன்
பைந்தமிழர் படுமவலந் தீரும் ஐயனே
பச்சைமயில் ஏறியருள் தாரும் ஐயனே!

(நல்லூரு)

- கவிஞர் நயினை இராகுலன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கைதடி ப.நோ.கூ.சங்கக் கட்டடத்தில் சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தால் இலவச நீரிழிவுப் பரிசோதனை நிலையம் ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மாவட்டம் 306 பி I இன் உப ஆளுநர் லயன் எஸ்.ஜெயவத்சலன் பரிசோதனை நிலையத்தை நாடா வெட்டித் திறந்து வைப்பதையும் சிகிச்சை இடம் பெறுவதையும் படங்களில் காணலாம். இந்தச் சிகிச்சை நிலையம் பிரதி சனிக்கிழமை தோறும் காலை 8.30 மணி தொடக்கம் நண்பகல் 12.30 மணிவரை செயற்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

# புலம்பெயர் இலக்கியம் - ஓர் அறிமுகம்

அந்நியப்பட்ட உணர்வு என்பது புலம் பெயர்ந்த ஒவ்வொரு தனிமனிதனுக்கும் உரியது. அதிகம் தனிமையில் வாடும் நிலையில் இந்த அந்நிய உணர்வு மேலோங்குகின்றது. கவிஞரால் செயற்படவோ பேசவோ முடியாத நிலையில் சடப்பொருள்கள் பேசுவதனை இக்கவிதையில் கண்டுகொள்ளலாம்.

ஆழியாளின் கவிதைகளில் அந்நியமும் தனிமையும் வெளிப்படுவதையும் அவதானிக்கலாம். 'மரணம்' என்ற கவிதையில் அவர் தனது தனிமையை வெளிப்படுத்த எடுத்துக்கொள்ளும் உவமை அதிர்ச்சி தரக் கூடியதாக உள்ளது.

*''கலங்கரை விளக்கத்து*
*இரவுக் காவலாளியாகவும்*
*ஆறடிக் குழியுள்*
*மௌனம் புடைசூழ இறக்கப்பட்ட*
*பிணமொன்றைப் போலவும்*
*தனித்தே*
*மிகத் தனித்தே இருக்கின்றேன்.''*

## க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கானது

சிறுகதைகளில் கலாமோகனின் 'உருக்கம்' தொழிற்தள அநுபவத்திற்கு நல்ல உதாரணம். இக்கதை அப்பாவித்தனமான சித்திரிப்பாக அமைந்துள்ளது. காத்தி நல்லையாவின் 'அலையும் தொலைவு' சக்கரவர்த்தியின் 'நானும் ஒகஸ்டினாவும் ஒரு பந்தயக் குதிரையும்' குமார்மூத்தியின் 'கோப்பை' ஆகியனவும் சிறந்த எடுத்துக் காட்டுக்களாகும்.

4. பெண்களின் விழிப்புணர்வு

பெண்களின் சிந்தனை விரிவடைதல், வேலை செய்தல், தனித்து வாழ்தல், புதிய சூழலுக்குத் தம்மைத் தயார்ப்படுத்துதல், அடக்குமுறையை எதிர்த்தல், அனைத்துலக நோக்கு ஆகியவற்றை இந்த வரையறைக்குள் அடக்கலாம்.

ஒடுக்கு முறைகளுக்கும் எதிராகக் குரல் கொடுக்கும் நிலையும், பெண்கள் மத்தியிலும் சமூகத்தின் மத்தியிலும் இருக்கும் கோட்பாடுகளைக் கேள்விக்கு உட்படுத்தும் சந்தர்ப்பங்களும் பெண்களின் படைப்புக்களிலே அவதானிக்க முடிகின்றது.

ரஞ்சனி, மல்லிகா, நிருபா, மைத்திரேயி, பிரதீபா, ஆழியாள் ஆகியோரின் கவிதைகளிலே இதனைக் கண்டுகொள்ளலாம். பெண் கவிஞர்களின் மறையாத 'மறுபாதி' என்ற கவிதைத் தொகுதி இவ்வகையில் முக்கியமானது. இவை தவிர 'ஊடறு', 'பெண்கள் சந்திப்பு மலர்கள்' ஆகியவையும் கவனத்திற்குரியன.

*'சமையல் தொடங்கி படுக்கை வரை*
*இலவச சேவை வழங்கியது போதும்*
*சுமைகளும் துளித்துளியான துன்பத்தின்*
*வெளிப்பாடுகளும் மட்டும் உனதல்ல.*
*சூழவுள்ள சகலவற்றிலும்*
*உனக்கும் சம பங்குண்டு*
*வெளியே வா.'*

' என்ற பாமினியின் கவிதையும் இவ்வகையில் முக்கியமானது.

கதைகளில் சுமதி ரூபனின் 'யாதுமாகி நின்றாள்' புலம்பெயர் சிறுகதைகளில் வித்தியாசமான கதைகளைக் கொண்ட தொகுப்பு. தற்கால இலக்கிய உலகில் பேசப்படும் பெண்ணியச் சிந்தனைகளுடனான பல கதைகள் இத்தொகுப்பில் உள்ளடங்கியுள்ளன. பெண் குடும்ப அமைப்பிலிருந்து வெளியேறி தனித்து வாழ முடியும் என்பதை சில கதைகள் உணர்த்துகின்றன. இவை தமிழ்ச் சூழலில் எவ்வளவு தூரம் சாத்தியம் என்பது கேள்விக்குரியது.

சிறுகதைகளில் 'புது உலகம் எமை நோக்கி' என்ற தொகுப்பும், ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத்தின் பல படைப்புக்களும், நிருபாவின் 'சுணைக்கிது' தொகுப்பும், பெண்களின் விழிப்புணர்வைப் பேசும் தொகுப்புக்களில் முக்கியமானவை. லதா உதயணனின் 'இடம்மாறிப்போன' சந்திரா ரவீந்திரனின் 'பால்யம்' ஆகிய கதைகளையும் இவற்றோடு மேலும் எடுத்துக் காட்டலாம்.

நாவல்கள் பொ. கருணாகரமூர்த்தியின் மாற்றம், முருக பூபதியின் பறவைகள், ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத்தின் லண்டனைக் களமாகக் கொண்ட நாவல்கள் கவனத்திற்குரியன. இவற்றில் பெண்கள் பற்றிய சிந்தனைகளும் அவர்களின் உலகமும் முன்வைக்கப்படுகிறது. கருணாகரமூர்த்தி, முருகபூபதி ஆகியோரின் கதைகளில் வரும் பெண் பாத்திரங்கள் எவ்வளவுதான் பெண் சார்ந்த முற்போக்கு சிந்தனை உள்ளவர்களாக இருந்தாலும் [illegible] மையும் தம் வாழ்வையும் இந்த சமூகத்திற்குள் குறுக்கிக் கொள்பவர்களாவே உள்ளனர். 'உலகமெல்லாம் வியாபாரிகள்' என்ற ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத்தின் நாவல் பெண்ணிலைவாதச் சிந்தனையைக் கொண்டதாக அமைந்துள்ளது.

5. அரசியல் விமர்சனம்

விடுதலை அமைப்புக்களின் முரண்பாட்டைப் பேசுதல் - எதிர்த்தல், வன்முறைகளைப் பேசுதல் - எதிர்த்தல், தலித்தியம் என்பன இந்த வரையறைக்குள் உள்ளடங்குகின்றன.

புலம்பெயர் இலக்கியத்தின் முக்கிய வெளிப்பாடாக ஈழ விடுதலைப் போராட்டம், தமிழ் விடுதலை அமைப்புக்களின் செயற்பாடுகள், அவற்றுக்கு இடையேயான அகமுரண்பாடுகள், என்பவற்றை விமர்சனத்துக்கு உட்படுத்தும் படைப்புகளும், சாதியம், தலித்தியம், மேட்டுக்குடி மனப்பான்மை என்பவற்றைக் கேள்விக்கு உட்படுத்தும் படைப்புகளும் இங்கு முக்கியமானவை.

ஈழத்தில் பேசமுடியாத, எழுதமுடியாத விடயங்கள் எனக் கருதுபவற்றைப் புலம்பெயர் தேசத்தில் இருந்து சுயமாக எழுதுவதற்கு இவை வாய்ப்பளித்துள்ளன. இளைய அப்துல்லாவின் கவிதையொன்று பின்வருமாறு அமைவதனை நோக்கலாம்.

*''சாப்பிடுதல் குடித்தல்*
*புகைத்தல் இன்னும் புணர்தல் போல*
*மிகச் சாதாரணமாய்*
*பிணமும்......*
*சந்திகளில் இருந்துகொண்டு*
*பிணம் பற்றிய பேச்சில்*
*காலம் வெகு*
*இலகுவாகக் கழிகிறது.''*

சிறுகதைகளில் சக்கரவர்த்தியின் 'யுத்தத்தின் இரண்டாம் பாகம்' குமார்மூர்த்தியின் கதைகளும், நாவல்களில் தமிழ்நாட்டில் இருந்து வெளிவந்த கோவிந்தனின் 'புதியதோர் உலகம்', செழியனின் 'ஒரு மனிதனின் நாட்குறிப்பிலிருந்து', சோபா சக்தியின் 'கொரில்லா', 'ம்', ஆகியனவும் விமல் குழந்தைவேலின் 'மண்ணும் மல்லிகையும்' நாவலிலுள்ள சில பகுதிகளும் குறிப்பிடத்தக்கன.

6. அனைத்துலக நோக்கு

மூன்றாம் உலக நாடுகளின் பொதுவான பிரச்சினைகளைப் பேசுதல், உலகநோக்கு என்பன இந்த வரையறைக்குள் உள்ளடங்குகின்றன.

கவிதைகளின் பாடுபொருளில் அனைத்துலக நோக்கினை வெளிப்படுத்தும் நிருபாவின் கவிதை வரிகள் பின்வருமாறு அமைவதனை நோக்கலாம்.

*''என் மகள்*
*வளர்ந்தவளானாள்*
*வினாக்களை வரிசையாக*
*அடுக்கினாள்*
*அம்மா*
*நாங்கள் ஏன்*
*அகதிகளானோம்?*
*என் தாய் நாடு எங்கே?*
*என் தாய் மொழி எது*
*நாங்கள் ஏன்*
*கறுப்பர்களானோம்?*
*அவர்களால் ஏன்*
*ஒதுக்கப்படுகிறோம்*
*துருக்கித் தோழி*
*ஏன் எரிக்கப்பட்டாள்?''*

தமிழ்ப் படைப் புலகத்திற்கு ஒரு விரிந்த களத்தைக் கொடுத்தவர்களில் அ.முத்துலிங்கம் மிக முக்கியமானவர். இவரின் படைப்புக்களினூடாக புறவுலக வாழ்வுச் சித்திரிப்பு குறிப்பாக உலகின் பல பாகங்களி[illegible] இடங்களில் தான் எதிர்கொள்ளும் புதிய சூழல்களையும், புதிய அனுபவங்களையும் தமிழுக்குக் கொண்டு வருகின்றார். இவரின் படைப்புக்களின் களம் மிக விரிந்தது. உதாரணம் 'நாளை' என்ற கதை உலகில் போராலும் புலப்பெயர்வாலும் சிதைவடைந்து போன சிறுவர்களின் நிலையை வெளிப்படுத்துகின்றது. மிக விரிந்த தளத்தில் தனது கதைகள் சிலவற்றைத் தந்த ஆசி கந்தராஜாவும் இங்கு இணைந்து வரக்கூடியவர்.

முடிவுரை

1980 களின் பின்னர் தோற்றம் பெற்ற 'புலம்பெயர் இலக்கியம்' கவிதை, சிறுகதை, நாவல் ஆகிய வடிவங்களில் ஈழத்திலக்கியத்தின் தொடர்ச்சியாக வளர்ச்சியடைந்து வருகின்றது. புதிய வாழ்வனுபவங்கள், புதியகளங்கள் புதிய வடிவம் என்பன புலம்பெயர் இலக்கியத்தின் வித்தியாசமாக நோக்கப்படுகின்றது.

அனைத்துலகப் பரப்பில் நின்று கொண்டு புலம்பெயர்ந்த படைப்பாளிகள் இலக்கியம் படைப்பதனால் தமிழ் வாழ்வு ஏனைய இலக்கியங்களுடன் உறவாடும் நிலையை தற்காலத்தில் ஏற்படுத்தி வருகின்றது. இதற்குரிய தொடக்கப் புள்ளிகளாக புலம்பெயர்ந்தவர்களால் மேற்கொள்ளப்படும் மொழிபெயர்ப்பு முயற்சிகளைக் கூறிக்கொள்ளலாம். இது எமது தமிழ் வாழ்வனுபவம் அனைத்துலகுக்குக் கொண்டு செல்வதற்குரிய வாய்ப்பை ஏற்படுத்தும் என எண்ணலாம். எனினும் தமிழ்மொழி, தமிழ் அடையாளம், தமிழ்ப் பண்பாடு ஆகிய விடயங்களை புலம்பெயர் வாழ்வுலகு கேள்விக்குரிய களங்களாக மாற்றியுள்ளமை அறிஞர்கள் மட்டத்தில் பெருத்த விவாதத்தை ஏற்படுத்தி வருகின்றது.

சு.குணேஸ்வரன்
ஆசிரியர்,
வ/அம்பன் அ.மி.த.க. பாடசாலை.

(முற்றும்).

பாராட்டி வாழ்த்துகின்றோம்



திருமதி கெனத் ஸ்ரீதயானந்தி LL.B(OUSL)

அவர்கள் இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் உயர்நீதிமன்ற பிரதம நீதியரசர் கௌரவ அசோக டீ சில்வா முன்னிலையில் 29.07.2009 அன்று உயர்நீதிமன்ற சட்டத்தரணியாகச் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியின் பழைய மாணவியும் யாழ். ICRC யின் நிர்வாக உத்தியோகத்தரும், திரு.திருமதி ஆர்.வீ.கந்தசாமியின் J.P. கனிஸ்ட புத்திரியும் ஆவார்.

அவர் மென்மேலும் உயர்ச்சிபெற்று நற்பணி புரிய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்.

819/1, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (87632) குடும்பத்தினர்.

COMPUTER EXPRESS
Institute of Information Technology
No 167, Kasthuriyar Road, Jaffna. 0212228250

கணக்கியல்துறை ஆர்வலர்களுக்காக!
முதன்முறையாக தமிழ்மொழி விளக்கத்துடன்!
கம்பனிக்கணக்குகளுடன், VAT இனையும் உள்ளடக்கி
Diploma in Computerized Accounting
உங்கள் நிறுவன கணக்குகளை நீங்களே கணனிமயப்படுத்தும்படியான
100% செய்முறைப்பயிற்சியுடன்..
சர்வதேச ரீதியில் முன்னணியிலுள்ள கணக்கியல் மென்பொருட்களான
Quick Book + ACCPAC + MYOB
ஆகியவற்றினூடாக கற்பிக்கப்படும்

| | |
|---|---|
| I :- 08/08/2009 3PM / 4PM | III :-11/08/2009 10AM / 2PM |
| II :- 09/08/2009 3PM / 4PM | IV :-13/08/2009 10AM / 2PM |

நெஞ்சகலா நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி
அருந்தவஈஸ்வரி
இரகுநாதன்



பூவுலகில்: 07-04-1919
தேவவுலகில்: 22-07-2005

திதி: ஆடி அபரபக்க துதியை
07.08.2009 வெள்ளிக்கிழமை

எமக்கு நிழல் கொடுத்த தாயே!
தங்கள் நினைவில் வாடுகின்றோம்.
உங்கள் ஆத்மா சாந்திபெற
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உடையார் வீடு,
சங்கரத்தை,
வட்டுக்கோட்டை.

அன்பு மகள்,
செல்வி செந்திற்செல்வம் இரகுநாதன்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

(87534)

நெஞ்சை விட்டு நீங்காத
31ஆம் நாள் நினைவுப் பிரார்த்தனை



செல்வன்
கிருஷ்ணலிங்கம்
அனுஷன்

தாயின் மடியில்
10-07-2008

மண்ணின் மடியில்
08-07-2009

பிரான்பற்று, பண்டத்தரிப்பைச் சேர்ந்த திரு.திருமதி கிருஷ்ணலிங்கம் (உப.அஞ்சல் அதிபர், பிரான்பற்று) கலையரசி (ஆசிரியை, யா/பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலை) தம்பதிகளின் அன்புச் செல்வம் அனுஷனின் 31ஆம் நாள் நினைவாக இன்று (07.08.2009) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் பிரார்த்தனையிலும், மதியபோசனத் திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.


மங்களா ஸ்ரோர்ஸ்,
பண்டத்தரிப்பு. (87645)

என்றும் உன் நினைவால் துயருறும்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

36. நீள் கதிரையொன்றில் மூன்று பிள்ளைகள் உட்கார்ந்திருக்கின்றனர். பியலின் வலது கைப்பக்கத்தில் சுனிலும், சுனிலின் வலது கைப்பக்கத்தில் கசுனும் உட்கார்ந்திருக்கின்றனர். மத்தியில் (நடுவில்) உட்கார்ந்திருப்பவர யார்?
i) பியல் ii) சுனில் iii) கசுன்

**கடையொன்றிலுள்ள பழங்கள் பற்றிய விபரம் அருகேயுள்ள படத்தில் காட்டப்பட்டுள்ளது. அதனைக்கொண்டு வினாக்களுக்கு விடையளிக்க.**




37. கடையிலுள்ள தோடம்பழங்களின் தொகை 30 ஆயின், அன்னாசிப் பழங்களின் தொகை யாது?
..........................................................

38. ஒரே அளவான பழங்கள் எவை?
..........................................................

**சரியாகச் சொற்கள் கூட்டப்பட்டுள்ள வாக்கியத்தைத் தெரிவுசெய்து அதன் கீழகீறிடுக.**

39. (1) காட்டினுள் தண்ணீர் முயலொன்று தேடி ஓடியது.
(2) முயலொன்று காட்டினுள் தண்ணீர் தேடி ஓடியது.
(3) காட்டினுள் முயலொன்று தண்ணீர் ஓடியது தேடி.

40. (1) சிறுவன் நிழலுக்கு தனது ஏமாந்தான்.
(2) தனது சிறுவன் நிழலுக்கு ஏமாந்தான்.
(3) சிறுவன் தனது நிழலுக்கு ஏமாந்தான்.

நன்றி: ஸத்தர, லக்விந்து, ஜகத்தா, மிஹிர, ஷிஷ்யத்வ.

*தொகுப்பாசிரியரும் மொழிபெயர்ப்பாளரும் -*
**இஸ்மாயில் எம். பைரூஸ்**
(கொழும்பு)

**அன்பு மாணவர்களே!**
இப்பகுதியில் உள்ள வினாக்கள் தொடர்பாக ஏதாவது சந்தேகங்கள், தெளிவின்மைகள் இருப்பின் கீழ்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு தெரிவித்தால் உரிய ஆசிரியர் மூலம் தெளிவுபடுத்தப்படும். 021-2229933 / 071-6850005 / 071-4273035

# பாக்.-இலங்கை அணிகள் மோதும் நான்காவது ஒருநாள் போட்டி இன்று

இலங்கை-பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான 4ஆவது ஒருநாள் போட்டி இன்று மாலை 2.30 மணிக்கு கொழும்பு ஆர்.பிரேமதாஸா விளையாட்டரங்கில் ஆரம்பமாகவுள்ளது. இப்போட்டி பகல்-இரவுப் போட்டியாக இடம்பெறும்.

இலங்கைக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடிவரும் பாகிஸ்தான் அணி, டெஸ்ட், ஒருநாள் (50 ஓவர்கள்) மற்றும் 'ருவென்ரி-20' போட்டிகளில் பங்குபற்றுகிறது.

இதில் இலங்கையுடனான 3 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடர் நடந்து முடிந்துவிட்டது. இத்தொடரை 0-2 என்ற கணக்கில் பாகிஸ்தான் அணி இழந்திருந்தது.

பின்னர் 5 ஒருநாள் போட்டிகளைக் கொண்ட தொடரில் ஏற்கனவே 3 போட்டிகள் முடிவடைந்துவிட்டன. அதில் இலங்கை அணி 3-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கின்றது. அது மட்டுமன்றி தொடரையும் கைப்பற்றிவிட்டது.

இந்நிலையில் இன்று நடைபெறவுள்ள 4ஆவது ஒருநாள் போட்டி வெறும் சம்பிரதாயபூர்வமான போட்டியாகவே அமையும்.

எனினும், பாகிஸ்தான் அணி இன்றும், எஞ்சியிருக்கும் போட்டியிலும் வென்றால் ஓரளவு ஆறுதலான நிலைக்கு அதாவது ஆறுதல் வெற்றியைப் பெறமுடியும்.

எனவே, பாகிஸ்தான் அணி இன்றைய போட்டியில் போராடும் என்பதில் ஐயமில்லை.

இதேவேளை, இலங்கை அணி தொடரைக் கைப்பற்றியிருந்தாலும் எஞ்சியிருக்கும் போட்டிகளையும் வென்று ஒருநாள் தொடரை வழித்துத் துடைக்கவே விரும்பும். எனவே, இன்றைய போட்டியும் ஓரளவு விறுவிறுப்பாகவே அமையும். ஆனாலும், இது கிண்ணத்திற்கான போட்டியாக அமையாது என்பது குறிப்பிடத்தக்கது.

## வான்கூவர் ரென்னிஸ்:
# 2ஆவது சுற்றில் சானியா

வான்கூவரில் நடைபெற்றுவரும் சர்வதேச ரென்னிஸ் கூட்டமைப்பு ரென்னிஸ் தொடர் மகளிர் முதல் சுற்றுப் போட்டியில் இந்தியாவின் சானியா மிர்ஷா அமெரிக்க வீராங்கனையான மல்லோரி செஸில் என்பவரை 6- 4, 7- 5 என்ற செற்களில் வீழ்த்தி 2ஆவது சுற் றுக்கு முன்னேறினார்.

அடுத்த சுற்றில் சானியா மிர்ஷா அமெரிக்க வீராங்கனையான லாரா கிரான் விலைச் சந்திக்கிறார்.

முன்னதாக ஜப்பானிய வீராங்கனையான ஐகோ நகமுரா 3ஆவது செற்றின் போது உடல் நலக் கோளாறு காரணமாக போட்டி யிலிருந்து திடீரென விலகினார். இதனால் கிரான்வில் வெற்றி பெற்றார்.

## ஆஷஸ் 4ஆவது டெஸ்ட் போட்டி இன்று ஆரம்பம்
# ஆஸி.-இங்கிலாந்து பலப்பரீட்சை

இங்கிலாந்து-அவுஸ்திரேலிய அணிகள் மோதிக்கொள்ளும் ஆஷஸ் தொடரின் நான்காவது போட்டி இன்று இலங்கை நேரப்படி காலை 11 மணிக்கு ஆரம்பமாகிறது.

இங்கிலாந்து-அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த தொடரான ஆஷஸ் தொடரில் 5 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடர் தற்போது நடைபெற்றுவருகின்றது.

இந்தத் தொடரில் 3 போட்டிகள் ஏற்கனவே முடிந்துவிட்டன. இந்தப் போட்டிகளில் முதல் போட்டி சமனிலையில் முடந்தது. இரண்டாவது போட்டியை இங்கிலாந்து அணி வெற்றிகொண்டது. 3 ஆவது போட்டியும் சமனிலையில் முடிய, தொடரின் எதிர்பார்ப்பு மிகவும் அதிகரித்துள்ளது.

அதாவது, இன்று ஆரம்பமாகும் 4 ஆவது போட்டியில் ஏற்கனவே முன்னிலையில் உள்ள இங்கிலாந்து அணி வெற்றி பெற்றுவிட்டால் தொடரை இங்கிலாந்து அணி கைப்பற்றிவிடும். அவுஸ்திரேலிய அணி வென்றால் 1-1 எனத் தொடரைச் சமனிலைப்படுத்தி இறுதியாக இருக்கும் ஒரு போட்டியில் வெல்வதற்குப் போராடலாம்.

எனவே, இன்று ஆரம்பமாகும் போட்டியில் சிறப்பாகச் செயற்பட்டால் தொடரைக் கைப்பற்றிவிடலாம்-அதேவேளை தோற்றால் இறுதிப் போட்டியில் தொடரை இழக்கவும் நேரிடலாம் அல்லது சமனிலையில் முடித்துவிட நேரிடலாம் என்ற நிலைப்பாட்டிலும் இங்கிலாந்து அணி உள்ளது.


அதேவேளை, இந்தப் போட்டியில் தோற்றுவிட்டால் தொடரை இழந்துவிடும்-அல்லது சமனிலைப்படுத்தினால் இறுதியாக எஞ்சியிருக்கும் ஒரு போட்டியில் வென்றாலும் தொடரைக் கைப்பற்ற முடியாது என்ற நிலையில் இன்றைய போட்டியை வென்றே ஆகவேண்டும் என்ற முனைப்பில் அவுஸ்திரேலிய அணியும் உள்ளது.

எனவே, இன்று ஆரம்பமாகும் இந்தப் போட்டியின் முடிவுகள் இரு அணிகளையும் பாதிக்கக்கூடியதாகவே இருக்கும். ஆதலால், இரு அணிகளுக்கும் இந்தப் போட்டி மிக முக்கிய கட்டப் போராட்டக்களமாகவே இருக்கப்போகிறது. இந்தப் போட்டியில் இரு அணிகளும் நீயா-நானா என்ற நிலைப்பாட்டுடன் மோதும். அதனால், இந்தப் போட்டியில் விறுவிறுப்புக்குப் பஞ்சமிருக்காது.



இங்கிலாந்து அணியின் சகலதுறை வீரரான பிளின்ரொப் காயம் காரணமாகத் தவித்து வருகிறார். இந்நிலையில், இன்றைய போட்டியில் அவர் பங்குபற்றுவது சந்தேகமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும், அவர் நேற்றுமுன்தினம் பயிற்சியில் ஈடுபட்டார். அப்போது அவருக்கு பயிற்றுவிப்பாளர் சிகிச்சையளித்தபோது...

# சிலிக்சை வீழ்த்தினார் சோம்தேவ்!



வாஷிங்டன், ஓக. 07

அமெரிக்காவில் நடந்து வரும் சர்வதேச ரென்னிஸ் போட்டியில் குரோஷ்ய வீரரான மரின் சிலிச்ஸை வீழ்த்தி சென்னை ஓபனில் அடைந்த தோல்விக்கு இந்திய வீரர் சோம்தேவ் பழிதீர்த்துக் கொண்டார்.

லெக் மாசோன் ரென்னிஸ் கிளாஸிக் போட்டி அமெரிக்காவின் வாஷிங்டன் நகரில் நடந்து வருகிறது. இதில் தகுதிச் சுற்றின் மூலம் பிரதான சுற்றுக்குள் நுழைந்த இந்திய இளம் நட்சத்திர வீரர் சோம்தேவ் தேவ்வர்மன் நேற்றுமுன்தினம் தனது 2ஆவது சுற்றில் உலகத் தரவரிசையில் 15 ஆவது இடத்தில் உள்ள குரோஷ்யாவின் மரின் சிலிச்ஸை எதிர்கொண்டார்.

சிலிச்ஸிற்கு எதிராக சிறப்பாக ஆடிய 24 வயதான சோம்தேவ் 7-5, 6-4 என்ற நேர் செற் கணக்கில் அவரை வீழ்த்தினார். இந்த ஆட்டம் 1 மணி 42 நிமிடங்கள் நடந்தது.

# பாகிஸ்தான் அணி வீரர்களுடன் இந்தியத் தரகர்கள் தொடர்பு?
## சல்மான் அகமது புதிய தகவல்

கராச்சி, ஒக். 07

பாகிஸ்தானில் மீண்டும் கிரிக்கெட் சூதாட்டப் புயல் வீசுகிறது. இலங்கைத் தொடரின்போது தங்களது வீரர்களை இந்திய சூதாட்டத் தரகர்கள் தொடர்பு கொண்டனர் என அதிரடியாகக் குற்றம் சாட்டியுள்ளது பாகிஸ்தான்.

இலங்கையுடனான டெஸ்ட், ஒரு நாள் தொடரை பரிதாபமாக இழந்தது பாகிஸ்தான். 'ருவென்ரி-20' உலகக் கிண்ணத்தை வென்ற பாகிஸ்தான் அணி படுமோசமாக ஆடியது ரசி[illegible] அளித்தது.

இந்தச் சூழலில் கொழும்பில் உள்ள தாஜ் சமுத்திரா ஹோட்டலில் தங்கிய வீரர்களை சூதாட்டத் தரகர்கள் தொடர்புகொண்டனர் என பாகிஸ்தான் அணியின் இயக்குநர் யாவர் சயீத் கூறியுள்ளார். முன்னர் இதே கருத்தை முன்னாள் தெரிவுக்குழுத் தலைவர் அப்துல் காதர் தெரிவித்திருந்தார். இதனால், பிரச்சினை பெரிதானது.

தற்போது பாகிஸ்தான் வீரர்களின் தொடர்பாளரரான சல்மான் அகமது புதிய தகவலைத் தெரிவித்துள்ளார்.

கிரிக்கெட் போட்டிகளின்போது இந்தியா [illegible] சூதாட்டத் தரகர்களைத் தொடர்ந்து பார்க்கமுடிகிறது எனக் கூறியுள்ளார். இவர்கள்தான் கொழும்பு ஹோட்டலிலும் தங்கியிருந்தனர் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கூறியவை வருமாறு:-

''சந்தேகப்படக்கூடிய சில சூதாட்டத் தரகர்களைத் தொடர்ந்து கிரிக்கெட் போட்டிகளின்போது பார்க்கிறேன். தென்னாபிரிக்கத் தொடர், ஆசியக் கிண்ணம், இந்தியன் பிரிமியர் லீக் மற்றும் கொழும்பில் நடந்த போட்டிகளின்போது இந்த நபர்களைப் பார்த்தேன். இவர்களது முகங்களைப் பார்த்தால் இந்தியர்கள் என்பது தெளிவாகத் தெரியும். விரைவில் கொழும்பு செல்ல உள்ளேன். அதே நபர்கள்தான் என்பதை உறுதி செய்ததும் சம்பந்தப்பட்ட அமைப்பிடம் முறைப்பாடு செய்வேன்''- என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களை நிரந்தர எதிரிகளாக்கவே யுத்த வெற்றியைப் பயன்படுத்துகிறது அரசு

## யாழ்.பல்கலை ஆசிரியர்களின் அமைப்பு குற்றம் சுமத்துகிறது

கொழும்பு,ஓக.7

சிறுபான்மையினரைத் தமது நிரந்தர எதிரிகளாகப் பேணும் தங்களது கொள்கைப் போக்கு நிகழ்ச்சி நிரலை முன்னெடுப்பதற்கு வாய்ப்பான சந்தர்ப்பமாகவே இந்த யுத்த வெற்றியை ஆட்சியில் இருப்போர் வசமாகப் பயன்படுத்துகின்றனர்.

- மனித உரிமைகளுக்கான யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆசிரியர் அமைப்பு இப்படித் தனது பிந்திய அறிக்கையில் குற்றம் சுமத்தியிருக்கின்றது.

இலங்கையில் இன ரீதியிலான அரசியல் மேலும் ஆழமாக வேரூன்றுவதைத் தடுப்பதற்கு -

மூதூர் படுகொலைகள் உட்பட ஏனைய பல படுகொலைகளுக்குப் பின்னாலுள்ள உண்மைகளைக் கண்டறிவதற்கான உரிய விசாரணைகள் அவசியம் என்றும் அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

அவர்களைப் பொறுத்தவரை யுத்தமும், அதன் முடிவும் அவர்களின் கொள்கைப் போக்கு நிகழ்ச்சி நிரலுக்கு ஒரு வாய்ப்பான சந்தர்ப்பத்தை வழங்கியிருப்பதாகவே அவர்கள் கருதுகின்றனர். சிறுபான்மையினரைப் பலவீனப்படுத்துதல், அவர்களை நிரந்தர எதிரிகளாகவே கருதுதல், நூற்றாண்டுகளாக அவர்கள் வாழ்ந்து வந்த அவர்களின் பாரம்பரிய தாயக பூமியில் இருந்து அவர்களை வேரடி மண்ணோடு வெளியேற்றுதல் போன்ற கொள்கைப் போக்கு நிகழ்ச்சித் திட்டத்தை முன்னெடுக்கவே இச்சந்தர்ப்பத்தை அவர்கள் பயன்படுத்துகின்றனர் - என்றும் அந்த அமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது.

மூதூரில் பட்டினிக்கு எதிரான அமைப்பின் பணியாளர்கள் படுகொலை செய்யப்பட்டமை குறித்த தனது புதிய அறிக்கையிலேயே மனித உரிமைகளுக்கான யாழ். பல்கலைக்கழக ஆசிரியர்கள் அமைப்பு இப்படித் தெரிவித்துள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

இலங்கை இராணுவத்தின் விசேட படைப்பிரிவின் பிரசன்னத்தில் பொலிஸாரும், முஸ்லிம் ஊர்காவலர் ஒருவரும் இவர்களை இலக்கு வைத்துக் கொலை செய்தமையை சகல சாட்சியங்களும் உறுதி செய்கின்றன.

இவ்வாறான முன்கூட்டியே திட்டமிடப்பட்ட கொலையில் அரசிற்கு குற்றவாளிகளை இனம் காணவேண்டிய பொறுப்பு உண்டு. உரிய தகவல்களை சுயாதீனமாக ஆராயவேண்டிய அவசியமும் உள்ளது.

அரசு தனது கடமையை நிறைவேற்றத் தவறியுள்ளதுடன், ஜனாதிபதி ஆணைக் குழுவின் உண்மையைக் கண்டறியும் நடவடிக்கைகளுக்கும் முட்டுக்கட்டை விதித்துள்ளது.

தற்போது இந்தப் பணியாளர்கள் பணிபுரிந்த அமைப்பை நோக்கிக் குற்றச்சாட்டு சுமத்தப்படுகின்றது. அந்த அமைப்பு பொறுப்பற்ற விதத்தில் நடந்துகொண்டது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இது அரசு தனது கடமைப் பொறுப்பிலிருந்து கவனத்தைத் திசை திருப்பும் முயற்சியாகும். மனிதாபிமானப் பணியாளர்கள் கொலை செய்யப்பட்டமைக்கு யார் காரணம் என்பதை உறுதி செய்வதற்கு பட்டினிக்கு எதிரான அமைப்பு செயற்பட்ட விதம் குறித்து ஆராயத் தேவையில்லை.

அரசு சமீபத்தில் இந்தக் குற்றங்களுக்கு விடுதலைப் புலிகளே காரணம் என ஜனாதிபதி ஆணைக்குழு கண்டுபிடித்துள்ளதாகத் தெரிவித்துள்ளதாலும் -

மேலும் எமது முன்னைய கண்டுபிடிப்புகளை மூடிமறைக்க ஆணைக்குழு முயல்வதாலும் -

நாங்கள் புதிய ஆதாரங்கள் மற்றும் இவை குறித்த ஆராய்வுகளுடன் எமது முன்னைய அறிக்கைகளை முழுமையாகப் பரிசீலித்தோம்.

மூன்று வருடங்களுக்கு முன்னர் 2006 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 4 ஆம் திகதி மாலை 4.15 மணியளவில் 16 தமிழ் மனிதாபிமானப் பணியாளர்களும் மற்றும் முஸ்லிம் பணியாளர் ஒருவரும் முழங்காலில் இருக்கச் செய்யப்பட்டு அங்கு படுகொலை செய்யப்பட்டனர்.

இவர்கள் தற்செயலாகத் துப்பாக்கிச் சூட்டின் இடைநடுவில் சிக்கியவர்கள் அல்லர். அல்லது தவறுதலாகப் போராளிகள் எனக் காணப்பட்டு சுடப்பட்டவர்களும் அல்லர்.

17 மனிதாபிமானப் பணியாளர்களும் இராணுவத்தினரின் விசேட படைப்பிரிவினரின் முன்னிலையில் ஜஹான்கீர் எனும் முஸ்லிம் ஊர்காவலராலும் சுஜந்த, நிஸந்த என்ற இரு பொலிஸாராலும் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்ற எமது முந்தைய அறிக்கைகளை எமது தற்போதைய கண்டுபிடிப்புகள் உறுதி செய்துள்ளன.

கொலை செய்வதற்குப் பயன்படுத்தப்பட்ட துப்பாக்கி ரவைகளை மறைப்பதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சிகள் தொடர்பாகவும் நாம் முன்னர் தெரிவித்த விடயங்கள் சரியானவை என இப்போது உறுதியாகியுள்ளது.

ஆணைக்குழுவின் பொலிஸ் விசாரணைப் பிரிவு சாட்சிகளை அச்சுறுத்துவதற்காகப் பயன்படுத்தப்பட்டது. இதன் மூலம் உண்மை வெளிவராமலிருப்பது உறுதி செய்யப்பட்டது.

வெளிநாடுகளுக்கு உயிர் அச்சம் காரணமாகத் தப்பிச் சென்ற சாட்சிகளிடமிருந்து வீடியோ மூலம் வாக்குமூலங்களைப் பெறுவதை நிறுத்துமாறு விடுக்கப்பட்ட உத்தரவும் உண்மைகளை மூடிமறைப்பதற்கான மற்றுமொரு நடவடிக்கையாகும்.

திருகோணமலையில் வாழமுடியாத அளவிற்கு கொலை செய்யப்பட்டவர்களின் குடும்ப அங்கத்தவர்கள் துன்புறுத்தப்பட்டுள்ளனர்; அச்சுறுத்தப்பட்டுள்ளனர். - என்று உள்ளது. (சி)

## யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியில் நினைவுப் பேருரை

யாழ்ப்பாணம்,ஓக.7

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் ஒன்பதாவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு நடைபெறும் இரண்டாவது நினைவுப்பேருரை இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்குக் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நினைவுப் பேருரையை ஐ.ஐ.எஸ். நிறுவன பிரதான இயக்குநர் குலரட்ணம் விக்னேஸ் ''இலங்கையில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பமும் நிறுவனங்களில் அவற்றின் பயன்பாடும்'' என்னும் தலைப்பில் நிகழ்த்தவுள்ளார். (203)

## தங்கநகை கண்டெடுப்பு

யாழ்ப்பாணம்,ஓக.7

நல்லூருக்கும் நீர்வேலிக்கும் இடையில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை கைச்செயின் ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.

உரியவர்கள் ''புனித அந்தோனியார் ஆலயம், 4ஆம் குறுக்குத்தெரு, பருத்தித்துறை'' என்னும் முகவரியில் தொடர்பு கொண்டு ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (201)

ALLIANCE FRANCAISE DE JAFFNA
61, Kachchery - Nallur Road, Jaffna
Phone: 021 2228093
E-Mail: alliancejaffna@yahoo.com

Learn French the French Way
French Classes

இலங்கையிலுள்ள French Embassy மூலமும், Franceஇலுள்ள Alliance Francaise de Parisஇன் ஊடாகவும் சர்வதேச மொழியான பிரெஞ்சு மொழி வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

சிறுவர்கள், பாடசாலை மாணவர்கள், உயர்கல்வி கற்போர், அலுவலர்கள், ஆசிரியர்கள் மொழி பயில ஆர்வமுள்ள எவரும் கற்கலாம்.

புதிய பிரிவுகளுக்குரிய பதிவுகளைத் தற்போது மேற்கொள்ளலாம்.

கட்டண, மேலதிக விவரங்கள்: நேரில்/தொலைபேசியினூடாகப் பெறலாம். (87651)

உங்களின் தோல் சுருக்கமடைகிறதா?
இதோ பாவியுங்கள்...
சந்தனாலேப்ப ஸ்கிரப் கிறீம்

சந்தனாலேப்ப ஸ்கிரப் கிறீம்
Chandanalepa Scrub Cream
100% herbal
'சிவா நறுமணப் பூங்கா'
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சகல பார்மசிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்).
MANUFACTURED BY: SAN JEEWAKA AYURVEDIC PRODUCTS
VEYANGODA, SRI LANKA. AYY PRO NO: REG NO. A/L 250.

சேவை நலன் பாராட்டு



உயர்திரு. சுந்தரமூர்த்தி சிவபாதரத்தினம்
S.L.T.S. -I
(ஓய்வுபெற்ற அதிபர், யா/கீரிமலை நகுலேஸ்வர மகாவித்தியாலயம், முன்னாள் சாரண மாவட்ட ஆணையாளர், காங்கேசன்துறை)

சேவை விவரம்
1. முதல் நியமனம்:- க/கலேகல்ல தோ.த.க பாடசாலை -11.08.1968 - 31.02.1976
2. ஆசிரிய பயிற்சி:- யா/கொழும்பகம் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை, கொழும்புத்துறை 01.03.1976-31.12.1977
3. ஆசிரியர்:- க/கலேகல்ல தோ.த.க.பாடசாலை, மெதமஹாநுவர 01.01.1978-04.10.1978
4. அதிபர்:- க/ரெம்பிற்ல்ஸ் டோவ் அரசினர் தமிழ் வித்தியாலயம், றொசல்ல 05.10.1978 - 14.03.1985
5. ஆசிரியர் - யா/கீரிமலை நகுலேஸ்வர மகாவித்தியாலயம்-15.03.1985 - 31.12.1990
உப அதிபர் - 01.01.1991 - 29.12.1996
6. அதிபர் - யா/கீரிமலை நகுலேஸ்வர மகாவித்தியாலயம்- 30.12.1996 - 16.05.2009

அதிபராய் நல் ஆசானாய் உயர்ந்த நீர் வான் புகழ் பெற்று நீடு வாழியவே

குறிப்பு: 09.08.2009 ஞாயிற்றுக்கிழமை சேவைநலன் பாராட்டு விழா பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

விளம்பர அனுசரணை:
கிருத்திகா என்ரர்பிறைஸ்
KIRTHIGA ENTERPRISE
இல.52, சிவன் வடக்கு வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 021 2225222

வாழ்த்துவோர்:
பாடசாலைச் சமூகம்,
யா/கீரிமலை நகுலேஸ்வர
மகாவித்தியாலயம்.
(87648)

10 ஆவது பிறந்த நாள் வாழ்த்து




''கர்த்தர் எனக்காக யாவையும் செய்து முடிப்பார்; கர்த்தாவே, உமது கிருபை என்றுமுள்ளது
உமது கரத்தின் கிரியைகள் நெகிழ விடாதிருப்பீராக''
சங்கீதம் 138:8

ஜேர்மன் - Berlin னைப் பிறப்பிடமாகக் கொண்ட பாஸ்டர் டானியல் ஸ்ரீகணேசரட்ணம் - சிந்துஜா தம்பதியரின் செல்வப் புதல்வி சாரா ஸ்ரீகணேசரட்ணம் தனது 10ஆவது பிறந்தநாளை இன்று (07.08.2009) வெள்ளிக்கிழமை அப்பம்மாவின் இல்லத்தில் வெகுசிறப்பாகக் கொண்டாடுகிறார்.

இவரை அன்பு அப்பா, அம்மா, அப்பம்மா, அம்மப்பா, மாமாமார், மாமிமார், தங்கைமார், தம்பிமார், மச்சான்மார், மச்சாள்மார் பெரியப்பா, பெரியம்மா மற்றும் சபை ஊழியர்கள், விசுவாசிகள், I.C.M. Ministry அனைத்து ஊழியர்களும், உற்றார், உறவினர்கள் அனைவரும் பல்கலையும் கற்று தேவ ஆசீர்வாதத்தோடு பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகிறோம்.

அப்பம்மா.

418, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 6821
(87657)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவின் மிரட்டலுக்குப் பயந்து நாம் ஒருபோதும் அடிபணிய மாட்டோம்

## இரண்டாம் முறையாக பதவியேற்ற ஈரானிய ஜனாதிபதி சூளுரை



தெஹ்ரான், ஓக. 07

"அமெரிக்காவின் மிரட்டலுக்குப் பயந்து நாம் ஒருபோதும் அடிபணிய மாட்டோம்" என ஈரானின் ஜனாதிபதியாக இரண்டாவது முறையாக புதன்கிழமை பதவியேற்றுக்கொண்ட அஹ்மதி நிஜாத் தாம் நிகழ்த்திய முதல் உரையின்போது குறிப்பிட்டார்.

"ஆதிக்க சக்திகளால் சர்வதேச அளவில் பாகுபாடு நிலவுகிறது. இந்த பாகுபாட்டைக் களைந்து அனைத்து நாடுகளும் பயன்பெறும் வகையிலான முயற்சிகளை ஈரான் மேற்கொள்ளும். ஈரானின் வெளியுறவுக் கொள்கை அணுசக்தி திட்டங்களை மையமாகக் கொண்டுள்ளது. இது மேற்கத்திய நாடுகளுக்கு கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது" என்றும் அவர் கூறினார்.

"ஈரான் தனது அணுசக்தி திட்டங்கள் மூலம் அணுஆயுத கட்டமைப்பை வலுப்படுத்திவிடுமோ என்ற பயம் மேற்கத்திய நாடுகளை கவ்விக்கொண்டுள்ளது. வரும் காலத்திலும் ஈரானின் தற்போதைய வெளியுறவுக் கொள்கையே தொடரும். இதில் எவ்வித மாற்றமும் இருக்காது" என்றும் அஹ்மதிநிஜாத் தெரிவித்துக்கொண்டார்.

"உங்கள் வாழ்த்து யாருக்கு வேண்டும்? நான் பதிவியேற்றுக்கொண்டதற்கு அமெரிக்கா வாழ்த்துத் தெரிவிக்கவேண்டியதில்லை. அவர்கள் (அமெரிக்கா) வாழ்த்துத் தெரிவிப்பார்கள் என்று ஈரான் எதிர்பார்க்கவில்லை" என்றும் அஹ்மதி நிஜாத் குறிப்பிட்டார்.

இதற்கு முன்னர் அஹ்மதிநிஜாத் பதவியேற்பு குறித்து கருத்துத் தெரிவித்த அமெரிக்க ஜனாதிபதி மாளிகை தரப்பு, "அஹ்மதிநிஜாத் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்தான். ஆனால், அவர் ஜனாதிபதியாகப் பதவியேற்பதற்கு வாழ்த்துத் தெரிவிக்க அமெரிக்கா விரும்பவில்லை" என தெரிவித்திருந்தது.

அமெரிக்காவின் இக் கருத்துக்குப் பதிலளிக்கும் விதத்தில் அஹ்மதிநிஜாத் இதனைத் தெரிவித்துள்ளார். பதவியேற்கும் விழா தெஹ்ரானிலுள்ள நாடாளுமன்றத்தில் பிரமாண்டமாக நடைபெற்றது. இதில் முக்கிய அரசியல் தலைவர்களும் மதக் குருக்களும் திரளாகக் கலந்துகொண்டனர்.

அந்நாட்டின் மொத்த 290 எம்.பிக்களில் 240 எம்.பிக்கள் இதில் கலந்துகொண்டனர். பதவியேற்பு விழாவை எதிர்க்கட்சியினர் புறக்கணித்திருந்தனர். அஹ்மதிநிஜாத்தை எதிர்த்துப் போட்டியிட்டு தோல்வியுற்ற ஹுசைன் மொசவி பதவியேற்பு விழாவுக்கு வரவில்லை.

எதிர்க்கட்சியினர் பதவியேற்பு விழாவைப் புறக்கணித்த அதேவேளையில் அஹ்மதிநிஜாத் பதவியேற்பதற்கு ஆட்சேபனை தெரிவித்து, நாடாளுமன்றத்தின் வெளிப்புறத்தில் போராட்டத்தில் ஈடுபட்டனர். அஹ்மதிநிஜாத்துக்கு எதிராகத் தொடர்ந்து கோஷங்களை எழுப்பினர்.

போராட்டத்தில் ஈடுபட்ட எதிர்க்கட்சியினரை கலைந்து செல்லுமாறு கலவரத் தடுப்பு பொலிஸார் எவ்வளவோ வலியுறுத்தியும் அவர்கள் கேட்கவில்லை. இதனால் பொலிஸார் போராட்டக்காரர்கள் மீது மிளகுவாயுவை கசியவிட்டும், தடியடி நடத்தியும் அவர்களைக் கலைத்தனர்.

ஈரான் வரலாற்றில் ஜனாதிபதி பதவியேற்பு விழாவில் எதிர்க்கட்சியினருக்கு எதிராக இதுபோன்ற அடக்குமுறை எப்போதும் நடந்ததில்லை என சர்வதேச அரசியல் நோக்கர்கள் தெரிவித்துள்ளனர்.



ஜப்பான் ஹிரோஷிமா நகரில் நடந்த அணு குண்டுத் தாக்குதலில் இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் ஜப்பானியக் குடும்பத்தினர்.

# ஹிரோஷிமா மீது அணுகுண்டு வீசப்பட்ட 64 ஆவது வருட நினைவு தினம் அனுஷ்டிப்பு

டோக்கியோ, ஒகஸ்ட் 07

இரண்டாம் உலகப் போரின்போது ஜப்பானிய நகரமான ஹிரோஷிமா மீது அமெரிக்கா தன் முதல் அணுகுண்டை வீசிய 64 ஆவது வருட நினைவு தினம் நேற்று வியாழக்கிழமை ஜப்பானில் அனுஷ்டிக்கப்பட்டது.

குட்டிப்பையன் என்ற பெயர் கொண்ட இந்த நாசகாரக் குண்டை அமெரிக்கா 1945 ஒகஸ்ட் மாதம் 6 ஆம் திகதி வீசியது. காலை 8.15 மணிக்கு, நான்கு லட்சத்திற்கும் மேலதிகமான மக்கள் வாழ்ந்த ஹிரோஷிமாவில் வெடித்த குண்டினால் 15 நிமிடங்களில் 12 ஆயிரம் மீற்றர் உயரத்திற்கு இராட்சதக் காளானாகக் கதிர்வீச்சுப் புகைமண்டலம் எழுந்து நின்றது.

மரங்கள் தீப்பந்தங்களாக எரிந்தன. இரும்புத் தூண்கள் உருகி ஓடின. ஹிரோஷிமாவில் இருந்த 76 ஆயிரம் கட்டடங்களில் பெரும்பாலானவை சாம்பலாகின. குண்டு வெடித்த ஒரே நிமிடத்தில் 80 ஆயிரம் மனிதர்கள் இறந்தனர். 70 ஆயிரத்துக்கு மேற்பட்டவர் காயம் அடைந்தனர். இவர்களில் 60 ஆயிரம் பேர் ஓராண்டு முடிவதற்குள்ளாகவே மரணமடைந்தனர்.

இரண்டு நாள்கள் கழிந்த பின்னர் மீண்டும் ஒகஸ்ட் 9 ஆம் திகதி முற்பகல் 11.02 மணிக்கு குண்டு மனிதன் என்று பெயரிடப்பட்ட மற்றோர் அணுகுண்டு நாகசாகி நகரின் மீது வீசப்பட்டது. நகரின் மையப் பகுதியில் 500 மீற்றர் உயரத்தில் வெடித்த இந்தக் குண்டு 22 ஆயிரம் தொன் டிஎன்டிக்கு இணையான வெடிதிறன் படைத்தது. 3.25 மீற்றர் நீளமும், 1.5 மீற்றர் அகலமும் கொண்டிருந்த இந்தக் குண்டின் எடை 4.5 தொன் ஆகும்.

2 லட்சத்து 80 ஆயிரம் மக்கள் வாழ்ந்த நாகசாகியில் குண்டு வெடித்ததும் 40 ஆயிரம் மக்கள் உடனடியாக மடிந்து போயினர். மேலும் 34 ஆயிரம் பேர் காயமுற்றதாலும், கதிர்வீச்சாலும் ஓராண்டு முடிவதற்குள் உயிரிழந்தனர்.

ஹிரோஷிமாவில் 13 சதுர கிலோ மீற்றர் பரப்பளவும், நாகசாகியில் 6.7 சதுர கிலோ மீற்றர் பரப்பளவும் முற்றிலும் எரிந்து சாம்பலாகின. அக்கினிச் சூறாவளியில் ஹிரோஷிமா தொடர்ந்து ஆறு மணி நேரம் எரிந்தது. தொடர்ந்து கடும் மழை தொடங்கியது. சாதாரண மழையல்ல. பெரும் கதிர்வீச்சு நிறைந்த, எண்ணெய்ப் பசையோடு கூடிய திரவ மழை ஊழித்தாண்டவமாடியது. இதனை வரலாறு கறுப்பு மழை என்று பதிவு செய்துள்ளது. இன்றுவரையில் அந்தப் பகுதிகளில் புல்கூட முளைப்பதில்லை. பாயும் புனலும் பாழாய்ப் போனது. வீசும் காற்றும் விஷமாய்ப் போனது. பிறக்கும் குழந்தைகள் ஊனமுற்றவர்களாகவே பிறந்து வருகிறார்கள்.

நேச நாட்டுப் படைகளிடம் பிடிபட்டு விடுவோமோ என்று அஞ்சி, ஹிட்லர் 1945 ஆம் ஆண்டு ஏப்ரல் 30 அன்று தற்கொலை செய்து கொண்டார். அதைத் தொடர்ந்து அவரது படைகளும் சரணடைந்தன. போர் முடிந்து இரு மாதங்களுக்கு மேலான நிலையில், ஜப்பான் மீது, அமெரிக்கா இந்தக் குண்டுகளை வீசியது. முதல் அணுகுண்டின் கோரத்தாண்டவத்தில் சுழன்றடித்த நெருப்புச் சூறாவளியில் பல்லாயிரவர் கருகியதைக் கண்ட பின்னரும் மீண்டும் இரண்டு நாள்கள் கழித்து நாகசாகியின் மீது மற்றோர் அணுகுண்டை அது வீசியது.

# அணுவாயுதத் திட்டத்தைக் கைவிடுமாறு வடகொரியாவிடம் ஒபாமா கோரிக்கை

வாஷிங்ரன், ஒகஸ்ட் 07

அணுவாயுத உற்பத்தி நடவடிக்கைகளை கைவிடுமாறு அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா, வடகொரியாவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அமெரிக்காவுடன் நல்லுறவைப் பேணவேண்டுமாயின், அணுவாயுத நடவடிக்கைகளை வடகொரியா கைவிடவேண்டுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச சட்டங்களுக்கு அமைவாக வடகொரியா செயற்பட வேண்டும் என்பதே அமெரிக்காவின் விருப்பம். அழிவுகளை ஏற்படுத்தக்கூடிய வகையிலான செயற்பாடுகளை வடகொரியா மேற்கொள்ளக்கூடாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்க ஊடகவியலாளர்கள் விடுதலை செய்யப்பட்ட தன் பின்னர் தாம் ஆற்றிய விசேட உரையில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துமீறிப் பிரவேசித்த காரணத்திற்காக இரு அமெரிக்க பெண் ஊடகவியலாளர்களுக்கும் வடகொரியா 12 ஆண்டு கால சிறைத்தண்டனை விதித்திருந்தது. எனினும், முன்னாள் ஜனாதிபதி பில் கிளின்ரன் வடகொரியாவிற்கு மேற்கொண்ட திடீர் விஜயத்தின் பின்னர் இரண்டு ஊடகவியலாளர்களும் விடுவிக்கப்பட்டனர்.

ஊடவியலாளர்களை விடுவிப்பதற்காக அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி பில் கிளிண்டன் ஆற்றிய சேவை பாராட்டுக்குரியதென்றும் ஜனாதிபதி பராக் ஒபாமா மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

## உலக அரங்கில்

# 25 தீவிரவாத அமைப்புகளுக்கு தடை விதித்தது பாகிஸ்தான் அரசு

இஸ்லாமாபாத், ஒகஸ்ட் 07

25 தீவிரவாத அமைப்புகளுக்கு பாகிஸ்தான் அரசு தடை விதித்துள்ளது. தடைசெய்யப்பட்ட லஸ்கர்-இ-தொய்பா தீவிரவாத இயக்கத்தின் நிழல் அமைப்பான ஜமாத்-உத்-தவா (ஜெ.யு.டி.) ஐ.நா.சபை அறிவிப்பை அடுத்து கடந்த ஆண்டில் பாகிஸ்தான் அரசால் தடைசெய்யப்பட்டது.

இந்நிலையில், பாகிஸ்தானில் தடை செய்யப்பட்ட அமைப்புகள் குறித்து உள்துறை அமைச்சகம் சார்பில் நாடாளுமன்றத்தில் அறிக்கையொன்று தாக்கல் செய்யப்பட்டது. இதில், பாகிஸ்தானில் மொத்தம் 25 தீவிரவாத அமைப்புகள் தடை செய்யப்பட்டுள்ளன என குறிப்பிடப்பட்டுள்ளது.

லஸ்கர்-இ-தொய்பா, ஜமாத்-உத்-தவா, ஜெய்ஸ்-இ-மொகமத், டெரிக்-இ-தலிபான் பாகிஸ்தான், அல்-அக்தர் டிரஸ்ட், டெரிக் - இ - இஸ்லாமி, இஸ்லாமிய மாணவர் இயக்கம், கடம்-இ-இஸ்லாம், பலுசிஸ்தான் விடுதலைப் படை ஆகியவையும் இந்தப் பட்டியலில் அடங்குகின்றன.

'சன்னி டெரிக்' என்ற அமைப்பு கண்காணிப்பு பட்டியலில் வைக்கப்பட்டுள்ளது என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தடைசெய்யப்பட்டுள்ள இந்த அமைப்புகளில் பல பாகிஸ்தானில் நடைபெற்ற தீவிரவாத தாக்குதல்கள், தற்கொலைப்படை தாக்குதல்கள் ஆகியவற்றில் தொடர்புடையவை ஆகும்.

மும்பைத் தாக்குதல், டில்லி நாடாளுமன்றத் தாக்குதல் ஆகியவை உட்பட பல்வேறு தாக்குதல்களில் ஜமாத்-உத்-தவா, லஸ்கர்-இ-தொய்பா, ஜெய்ஸ்-இ-மொகமத் ஆகிய இயக்கங்களுக்குத் தொடர்புண்டு என இந்தியா குற்றஞ்சாட்டி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# திருமணத்துக்குச் சென்ற 21 பேர் ஆப்கான் குண்டு வெடிப்பில் பலி!

காபூல், ஒகஸ்ட் 07

தென் ஆப்கான் கார்ம்சிர் மாவட்டத்தில் திருமண வைபவமொன்றில் பங்குபற்றுவதற்காக பயணித்துக்கொண்டிருந்தவர்களின் வாகனங்கள் வீதியோரக் குண்டு வெடிப்பில் சிக்கின. இதில் 21 பேர் கொல்லப்பட்டனர் என அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

பலியானோரில் பெண்களும், பிள்ளைகளுமடங்குவர். இக்குண்டு வெடிப்பில் அநேகர் காயமடைந்தனர். உடனடியாக அவர்கள் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். பலர் ஆபத்தான கட்டத்தில் இருந்தனர் என ஹெல்மாந் மாகாண பிரதம பொலிஸ் அதிபர் அசதுல்லா ஷேர்ஷாம் குறிப்பிட்டார்.

ட்ராக்டர்களில் பயணித்தவர்களே இக்குண்டு வெடிப்பில் பலியாகியுள்ளனர். இக்குண்டுத் தாக்குதலை தலிபான் தீவிரவாதிகளே நடத்தியுள்ளார்கள். ஒகஸ்ட் 20 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலை குழப்பியடிப்பதற்கு திட்டமிட்டு இத் தீய சக்திகள் செயற்பட்டு வருகின்றன என ஆப்கான் ஜெனரல் ஷிர் மொஹம்மத் சாசாய் குறிப்பிட்டார்.

அதேவேளை, நடாலி மாவட்டத்தில் நேற்று வியாழக்கிழமை பிறிதொரு வீதிக்குண்டு வெடிப்பில் பொலிஸ் வாகனமொன்று சிக்கியது. இதில் ஐந்து பொலிஸார் பலியாயினர். மூவர் படுகாயமடைந்தனர் என உள்துறை அமைச்சு குறிப்பிட்டது.

# காஷ்மீர் கொள்கையில் மாற்றமில்லை: பாகிஸ்தான் திட்டவட்டமாக அறிவிப்பு

இஸ்லாமாபாத், ஒகஸ்ட் 07

"காஷ்மீர் கொள்கையில் எந்த மாற்றமும் இல்லை. சுதந்திர காஷ்மீர் என்பதுதான் எங்கள் நிலை" என்று பாகிஸ்தான் திட்டவட்டமாக அறிவித்துள்ளது. பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாதில் வெளிவிவகாரத்துறை செய்தித் தொடர்பாளர் அப்துல் பாசித் புதன்கிழமை இதை அறிவித்தார்.

காஷ்மீர் கொள்கையில் பாகிஸ்தானின் நிலையில் தலைகீழ் மாற்றம் ஏற்பட்டுள்ளதா என்ற கேள்விக்குப் பதிலளிக்கையில் அவர் இவ்வாறு கூறினார்.

எகிப்தில் அண்மையில் நடைபெற்ற அணிசேரா நாடுகளின் உச்சிமாநாட்டில் இந்தியா - பாகிஸ்தான் கூட்டறிக்கை வெளியிடப்பட்டது. இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கும், பாகிஸ்தான் பிரதமர் கிலானியும் கூட்டாக இந்த அறிக்கையை வெளியிட்டனர். இந்த அறிக்கை இந்தியாவில் பெரும் புயலைக் கிளப்பியுள்ளது.

அதுபோல பாகிஸ்தான் தரப்பிலும் இந்த அறிக்கை பல்வேறு சந்தேகங்களை எழுப்பி உள்ளது. இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே வருடக்கணக்கில் நீடித்துவரும் காஷ்மீர் பிரச்சினை குறித்து இந்த கூட்டறிக்கையில் ஏதும் இடம் பெறவில்லை. பேச்சு மூலமே எல்லாப் பிரச்சினைகளுக்கும் தீர்வுகாணப்படவேண்டும் என்று மட்டுமே இதில் கூறப்பட்டுள்ளது.

இதனால் காஷ்மீர் பிரச்சினையில் பாகிஸ்தான் நிலையில் மாற்றம் ஏற்பட்டுள்ளதா என்ற சந்தேகத்தை பல்வேறு தரப்பினரும் எழுப்பி வருகின்றனர். இதை பாகிஸ்தான் வெளியுறவுச் செய்தித் தொடர்பாளர் பாசித் திட்டவட்டமாக மறுத்துள்ளார்.

காஷ்மீர் மக்களின் விருப்பத்துக்கு ஏற்ப சுயநிர்ணய உரிமை வழங்கப்படவேண்டும். சுதந்திர காஷ்மீர் உருவாகவேண்டும் என்று பாகிஸ்தான் வலியுறுத்தி வருகிறது. காஷ்மீர் பிரச்சினை மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒன்று. இப்பிரச்சினைக்குத் தீர்வு காணாமல் இந்தியா - பாகிஸ்தான் இடையே எந்தப் பிரச்சினைக்கும் தீர்வு காண முடியாது என்றும் வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் பாசித் தெரிவித்தார்.

# அமெரிக்கப் படை ஏவுகணைத் தாக்குதலில் தலிபான் தலைவரின் மனைவி, மாமனார் பலி

இஸ்லாமாபாத், ஒகஸ்ட் 07

பாகிஸ்தானில் பழங்குடியினர் அதிகம் வசிக்கும் வஸிரிஸ்தான் பகுதியில் அமெரிக்கப் படை நடத்திய ஏவுகணைத் தாக்குதலில் தலிபான் தலைவர் பைதுல்லா மசூத்தின் மனைவியும், மாமனாரும் உயிரிழந்தனர். இதை தொலைக்காட்சி ஒன்று தெரிவித்துள்ளது என பாகிஸ்தான் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். ஆனால், அரசு தரப்பிலிருந்து அதிகாரப்பூர்வமாக எவ்விதத் தகவலும் இல்லை.

வஸிரிஸ்தானின் தெற்குப் பகுதியிலுள்ள இருப்பிடத்தில் அமைந்துள்ள பைதுல்லா மசூத்தின் வீட்டை குறிவைத்து அமெரிக்கப் படை ஏவுகணைத் தாக்குதல் நடத்தியது. இந்தத் தாக்குதலின்போது வீட்டுக்குளிருந்த பைதுல்லாவின் இரண்டாவது மனைவி, அவரது மாமனார் மாலிக் இக்ரமுதீன் ஆகியோரும் மேலும் இருவரும் பலியாயினர். இரு குழந்தைகள் உட்பட ஏராளமானோர் காயமடைந்தனர் என தொலைக்காட்சி தெரிவித்துள்ளது என அரசு தரப்பில் கூறப்பட்டுள்ளது.

வஸிரிஸ்தானிலுள்ள தனது இரண்டாவது மனைவியின் வீட்டுக்கு பைதுல்லா மசூத் அடிக்கடி வந்து செல்வாராம். இந்நிலையில், அமெரிக்கப் படை தாக்குதல் நடத்தியபோது அவர் வீட்டில் இருந்தாரா, இல்லையா என்பது குறித்து எவ்விதத் தகவலும் வெளியாகவில்லை என்று பாகிஸ்தான் அரசு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்களவர்களுக்குச் சமனான உரிமைகளை ஈழத் தமிழருக்கும் உறுதிப்படுத்தவேண்டும்

## தமிழக முன்னாள் ஆளுநர் தெரிவிப்பு

சென்னை, ஓக. 07

இலங்கைத் தமிழர்கள் அவர்களுக்கே உரிய அதிகாரங்களில் இருந்தும், சமூக மற்றும் மொழி உரிமைகளில் இருந்தும் ஒதுக்கி வைக்கப்படக் கூடாது. சிங்களவருக்குச் சமமான உரிமை தமிழர்களுக்கும் வழங்கப்படவேண்டும்.

- இவ்வாறு மகாத்மா காந்தி மற்றும் நேரு ஆகியோருடன் இருந்த காந்திய வாதியும், தமிழகத்தின் முன்னாள் ஆளுநருமான பீஸ்மா நாராயன் சிங் தெரிவித்துள்ளார்.

தற்போது தமிழர்களுக்கு எதிரான வன்முறைகள் ஓரளவுக்கு ஓய்ந்திருந்தாலும், கடந்த காலங்களில் தமிழர்கள் பாரிய வன்முறைகளுக்கு உட்படுத்தப்பட்டனர் எனவும் அவர் கூறினார்.

இந்திய நாடாளுமன்றில் செய்தியாளர்களை சந்தித்துப் பேசும்போதே அவர் இவற்றைத் தெரிவித்தார். மேலும் அவர் கூறியவை வருமாறு -

வன்முறைகளின் ஊடாக தமிழர்களுக்கு எந்தவித தீர்வினையும் ஏற்படுத்திக் கொள்ள முடியாது.

தமிழர்களுக்கு என தனியான தாயகம் அமைவது என்பது சாத்தியமில்லை. எனினும், இலங்கையின் பொருளாதாரத்துக்கு பல்வேறு வழிகளில் ஒத்துழைத்து வரும் தமிழர்களுக்கு அவர்களின் மொழி மற்றும் சமூக உரிமைகளை முன்னிலைப் படுத்திய தீர்வு அவசியம் வழங்கப்பட வேண்டும்.

எதிர்கால நிறுவுதல்களுக்காக, தமிழர் பெரும்பான்மை பெற்ற பிரதேசங்களுக்கு அதிக அதிகாரம் வழங்குதல் மற்றும், சிங்களவர்களின் அளவிற்கே தமிழர்களுக்கும் சம உரிமை மற்றும் அந்தஸ்து ஆகியவற்றை உறுதி செய்ய வேண்டும் - என்றார்.

இதேவேளை, அவர் தமிழகத்தின் ஆளுநராக இருந்த காலகட்டத்தில், தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்பான தமிழகத்தின் மக்கள் மற்றும் அரசியல் ரீதியான கருத்துக்கள் பற்றி செய்தியாளர்கள் அவரிடம் வினவினர்.

இதற்குப் பதிலளித்த அவர், தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான சரியான கட்டுப்பாட்டினைப் பேணாத நிலையிலேயே அந்தக் காலப் பகுதியில் மு.கருணாநிதியின் அரசு கவிழ்க்கப்பட்டது என அவர் சுட்டிக்காட்டினார்.

எனினும், ஒரு காந்திய வாதியாகவும், பலராலும் விமர்சிக்கப்படுகின்ற விடயமாதலாலும், தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்பில் கருத்து வெளியிடும் எண்ணம் தமக்கு இல்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு தமிழகத்தில் ஆதரவு வழங்கப்பட்டு வந்தமை உண்மையே எனவும் பீஸ்மா நாராயன் சிங் ஒப்புக்கொண்டுள்ளார்.



டில்லியில் உள்ள தனது இல்லத்தில் காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி நேற்றுமுன்தினம் ரக்ஷா பந்தன் விழாவைக் கொண்டாடினார். அப்போது, வீட்டுக்கு வந்த சிறுவர்களுக்கு அவர் ராக்கிக் கயிறு கட்டியபோது....

# ஈழ அகதிகளின் வருகையைக் குறைக்க தமிழகக் கடலோரப் பாதுகாப்பு தீவிரம்

## இந்திய அரசு அதிரடி

இலங்கையில் இருந்து அகதிகளாகத் தமிழகம் செல்வோரைக் கட்டுப்படுத்தும் பொருட்டு மத்திய அரசு, தமிழகக் கடற்பரப்பின் பாதுகாப்பைப் பலப்படுத்தியுள்ளது.

இதற்கென இந்தியக் கடற்படை கடலோர பாதுகாப்பு படையினர் மற்றும் மாநில அதிகாரிகள் ஆகியோர் இணைந்து பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதற்கிடையில் விரைவில் இது தொடர்பான சட்ட மூலம் ஒன்று நடைமுறைக்கு வரவிருக்கிறது என இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.

இதுவரையில் தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்களின் வருகையைக் கட்டுப்படுத்துவதாகக் கூறியே பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டு வந்துள்ளன.

எனினும் இந்திய மத்திய அரசின் இந்த அறிவிப்பு இலங்கையில் இருந்து தமிழகம் செல்லும் அகதிகளின் வருகையின் விரும்பாத் தன்மையை எடுத்து காட்டுவதாகக் கருதப்படுகிறது.

இதற்கிடையில் இலங்கையில் இருந்து தமிழகம் வந்துள்ள அகதிகளை இந்தியா மதிப்பதாக மாநில உள்துறை அமைச்சர் அஜய் மாகென் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(ர)




# பகிடிவதை செய்தமையால் தகராறு; 9 மாணவர்கள் காயம்; 19 பேர் கைது

## ஏனாத்தூர் பல்கலைக்கழகத்தில் சம்பவம்



கைதுசெய்யப்பட்ட மாணவர்கள்



காயமடைந்த இரு மாணவர்கள்

சென்னை, ஓக. 07

ஏனாத்தூர் பல்கலைக்கழகத்தில் பகிடிவதை 'ராகிங்' செய்தமை தொடர்பாக மாணவர்களிடையே ஏற்பட்ட மோதலில் 9 பேர் படுகாயமடைந்தனர்.

இதன்போது தகாராறில் ஈடுபட்ட 19 மாணவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்கள் மீது கொலை முயற்சி உட்பட மூன்று பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

காஞ்சிபுரம், ஏனாத்தூரில் தனியார் பல்கலைக்கழகம் உள்ளது. இங்கு இரண்டாம் ஆண்டு மாணவர் அர்ஸ் குப்தாவை அதே கல்லூரியில் படிக்கும் மூன்றாம் ஆண்டு மாணவர் அபிகாந்த் உட்பட 6 பேர் கடந்த 3ஆம் திகதி இரவு கேலி, கிண்டல் செய்தனர்.

இதுபற்றி கல்லூரி முதல்வரிடம் அர்ஸ் குப்தா முறைப்பாடு செய்தார். இதையறிந்த அபிகாந்த் ஆத்திரத்துடன் குப்தாவின் அறைக்கு நேற்றுமுன்தினம் நண்பர்கள் 19 பேருடன் சென்றார். குப்தா மற்றும் அவருடன் இருந்தவர்களை உருட்டுக்கட்டையால் தாக்கினர். இதில் குப்தா, ரிகேஷ் ஆனந்த் உட்பட 9 பேர் காயமடைந்தனர். அவர்கள் காஞ்சிபுரம் அரச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். இதுகுறித்த முறைப்பாட்டின் பேரில் அபிகாந்த் உட்பட 19 பேரும் கைது செய்யப்பட்டனர்.

# 'சிவகாசி' திரைப்பட விவகாரம்: மன்னிப்புக் கோரினார் விஜய்

சென்னை, ஓக. 07

'சிவகாசி' படம் தொடர்பான வழக்கில் நடிகர் விஜய், இயக்குநர் பேரரசு, தயாரிப்பாளர் ஏ.எம்.ரத்னம் ஆகியோர் மன்னிப்பு கோரியுள்ளனர்.

கடந்த 2005இல் இயக்குநர் பேரரசு இயக்கத்தில் நடிகர் விஜய் நடித்த 'சிவகாசி' படம் வெளியானது. இந்தப் படத்தில் சட்டத்தரணிகளைப் புண்படுத்தும் விதமாக காட்சிகள் இருந்தன என வழக்குத் தொடரப்பட்டது. இதற்கு மன்னிப்புக் கோரி நடிகர் விஜய் தாக்கல் செய்த மனு விவரம் வருமாறு -

சட்டத்தரணித் தொழில் மீது நன்மதிப்பு வைத்துள்ளேன். ஏற்கனவே நான் நடித்து வெளிவந்த 'தமிழன்' படத்தில் சட்டத்தரணியாக நடித்துள்ளேன். அதில் சட்டத்தரணிகளின் மதிப்பை உயர்த்தி காண்பித்துள்ளேன்.

அதேபோல, நீதித்துறையை அவமானம் செய்யும் நோக்கம் இல்லை. எனவே, 'சிவகாசி' படக் காட்சிகள் தனிப்பட்ட முறையிலோ அல்லது நேரடியாகவோ சட்டத்தரணிகளைப் பாதித்திருந்தால் வருத்தம் தெரிவித்துக் கொள்கிறேன் என்று மனுவில் தெரிவித்துள்ளார் விஜய்.



இயக்குநர் பேரரசு, தயாரிப்பாளர் ஏ.எம்.ரத்னம், நகைச்சுவை நடிகர் எம்.எஸ்.பாஸ்கர் ஆகியோரும் வருத்தம் தெரிவித்து தனித்தனியாக மனுச் செய்திருந்தனர்.

சட்டத்தரணிகள் தரப்பில் ஆஜரான தமிழ்நாடு சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் எஸ்.பிரபாகரன், எதிர்காலத்தில் இதுபோன்று சட்டத்தரணித் தொழிலை இழிவுப்படுத்தி காட்டும் சினிமாப் படங்கள் வரக்கூடாது என்று உத்தரவிட வேண்டும் - என்று கேட்டுக் கொண்டார்.

இதையடுத்து, நீதிபதி ரகுபதி இந்த வழக்கின் தீர்ப்பைத் தள்ளி வைத்தார்.

# யாழ்ப்பாணக் காதலர் போட்ட நாடகத்தால் சென்னை விமான நிலையத்தில் பரபரப்பு!

## கடவுச்சீட்டை பறித்துச் சென்ற காதலனுக்கு மக்கள் தர்ம அடி

சென்னை, ஓக். 07

காதலி சுவிட்சர்லாந்து செல்வதைத் தடுக்க, அவரது கடவுச்சீட்டை சென்னை விமான நிலையத்தில் வைத்த பிடுங்கிக் கொண்டு காதலன் ஓடியதால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

காதலனை பொதுமக்கள் மடக்கி தர்ம அடி கொடுத்தனர். ஆனால், பிரிய மனமில்லாத காதலர்கள் இருவரும் சேர்ந்து நடத்திய நாடகம் இதுவென பின்னர் தெரியவந்தது.

இலங்கை யாழ்ப்பாணத்தை சேர்ந்தவர் பஞ்சாட்சரம். சுவிட்சர்லாந்து குடியுரிமை பெற்று அங்கு வசிக்கிறார். இவரது மனைவி அமலா ராணி (வயது - 45). இவர்களுடைய மகன் சுதாகர் (வயது - 23), மகள் விஜிதா (வயது - 19). சுவிட்ஸர்லாந்து பாடசாலையில் ஆசிரியராகப் பணி புரிகிறார் விஜிதா.

மகன், மகளுடன் அமலா ராணி ஒரு மாதத்துக்கு முன்பு இந்தியாவுக்கு சுற்றுலா வந்தார். சென்னை போரூரில் உ[illegible] உறவினர் வீட்டில் 3 பேரும் தங்கினர். அ[illegible] நதியைச் சேர்ந்தவர் பிரேம்குமார் (வயது - 24). அங்குள்ள ஆடை ஏற்றுமதி நிறுவன ஊழியர். இவரும் யாழ்ப்பாணத்தை சேர்ந்தவர்.

அதனால், பிரேம்குமாரும் விஜிதாவும் சகஜமாகப் பேசிப் பழகியதில் நெருங்கிய காதலர்களாக மாறினர். இந்நிலையில், மீண்டும் சுவிட்ஸர்லாந்து திரும்ப அமலா ராணி முடிவு செய்தார்.

சென்னை சர்வதேச விமான நிலையத்துக்கு செவ்வாய்க்கிழமை காலை 7.30 மணிக்கு அமலா ராணி, சுதாகர், விஜிதா ஆகிய 3 பேரும் வந்தனர். 9.45 மணிக்கு டுபாய் புறப்படும் எமிரேட்ஸ் விமானத்தில் செல்ல அவர்கள் டிக்கெட் எடுத்திருந்தனர். கடவுச்சீட்டை சோதனைக்காக குடியுரிமை பிரிவுக்கு அமலா ராணி சென்று கொண்டிருந்தார். அப்போது, திடீரென பிரேம்குமார் ஓடிவந்து அமலாவிடம் இருந்த கடவுச்சீட்டைப் பறித்துக் கொண்டு ஓடினார்.

இதைச் சற்றும் எதிர்பார்க்காத அமலா, திருடன் திருடன் என்று கத்தினார். சுதாகரும் சத்தம் போட்டார். அங்கிருந்தவர்கள் ஓடி வந்து, பிரேம்குமாரைச் சுற்றிவளைத்து சரமாரியாக அடித்து உதைத்தனர்.

அப்போது, கூட்டத்துக்குள் விஜிதா புகுந்து, சினிமாவில் வருவதுபோல, காதலன் பிரேம்குமார் மீது அடி விழாமல் தடுத்தார்.

பிரேமை காதலிக்கிறேன். அம்மாவுடன் சுவிட்ஸர்லாந்து செல்ல விருப்பம் இல்லை. என் பயணத்தை தடுக்கத்தான் இவரை வரவழைத்தேன் என்றார்.

அப்போது, பிரேம்குமார் கூறுகையில்,

விஜிதாவின் பயணத்தைத் தடுக்க நண்பர்கள் 2 பேருடன், பார்வையாளர்கள் டிக்கெட் வாங்கி ஏற்கனவே உள்ளே வந்து காத்திருந்தேன் என்றார். அதைக் கேட்டதும் அவரது தாய், அண்ணன் மற்றும் பயணிகள், அதிகாரிகள் திகைத்தனர்.

பொது இடத்தில் எங்களை அவமானப் படுத்தினால் இங்கேயே விஷம் குடித்து சாவோம் என்று கதறினார் விஜிதா. அதற்கு, இப்போதைக்கு சுவிட்ஸர்லாந்து போகலாம். முறைப்படி பிரேம்குமார் வீட்டில் பேசி அவரையே திருமணம் செய்து வைக்கிறேன் என்று விஜிதாவிடம் அமலா கூறினார். இப்படி 45 நிமிட போராட்டத்துக்குப் பின்னர் விஜிதாவும் பிரேம்குமாரும் ஒப்புக்கொண்டனர். மனதைத் தேற்றிக் கொண்ட விஜிதா, பிரேம்குமா[illegible] சுவிட்ஸர்லா[illegible] புறப்பட்டார்.

விமானம் செல்லும் வரை அங்கு காத்திருந்த பிரேம்குமார், சோகத்துடன் வெளியேறினார்.

# மும்பை இரட்டைக் குண்டுவெடிப்பு: மூவருக்குத் தூக்கு; நீதிமன்றம் தீர்ப்பு

மும்பை, ஓக.07

மும்பையில் கடந்த 2003ஆம் ஆண்டு நடந்த இரட்டைக் குண்டு வெடிப்பு தொடர்பான வழக்கில் நேற்று மும்பை நீதிமன்றம் மூவருக்கு மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்தது.

கடந்த 2003 ஆம் ஆண்டு மும்பையில் இரு இடங்களில் அடுத்தடுத்து குண்டுகள் வெடித்ததில் 54 பேர் கொல்லப்பட்டனர். இந்த வழக்கு மும்பை சிறப்பு நீதிமன்றத்தில் நடந்து வந்தது.

இந்த வழக்கில் ஹனீப் சையது, அவரது மனைவி பாமீதா, அஸ்ரத் அன்சாரி ஆகியோர் குற்றவாளிகள் என அறிவிக்கப்பட்டது. இதையடுத்து, கடந்த 4ஆம் திகதி தண்டனை வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

பின்னர், தண்டனை அறிவிப்பு நேற்றைக்கு ஒத்திவைக்கப்பட்டது. நேற்று தண்டனைகளை வாசித்த நீதிபதிகள், குற்றவாளிகள் மூவருக்கும் மரண தண்டனை வழங்கப்படுகிறது என அறிவித்தனர்.

அவர்கள் அனைவருக்கும் லஷ்கர் - இ - தொய்பா அமைப்புடன் தொடர்பு இருந்தது என நிரூபிக்கப்பட்டுள்ளது.

# வங்கி ஊழியர்கள் வேலைநிறுத்தம்; இந்தியா முழுவதும் பணி முடக்கம்

சென்னை, ஓக. 07

சம்பள உயர்வு உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி பொதுத்துறை வங்கி ஊழியர்கள் 10 லட்சம் பேர் நேற்றுத் தொடங்கிய இரண்டு நாள்கள் வேலை நிறுத்தம் காரணமாக இந்தியா முழுவதும் வங்கிச் சேவைகள் முற்றிலுமாக முடங்கின.

சம்பள உயர்வு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி வங்கி ஊழியர் தொழிற்சங்க ஐக்கியக் கூட்டமைப்பு கடந்த சில வாரங்களாக போராட்டங்களை நடத்தி வந்தது. இது தொடர்பாக வங்கிகளின் நிர்வாகங்களுக்கும், ஊழியர்களின் பல்வேறு சங்கங்களின் கூட்டமைப்புக்கும் நடந்த பேச்சு தோல்வி அடைந்ததையடுத்து ஏற்கனவே அறிவித்தபடி பொதுத்துறை வங்கி ஊழியர்கள் நேற்றும், இன்றும் வேலைநிறுத்தம் செய்து வருகின்றனர்.

இந்த வேலை நிறுத்தத்தில் 9 தொழிற்சங்கங்களின் ஊழியர்களும், தனியார் மற்றும் வெளிநாட்டு வங்கிகளை சேர்ந்த ஊழியர்களும் சேர்த்து சுமார் 10 லட்சம் பேர் ஈடுபட்டுள்ளனர்.

இந்த நிலையில் நேற்றுக் காலை தொடங்கிய வேலைநிறுத்தம் காரணமாக இந்தியா முழுவதும் உள்ள பொதுத்துறை மற்றும் தனியார் வங்கிகள் நேற்று வெறிச்சோடிக் காணப்பட்டது.

சென்னை நகரில் பல்வேறு வங்கிகளில் ஊழியர்கள் வராததால் எந்தவிதமான பணிகளும் மேற்கொள்ளப்படவில்லை. இதனால் வாடிக்கையாளர்கள் பெரும் அவதிக்கு உள்ளானார்கள்.

வங்கிகள் வேலை நிறுத்தம் காரணமாக ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகங்களும் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வன்னியில் மக்கள் கொல்லப்பட்டது குறித்த சர்வதேசக் குற்றச்சாட்டை இல்லாமற் செய்யவே தேர்தல்

## நாடாளுமன்றில் ஸ்ரீகாந்தா குற்றச்சாட்டு

கொழும்பு, ஓக. 07

நடந்து முடிந்த யுத்தத்தால் எமது மக்கள் பல்லாயிரக்கணக்கில் கொல்லப்பட்டனர். யுத்தத்தின் இறுதி மாதங்களில் குறைந்தது 30 ஆயிரம் பேர் கொல்லப்பட்டிருக்கின்றனர். இந்த உண்மை உலகுக்குத் தெரியும்.

இது குறித்து சர்வதேச குற்றச்சாட்டுகளும் அரசுக்கு எதிராக உள்ளன.

இத் தேர்தலில் வெற்றிபெற்று சர்வதேசக் குற்றச்சாட்டை இல்லாமல் செய்வதற்காகவே யாழ்ப்பாணத்திலும் வவுனியாவிலும் நடத்தப்படுகிறது. இத் தேர்தலில் வெற்றிபெற்று அந்த வெற்றியை சர்வதேசத்துக்கு காட்டி வடக்கு மக்கள் அரசுடன் இருக்கின்றார்கள் என்று சர்வதேசத்துக்கு சொல்வதே இத் தேர்தலின் நோக்கம்.

இவ்வாறு நாடாளுமன்றத்தில் நேற்றுத் தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் என்.ஸ்ரீகாந்தா.

நாடாளுமன்றில் அவசரகாலச்சட்ட நீடிப்பு பிரேரணை மீது உரையாற்றிய போது அவர் மேலும் கூறியவை வருமாறு:-

சனிக்கிழமை நடைபெறவுள்ள யாழ்., வவுனியா தேர்தலில் ஜனநாயக விரோதச் செயற்பாடுகளை அரங்கேற்ற அரசு திட்டமிட்டுள்ளது. வவுனியா அகதி முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டு துன்பப்படும் எமது மக்கள் இந்தச் சந்தர்ப்பத்தில் தேர்தலைக் கேட்கவில்லை.

அரசுக்குத் தேவையொன்று இருப்பதால் அரசு எமது மக்கள்மீது தேர்தலைத் திணித்துள்ளது. தமது குழுக்களுடன் களமிறங்கி மோசடிகள் மூலம் தேர்தலில் வெல்லலாம் என்று அரசு நினைக்கின்றது.

எமது மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக அரசியல் தீர்வொன்றைக் கொண்டு வருவதற்குப் பதிலாக இத் தேர்தலில் அரசு ஈடுபட்டிருப்பது குறித்து நாம் கவலையடைகின்றோம்; ஏமாற்றப்பட்டுள்ளோம்.

### குற்றச் சாட்டுக்களை இல்லாமற் செய்யவே தேர்தல்

இத் தேர்தலில் தமக்கு வாக்களிக்குமாறு ஆயுதக்குழுக்கள் மக்களை மிரட்டுகின்றன. மக்களிடமிருந்து 50 ஆயிரத்துக்கு மேற்பட்ட வாக்காளர் அட்டைகளை இந்தக் குழுக்கள் பறித்தெடுத்துள்ளன. பல இடங்களில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தேர்தல் பிரசாரத்துக்குப் படையினரின் வாகனங்கள் பயன்படுத்தப்படுகின்றன. படை வாகனத்தில் வந்த சிலர் தேர்தல் சுவரொட்டிகளை ஒட்டிக்கொண்டிருந்தமையை நான் யாழ்ப்பாணத்தில் கண்டேன்.

வவுனியா பூந்தோட்டத்தில் இருந்த பாடசாலை ஒன்றில் இன்று (நேற்று) தேர்தல் பிரசாரம் நடத்தப்பட்டுள்ளது. 5 ஆம் திகதியுடன் தேர்தல் நடவடிக்கைகள் முடிவுற்ற நிலையில் எப்படி இவர்களால் மட்டும் தேர்தல் பிரசாரம் செய்ய முடியும்?

இத் தேர்தலைக் கண்காணிக்க கண்காணிப்புக் குழு ஒன்றை யாழ்ப்பாணத்துக்கும், வவுனியாவுக்கும் அனுப்ப வேண்டும் என்று நான் தேர்தல் ஆணையாளரிடம் வேண்டுகோள் விடுக்கின்றேன். -

வடக்குத் தேர்தலில் மக்கள் சுதந்திரமாக வாக்களிக்க இடமளித்தால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறுதிப் பெரும்பான்மையைப் பெறும். மக்கள் எம்மோடுதான் உள்ளனர். அமோக வெற்றி பெறுவோம்.''- என்றார்.

(அ-சி)

# அகதி முகாம் வாழ்விலிருந்து முழுமக்களும் விடுபட மீள்குடியேற்றம் செய்யக் கோரிக்கை

## யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிக்கை

யாழ்ப்பாணம், ஓக.07

முழு மக்களும் அகதி முகாம் வாழ்விலிருந்து விடுபட்டு தமது சொந்த இடங்களில் மீள்குடியேற்றம் செய்யப்பட வேண்டும் என்று யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கேட்டுள்ளது.

முதல் தொகுதியாக 3000 பேர் விடுவிக்கப்பட்டதற்கு ஜனாதிபதிக்கும், அமைச்சர் டக்ளஸ் தேவனந்தா, நாடாளுமன்ற உறுப்பினர் பசில் ராஜபக்ஷவுக்கும் நன்றி தெரிவித்து வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்ட கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

எமது மக்கள் சுமார் 3000 பேர் யாழ்ப்பாணத்திலும் 115 பேருக்கு மேல் வவுனியாவிலும் முதற்கட்டமாக விடுவித்து உறவிணைப்புச் செய்யப்பட்டதை கண்டு நாம் ஆறுதலடைகின்றோம். இவ்வாறான நடவடிக்கைகள் போல, முழு மக்களும் அகதிமுகாம் வாழ்விலிருந்து விடுபட்டு தமது சொந்த இடங்களில் விரைவாக மீள்குடியேற்றம் செய்யப்பட வேண்டும் என விரும்புகிறோம்.

ஜனாதிபதிக்கு எமது நன்றியைத் தெரிவிப்பதுடன் தொடர்ந்து ஏனைய மக்களையும் மீள்குடியேற்றம் செய்ய விரைந்து நடவடிக்கை எடுக்கும்படி வேண்டுகிறோம். இதற்கான ஒத்துழைப்பையும், பணிகளையும் செய்து வரும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு எமது நன்றியைத் தெரிவிக்கின்றோம். மேலும் நாடாளுமன்ற உறுப்பினர் பசில் ராஜபக்ஷவுக்கும் எமது நன்றிகளை தெரிவித்து கொள்கின்றோம்.

அத்துடன் அகதிமுகாம்களை விட்டு வெளியேறும் குடும்பங்களுக்கு அவர்களது உடனடி வாழ்வாதார்த்திற்காக குறைந்தது பத்தாயிரம் ரூபா நிதியினையேனும் வழங்கி உதவி செய்ய வேண்டிய தேவையுள்ளது. இதனை உடனடியாக அவசியமாக கவனத்தில் எடுக்கும்படி வேண்டுகிறோம்.

வவுனியாவில் உள்ள அகதிமுகாம் மக்கள் அதிகமாக, பொருத்தமற்ற காலநிலை மற்றும் சுற்றுப்புறச்சூழல் போன்றவற்றால் முற்றிலும் வாழ முடியாத பிரதேசத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளார்கள். அந்த மக்கள் விரைவாக குடியேற்றம் செய்யப்படுவதன் வாயிலரக அவர்களின் உடல், உள நலத்தை காப்பாற்ற முடியும்.

சொல்லெணாத் துயரங்களை தடுப்பு முகாம்களில் அனுபவிக்கும் எமது மக்களை விடுவிக்க அனைத்துத் தமிழ்த் தரப்பையும் அரசாங்கத்திடம் பேசுவதுடன் அவர்களின் மனிதாபிமான நிலைப்பாட்டை உலகத்திற்கு ஒத்த நிலையில் எடுத்துக் கூறும்படி வேண்டி வருகிறோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்க்க இந்த அரசாங்கம் தயாராக இல்லை

## பத்திரிகையாளர் மாநாட்டில் ஜயலத்

யாழ்ப்பாணம், ஓக. 7

தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இன்றைய அரசாங்கம் தயாரில்லை. நாட்டு மக்களின் பிரச்சினைகளை ஐக்கிய தேசியக் கட்சியால் மட்டுமே தீர்க்க இயலும்..

இவ்வாறு தெரிவித்தார் ஐக்கிய தேசியக் கட்சியின் உபதலைவர்களில் ஒருவரான நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன.

யாழ்ப்பாணம் டில்கா ஹோட்டலில் நேற்று நடத்திய செய்தியாளர் மாநாட்டில் அவர் இவ்வாறு சொன்னார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

3 லட்சம் தமிழ் மக்கள் அகதி முகாம்களில் அல்லற்பட்டுக் கொண்டிருக்க பல லட்ச ரூபா செலவில் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் களியாட்ட விழா நடத்தி மகிழ்ந்த அரசு தாங்கள் தமிழ்மக்களின் நலனுக்காக பல்வேறு அபிவிருத்திகளை மேற்கொள்வதாகக் கூறிக்கொள்கிறது.

நான் மூன்று தினங்களுக்கு முன் மன்னார் ஆயரைச் சந்தித்தேன். அப்போது 10 வயதுச் சிறுவன் ஒருவன் இரண்டு கைகளும் வெட்டப்பட்ட நிலையிலும், ஒரு 17 வயதுப் பெண்பிள்ளை ஒரு காலும் கையும் வெட்டப்பட்ட நிலையிலும் இருக்கக் கண்டேன். அகதி முகாம்களில் பிள்ளைகள் பிறக்கும் போது தொப்புள் கொடி வெட்ட ஒரு கத்தரிக்கோல் கூட கிடையாது என்று தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறு அங்குள்ள மக்கள் படும் துயரங்களை இங்கு, வந்துள்ள குண்டு துளைக்காத வாகனங்களில் பயணம் செய்யும் அமைச்சர்கள் அறிவார்களா?

பாதுகாப்புச் செயலாளர் அகதிகளை பராமரிக்க வெளிநாட்டு நிதி உதவி கேட்கிறார். இது குறித்து நான் மகிழ்ச்சியடைகின்றேன். முன்பு வெளிநாட்டு உதவி தேவையில்லை என்று நிராகரித்தவர் இப்போது நிதி உதவி கேட்கிறார். முகாம்களில் உள்ள மக்களை எதிர்க்கட்சிகள் பார்க்க அனுமதியில்லை. ஆனால் அகதி முகாம்களைத் தேர்தல் ஆயுதமாக அரச தரப்பினர் பயன்படுத்துகிறார்கள்.

தமிழ் மக்களுக்கான தீர்வுத்திட்டம் அடுத்த ஜனாதிபதித் தேர்தலின் பின் என்கிறார். மீண்டும் அவருக்கு அந்த வாய்ப்புக் கிடைத்தால் அப்போது மீண்டும் அடுத்த ஜனாதிபதி தேர்தலின் பின்னரே தீர்வுத்திட்டம் சமர்ப்பிக்கப்படும் என்பார். தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க இந்த அரசு தயாரில்லை - என்றார். (அ-111)

# பாடசாலைகளுக்கு இன்று முதல் விடுமுறை

யாழ்ப்பாணம்,ஓக.7

குடாநாட்டு பாடசாலைகள் இரண்டாம் தவணை விடுமுறைக்காக இன்று வெள்ளிக்கிழமை மூடப்படுகின்றன.

ஒரு மாத விடுமுறையின் பின்னர் அடுத்த மாதம் (செப்ரம்பர்) 07 ஆம் திகதி மீண்டும் பாடசாலைகள் ஆரம்பமாகும்.

இதே சமயம் யாழ்.மாநகரப் பகுதியில் உள்ள அனேகமான பாடசாலைகள் மாணவர்களுக்கு நேற்று முதல் விடுமுறை வழங்கியுள்ளன.

மாநகர தேர்தல் வாக்களிப்பு நிலைய ஏற்பாடுகள் காரணமாக இவ் விடுமுறை வழங்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

(1-224)

# இன்றும் நாளையும் மதுபான விற்பனைக்கு தடை

யாழ்ப்பாணம், ஓக.7

யாழ்.மாநகரசபைத் தேர்தலை ஒட்டி இன்றும் நாளையும் யாழ்.மாநகரசபைப் பிரதேசத்தில் உள்ள சகல மதுபான விற்பனை நிலையங்களும் மூடப்பட வேண்டும் என மதுவரித் திணைக்கள ஆணையாளரினால்அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே குறித்த இரு நாள்களும் யாழ். மாநகர சபைப் பிரதேசத்தில் உள்ள மதுபான விற்பனை நிலையங்கள் யாவும் மூடப்பட்டு மதுபான விற்பனையை மேற்கொள்ள வேண்டாம் என சகல மதுபான விற்பனை நிலைய உரிமையாளர்களையும் யாழ்.அரச அதிபர் கேட்டுள்ளார். (1)

# யாழ்ப்பாணத்தில் நவீன வசதிகொண்ட விளையாட்டு மைதானம் அமைக்க ஏற்பாடு

## விளையாட்டுத்துறை பிரதி அமைச்சர் தகவல்



யாழ்ப்பாணம், ஓக. 7

யாழ்ப்பாணத்தில் நவீன வசதிகள் கொண்ட விளையாட்டு மைதானம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நிதி ஒதுக்கீடு கிடைத்ததும் மைதானத்துக்கான இடம் தெரிவு செய்யப்படும்.

விளையாட்டுத்துறை பிரதி அமைச்சர் அர்ஜுன ரணதுங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நேற்று யாழ்ப்பாணம் வந்த அவர் சுதந்திரக்கட்சி அலுவலகத்தில் விளையாட்டுத்துறை அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள், விளையாட்டுக்கழக பிரதிநிதிகள் ஆகியோரைச் சந்தித்து கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பில் மின்சக்தி அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகேயும் பங்குபற்றினார்.

அங்கு அர்ஜுன பேசுகையில் கூறியதாவது:-

யாழ்ப்பாணத்தில் கிரிக்கெட்டுக்காக ஒரு பாடசாலை தெரிவு செய்யப்படும். கிரிக்கெட் தொடர்பான சகல அபிவிருத்தி நடவடிக்கைகளும் அங்கு மேற்கொள்ளப்படும்.

இந்தப் பிரதேசத்திற்கான விளையாட்டுக்களை, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கேட்டுக் கொண்டதற் கிணங்க சர்வதேச மட்டத்திற்கு கொண்டு செல்லக் கூடியதாக வளர்ச்சிப் பணிகள் முன்னெடுக்கப்படும். இந்தப் பிரதேசத்தின் அபிவிருத்திக்கென அமைச்சின் ஊடாக நிதி ஒதுக்கப்பட்டு அதன் பின்னர் விளையாட்டு மைதானத்திற்கான இடம் தெரிவு செய்யப்படும் - என்றார்.

அதேவேளை -

அர்ஜுன ரணதுங்க யாழ். இந்துக் கல்லூரிக்கு விஜயம் செய்து விளையாட்டுக்கள் குறித்த கல்லூரியின் முன்னேற்றம் குறித்துக் கேட்டறிந்தார்.

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி, பருத்தித்துறை ஹாட்லி கல்லூரி, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அதிபர்களை அவர் சந்திக்கவுள்ளார்.

(1-111-68)

# வவுனியா முகாமிலிருந்து விடுவிக்கப்பட்டவர்கள் நாவற்குழியில் வைத்து உறவினர்களிடம் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், ஓக.07

வவுனியா நலன்புரி நிலையங்களில் இருந்து நேற்று முன்தினம் விடுவிக்கப்பட்ட 55 குடும்பங்களைச் சேர்ந்த 130 பேரும் நாவற்குழி களஞ்சியத்தில் வைத்து விடுவிக்கப்பட்டனர்.

வவுனியாவில் இருந்து ஏ9 பாதையூடாக வாகனங்களில் அழைத்துவரப்பட்ட இவர்கள் நாவற்குழி களஞ்சியத்தில் தங்க வைக்கப்பட்டனர்.

பிரதேச செயலகரீதியாக பிரதேச செயலர்களிடம் அவர்கள் ஒப்படைக்கப்பட்டனர்.

அவர்களை அவர்களது உறவினர்களிடம் பிரதேச செயலர்கள் நேற்றுக் கையளித்தனர். (1)

# நிதிசேகரிப்பு அலுவலகம் ஆதீனத்தில் திறப்பு

யாழ்ப்பாணம்,ஓக.7

வன்னியிருந்து இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியிருப்பவர்களுக்கு உதவும் நிதி சேகரிப்புக்கு நல்லை ஆதீனத்தில் அலுவலகம் ஒன்று திறக்கப்பட்டுள்ளது.

நல்லைக்கந்தன் ஆலயப் பெருந்திருவிழாவில் கூடும் பக்தர்கள் உதவிகளை வழங்க வசதியாக இந்த அலுவலகம் இயங்குவதாக இந்து அமைப்புக்களின் ஒன்றியப்பிரதி நிதி ஒருவர் தெரிவித்தார்.

இடம்பெயர்ந்த மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய தாராளமாக உதவுமாறு ஒன்றியம் கேட்டுள்ளது.

(1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை அரசின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

''நாங்கள் எப்படியான பணிகளைச் செய்ய வேண்டும் என இலங்கை அரசு தெரிவித்துள்ளதைத் நாங்கள் ஏற்றுக்கொள்ள வில்லை'' என செஞ்சிலுவைக்க குழுவின் தலைவர் ஜக்கோப் கெலென்போக்ர் ரொய்ட்டர் செய்திச் சேவைக்குக் குறிப்பிட்டுள்ளார்.

''இலங்கையில் எப்படி எங்கு பணியாற்றுவது என்ற விடயத்தில் அரசுடன் நாம் கருத்து வேறுபாடுகளைக் கொண்டுள்ளோம். இது குறித்து இலங்கை அரசுடன் பேச்சுகளை மேற்கொண்டு விடயங்களைத் தெளிவுபடுத்த வேண்டியுள்ளது'' என மேலும் தெரிவித்துள்ள சர்வதேச செஞ் சிலுவைக் குழுவின் தலைவர் கெலென் பேர்கர், எதிர்வரும் வாரங்களில் இது குறித்த பேச்சுகளை தாம் மேற்கொள்ளப்போகின்றார் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் பணிகளைக் குறைத்துக் கொள்ளுமாறு செஞ் சிலுவைக்குழுவை அரசு கேட்டுள்ள நிலையில் அதன் தலைவரின் இக் கருத்து வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, ஜெனிவாப் பிரகடனத்தை யும் இது தொடர்பான சர்வதேச சட்டங் களையும் தரமுயர்த்தவேண்டும் என்றும் அவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

அநேகமான மோதல்கள் தற்போது நாடொன்றின் எல்லைக்குள் ளேயே இடம்பெறுகின்றன. நாடுகளுக்கு மத்தியில் இல்லை என சுட்டிக் காட்டியுள்ள கெலென்பேர்கெர் இதில் அநேகமாக ஈடுபடுபவர்கள் கிளர்ச்சிக்குழுக்களைச் சேர்ந்தவர்கள் என்றும் இதனாலேயே ஜெனிவா பிர கடனத்தைத் தரமுயர்த்த வேண்டியுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளா.

அரசு சாராத ஆயுதக் குழுக்கள் சர்வதேச மனிதாபிமான சட்டங்களை மதிக்காதமையே பாரிய பிரச்சினை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் ஜெனிவா பிரகடனம் இன்று வரை பொருத்தமானதாகவுள்ளது. இலங்கை உட்படப் பல நாடுகளில் மனிதாபிமானப் பேரழிவுகள் மோச மான நிலையை அடை வதை தடுப்பதற்கு, சட்டத்தின் பிடியிலிருந்து விலக்களிக்கப்படுவதை முடிவுக்கு கொண்டு வருவதே ஒரே வழி - என்றும் அவர் தெரிவித்துள்ளார். (அ-சி)

## மோசடிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதன் பின்னரே இறுதி முடிவு உத்தியோக பூர்வமாக வெளியிடப்படும் என்றும் தேர் தல் செயலகம் குறிப்பிட்டிருக்கிறது.

இதேவேளை, வாக்குச் சாவடிகளினுள் இருந்தபடி தேர்தல் கண்காணிப்பு பணியில் ஈடுபடவென பவ்ரல் அமைப்பிற்கும், தேர்தல் வன் முறைகளைக் கண் காணிப்பதற்கான மத்திய நிலையத்திற்கும் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது எனவும் தேர்தல் செயலக உயரதிகாரியொருவர் கூறினார். (சி)

## வவுனியா, ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வவுனியா, மன்னார் பகுதிகளில் இருந்து கொழும்பு மற்றும் தென் பகுதிகளுக்குச் செல்லும் லொறிகளும் இவ்வாறு மத வாச்சி ஊடாக நேரடியாகப் பயணம் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது. எனினும் இவற்றில் உள்ள பொருள்கள் இறக்கப்பட்டு சோதனையிடப் படுகின்றன எனவும், மாற்றி ஏற்றுகின்ற நடவடிக்கை நிறுத்தப் பட்டுள்ளது எனவும் வாகனச் சாரதிகள் தெரிவித்துள்ளனர்.

ஆயினும் பஸ்கள் மதவாச்சி சோதனைச்சாவடி ஊடாக நேரடியாகப் பயணம் செய்ய இன்னும் அனுமதிக்கப்படவில்லை என்று அதனுடன் தொடர் புடைய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (அ-சி)

## நீர்கொழும்பில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவீர் தெரிவித்தார்.

இவர்களில் வவுனியாவைச் சேர்ந்த 14 பேர், மன்னாரைச் சேர்ந்த 10 பேர், அம்பாறை பிரதேசத்தைச் சேர்ந்த 8 பேர் அடங்குகின்றனர் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறினார்.

இவ்வாறு சட்டவிரோதமான முறையில் வெளிநாடுகளுக்கு ஆள்களை அனுப்புபவர்களைக் கைதுசெய்ய விசேட பொலிஸ் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (சி)

## ஐ.தே.கட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைமையில் சபை கூடியபோது அவர் சபாநாயகரின் முன்னிலையில் சத்தியப்பிரமாணம்செய்துகொண்டார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சரத் ரணவக்க நோய்வாய்ப் பட்ட நிலையில் கடந்த இரண்டு வாரங்களுக்கு முன் காலஞ்சென்றமை குறிப்பிடத்தக்கது.

## தேர்தல்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனுமதி வழங்குவதில்லை என்ற அரசின் முடிவு குறித்து எல்லை களற்ற செய்தியாளர் அமைப்பு கடும் கண்டனத்தைத் தெரிவிக்கின்றது.

அனைத்து வெளிநாட்டவர்களுக்கும் பாதுகாப்புக் காரணங் களுக்காக அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு என்ற போதிய விளக்கமற்ற காரணத்தை முன் வைத்து அரசு இவ்வாறான தடையை விதிப்பது ஏற்றுக்கொள்ள மு டியாதது என எல்லைகளற்ற செய்தியாளர் அமைப்பு தெரிவிக்கின்றது.

மக்களின் அடிப்படை உரிமைகளை மீறும் விடயம் இதுவாகும்.

அரசின் இந்த நடவடிக்கைகள் வெளிப்படையான தேர்தல் குறித்த நம்பிக்கைகளைத் தகர்த்துள்ளன.

அரசு தொடர்ந்தும் ஊடக சுதந்திரத்தை மீறுகின்றது. பத்திரிகையாளர்கள் தொடர்ந்தும் தாக்கப்படுகின்றனர். உள்ளூர், வெளி நாட்டு செய்தித் தாள்கள் தணிக்கைக்கு உட்படுத்தப்படுகின்றன.

'உதயன்' போன்ற உள்ளூர் செய்தித்தாள்களுக்கு எதிராக மரண அச்சுறுத்தல் விடுக்கப்படுகின்றது. பத்திரிகையாளர்கள் தொடர்ந்தும் கொல்லப்படுகின்றனர்; காணாமற் போகின்றனர்.

எனினும், எவ்வித விசாரணைகளும் மேற்கொள்ளப்படவில்லை; வெற்றியளிக்கவில்லை. இவ்வாறான மோசமான சூழ்நிலையில் இலங்கைப் பத்திரிகையாளர்களால் தொடர்ந்தும் பணியாற்ற முடியாது.

ஓகஸ்ட் 8 ஆம் திகதி தேர்தல்கள் நடைபெறவுள்ள வவுனியாவும், யாழ்ப்பாணமும் தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளாகும். முன்னர் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த பகுதிகளுக்கு அருகில் உள்ள இடங்களாகும்.

பாதுகாப்பு அமைச்சின் அனுமதியின்றி எவரும் இந்தப் பகுதிகளுக்குச் செல்ல முடியாது.

இவ்விரு பகுதிகளுக்கும் செல்வதற்குப் பத்திரிகையாளர்களுக்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது எனத் தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையத்தின் செயலாளர் நாயகம் லக்ஷ்மன் குலுகல்ல தெரிவித்துள்ளார். அரசு தரும் செய்திகளையே ஊடகங்கள் பயன் படுத்த வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். இது முறையற்றது; தவறானது. - என எல்லைகளற்ற அமைப்பு தெரிவித்துள்ளது.

## தரம் 5...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜே.வி.பியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவே இந்தக் குற்றச்சாட்டை சபையில் முன்வைத்தார்.

இதற்குப் பதிலளித்த கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த கூறியவை வருமாறு:-

சில வேட்பாளர்கள் கல்வியை அரசிய லுக்குப் பயன்படுத்தி வருகின்றனர். இதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. மேற் படி விடயம் தொடர்பாக எனக்கு எதுவும் தெரியாது. தெரிந்திருந்தால் தடுத்திருப்பேன்.

இது மிகப்பெரும் தவறு. இதை நாம் கட்சி மட்டத்தில் கலந்தாலோசித்து இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுப் போம். - என்றார்.(சி)


**இப்போது விற்பனையில்**

**வரலாற்று இடவிளக்கப் படங்கள்**

தரம் 7 - O/L மாணவர்களுக்குரியது

யா/முன்னணிப் புத்தகசாலைகளில்

**2009 A/L விஞ்ஞான இறுதிக் கருத்தரங்கு**

CHEMISTRY காலை 8.30 மணி
BIOLOGY மாலை 1.30 மணி

கொழும்பின் பிரபல ஆசிரியர் வித்யா விசாகா வினாத்தாள்களுக்கு விடையளிக்கிறார்.

குறிப்பு : வாசகர்கள் இதுபற்றி மாணவர்களிடம் தெரிவிக்கவும். இன்று வெள்ளி 07 ஆம் திகதி Becon நெல்லியடியில் இடம்பெறும். நாளை சனி 8 ஆம் திகதி Science college கன்னாதிட்டியில் இடம்பெறும்.

பிரவேசம் 250/=

**கணக்கீடு**

A/L - 2010
புதிய பிரிவு ஆரம்பம் ஞாயிறு 12 மணி
'பிந்தி வந்து இணைந்த மாணவர்களுக்கானது'

A/L - 2010
சொத்து விற்பனை ஆரம்பம் ஞாயிறு 2 p.m.

S. தவா
B.com. (Hons)
(Acc.spl.)

NEW SCIENCE HALL
Jaffna.

**PHYSICS - K. Selvan**

| A/L 2010 | A/L 2011 |
|---|---|
| புலங்கள் | வட்ட இயக்கம், சுழற்சி இயக்கம் |
| [Sat, Sun, 4.30-5.30 P.m] ஆரம்பம் :- 09.08.2009 Sun 4.30 p.m. | [Mon, Wed 6.30-7.30 a.m] ஆரம்பம் :- 10.08.2009 Mon 6.30 a.m |

NAVALAR Anaipanthy,JAFFNA.

**T.E.C**

துறைசார் அனுபவம், நிபுணத்துவம்,பிரபல்யம், செயல்திறன் மிக்க ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவையில்..........

விடுமுறைக்காலத்தை பொன்போல் பெறுமதியாக்க

திங்கள் முதல் வெள்ளிவரை விசேட வகுப்புகள்

புதிய பிரிவுகள் ஆரம்பம் : 10.08.2009

2010 மீட்டல், Paper, 2011 புதிய பிரிவு

ஆரம்பம் : 08.08.2009 சனி காலை 8 மணி

| | |
|---|---|
| Tamil | : நாக. தமிழிந்திரன் |
| Logic | : சயந்தன் |
| Pol.Science | : பொன்.சந்துரு |
| Geography | : S.R.Bala |
| Drama | : மங்களேஸ் |
| Agriculture | : விக்கி |
| Christianity | : மல்லிகா |
| Economics | : பிரதாப் |
| Hi. Ci. | : N.T.தரன் |
| History | : ஜெயக்குமார் |
| English | : V.S.சூரி |
| Sinhala | : பேரா. லீலாகிருஷ்ணன் |

ARTS ACADEMY ஆசிரியர் குழாம்
தான்சன் நிலைய ஆசிரியர் குழாத்துடன் இணைந்த

**தான்சன் கல்வி நிலையம்**
101/10, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
(மக்கள் வங்கிக்கு அருகாமை)

**இறுதிப்பரீட்சையும் கருத்தரங்கும்**

2009 தரம் 5 இறுதி வெற்றித்தேர்வு 20

எதிர்பார்க்கப்படும் வினாக்களுடன் 16 பக்கத்தில்.

வெற்றித்தேர்வு பெறும் சகல பாடசாலைகளிலும். ஓகஸ்ட்-10 .காலை: 9.00 மணிக்கு பரீட்சை நடைபெறும். பாடசாலையில் பரீட்சை எழுதாத மாணவர்களுக்கு அதே தாளில்

நல்லூர் சயன்ஸ் அக்கடமியில் நடைபெறும்.காலை:9மணி

பரீட்சை எழுதவுள்ள மாணவர்கள் முன்னரே பதிவு செய்யவும்.

இலவச கருத்தரங்கு 15,16-8-2009.விபரம் பின்னர்

1முதல் 20 வெற்றித்தேர்வு வரை பரீட்சை எழுதிய மாணவர்கள் மட்டும் கருத்தரங்கில் கலந்து கொள்ள முடியும்.

இறுதிப்பரீட்சைமுடிவு வந்ததும்100பேருக்குபாராட்டுவிழா

சாதனை படையுங்கள் பதக்கத்தை வெல்லுங்கள்

மேலதிக விபரங்களுக்கு: 0212290l6, 0775388471, 0602217191, 0212263815

**பாடசாலை மாணவர்களுக்கான பயிற்சிநெறிகள் ஆரம்பம்**

- GIT (G.C.E A/L)
- ICT (Grade 10,11) English &Tamil medium
  Course Fees (Monthly 300/=)
  ஆசிரியர் :-திரு.சி.பிரணவன்
- Kids Programming (Year1-10)
- MSO, DTP, VISUAL BASIC
- Hardware
- Internet e-mail

Start on: 08,10.08.2009

Softview Computer College
55, Arasady Road,
Jaffna. T.P. 021 2225170





## மரண அறிவித்தல்கள்

### பரமு பசுபதி

(முன்னாள் ஊழியர், தென்மராட்சி மேற்கு ப.நோ.கூ. சங்கம்)

கைதடி தெற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பரமு பசுபதி 06.08.2009 வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக ஐவினைப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல் : ப.விஜயகுமாரன் (மகன்)
கைதடி தெற்கு. (C)

### வல்லிபுரம் பொன்னுத்துரை

உடுவிலைப் பிறப்பிடமாகவும் இல.2, சிவன் கோயில் வீதியை வதிவிடமாகவும் கொண்ட வல்லிபுரம் பொன்னுத்துரை காலமானார்.

அன்னார் பராசக்தியின் (கிளி) அன்புக் கணவர் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.08.2009) வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.2, சிவன் கோயில் வீதி,
திருநெல்வேலி. (B)
தகவல்: யோகரத்தினம் (மகன்).

## இதயம் கனிந்த நன்றி நவிலல்

| மண்ணில் | | மகிமையில் |
|---|---|---|
| 18 | | 28 |
| ★ |  | ★ |
| 02 | | 07 |
| ★ | | ★ |
| 1954 | | 2009 |

யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி இ.த.விக்னராசா அவர்களின் பாரியார் மேன்மைமிகு

### திருமதி கீதா ஜெராடீன் சாந்தகுமாரி விக்னராசா

(விரிவுரையாளர் - ஆங்கிலத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)

''கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இதுமுதல் பாக்கியவான்கள் என்றெழுது. அவர்கள் தங்கள் பிரயாசங்களை விட்டொழிந்து இளைப்பாறுவார்கள், அவர்களுடைய கிரியைகள் அவர்களோடே கூடப்போம்.'' வெளி.14:13

எமது குடும்ப எழிலரசி எம்மையெல்லாம் விட்டுப் பிரிந்து கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள் நித்திரையடைந்தவேளை நாம் துன்பத்தில் ஆழ்ந்திருந்த செய்தி கேட்டு எமது இல்லத்திற்கும், வெளிநாடுகளிலுள்ள எமது இரத்த உறவினர்களின் இல்லங்களுக்கும் சமுகம் கொடுத்து, ஆறுதல் கூறி துக்கத்தில் கலந்துகொண்டு அனுதாபம் தெரிவித்தோருக்கும் மற்றும் தொலைபேசி, தபால், தந்தி மூலமாகவும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், அன்னாரின் நல்லடக்க ஆராதனை, இறுதியாத்திரை முதலானவற்றில் அர்ப்பணிப்புடன் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்களுக்கும், மலர்வளையங்கள், மலர்ச்செண்டுகள் வைத்தும் விமான மூலம் அனுப்பியும் மரியாதை செய்தவர்களுக்கும், துண்டுப்பிரசுரம் மூலம் அஞ்சலி செலுத்தியோருக்கும், மறைந்த எமது குடும்பத் தலைவிக்கு நேரில் வந்தும், தொலைபேசி, தபால், தந்தி மூலம் அஞ்சலி செலுத்திய அனைத்து மதங்களையும் சேர்ந்த ஆன்மீகக் குருமார்கள், மாட்சிமை தங்கிய பிரதம நீதியரசர், ஏனைய நீதியரசர்கள், நீதிபதிகள், நீதிவான்கள் உட்பட சட்டத்தரணிகள், நீதிமன்ற உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்;

அத்துடன் சிறப்பாக ஆரம்பம் முதல் இறுதிவரை கலந்துகொண்ட மாண்புமிகு அமைச்சர் உயர்திரு.என். டக்ளஸ் தேவானந்தா அவர்கள் உட்பட ஏனைய மாண்புமிகு அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், யாழ்.அரச அதிபர், யாழ்.பல்கலைக்கழக வேந்தர், உபவேந்தர் உட்பட பல்கலைக்கழக சமூகத்தினர், கல்விமான்கள், அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் அதிகாரிகள், கானான் ஜெப ஆலய ஊழியர்கள், பாதுகாப்பு உயரதிகாரிகள், சிறைச்சாலை அதிகாரிகள், கல்லூரி அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், உற்றார், உறவினர் யாவருக்கும் எமது மனம் நெகிழ்ந்த நன்றிகள்.

மேலும், அன்னார் நோயுற்று யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைபெற்ற சமயங்களில் வைத்திய சேவை புரிந்த வைத்திய நிபுணர் நடராசா ஜெயக்குமரன் உட்பட ஏனைய வைத்திய நிபுணர்கள், வைத்திய கலாநிதிகள், ஆண் - பெண் தாதிமார்கள், ஊழியர்கள், கதிர்ச்சேவைப் பிரிவுத் தொழில்நுட்ப வியலாளர்கள், குறிப்பாக ''றேடியோ கிறபி'' பிரிவினருக்கும் எமது இதயங்கனிந்த நன்றிகள்.

தென் இந்திய திருச்சபையின் யாழ். ஆதீனத்தின் வட்டுக்கோட்டை பேராலயத்தில் நடைபெற்ற நல்லடக்க ஆராதனைக்கு அன்னாரின் இல்லத்திலிருந்து புறப்பட்ட இறுதி யாத்திரை, நல்லடக்க ஆராதனை என்பவற்றை சீரும் சிறப்புமாக நிறைவேற்ற பலவழிகளில் அர்ப்பணிப்புடன் பங்களிப்புச் செய்த தென் இந்திய திருச்சபை யாழ்.ஆதீன பேராயர் அதிவண. கலாநிதி டானியல் எஸ்.தியாகராசா அவர்கள் உட்பட குருமார்கள், கானான் சிறுவர் இல்லத்தினர், பொலிஸ், இராணுவ உயர் அதிகாரிகள் உட்பட பாதுகாப்புப்படை வீரர்கள், குடாநாட்டு நீதிமன்றங்களின் ஊழியர்கள், உறவினர், நண்பர்களுக்கும் எமது மனம் நிறைந்த நன்றிகள்.

மேல் நீதிமன்ற நீதிபதியின் இல்லம்,
இல.1, செட்டித்தெரு, நல்லூர், யாழ்ப்பாணம்.

கணவர், பிள்ளைகள், மருமகன், பேரன்.

''அவள் பிள்ளைகள் எழும்பி, அவளைப் பாக்கியவதி என்கிறார்கள், அவள் புருஷனும் அவளைப்பார்த்து: அநேகம் பெண்கள் குணசாலிகளாயிருந்ததுண்டு, நீயோ அவர்கள் எல்லாருக்கும் மேற்பட்டவள் என்று அவளைப் புகழுகிறான்.''
(நீதி.31:28,29)

(A)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் [illegible] வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07.08.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org